


## 1

'சென்ட்ரல் கமேண்ட் ஹெட்குவார்ட்டர்ஸ்' என்ற கொட்டை கொட்டையான பித்தளை எழுத்துக்களும், பிளாஸ்டர் ஆஃப் பாரிஸில் இந்திய தேசியக் கொடியும் சுவரில் கம்பீரமாய் அப்பியிருந்தது. துடைத்து வைத்த பழைய பீரங்கி முகப்பில் நிறுத்தப்பட்டிருந்தது. **'அந்நியர் யாரும் பிரவேசிக்கக்கூடாது'** என்று ஆங்கிலம் எச்சரித்தது. மொர்க்குரி விளக்குகள் அந்த முன் வாசலில் வெளிச்சத்தை வெள்ளமாய்க் கொட்டியிருக்க - உள்ளே நுழைபவர்களையும், வெளியே செல்பவர்களையும் மிலிட்டரி செக்யூரிட்டி ஆபீசர்கள் அடையாள அட்டையைச் சோதித்தும், துருவிக் கேள்விகள் கேட்டும் திணறடித்து விட்டு உள்ளே அனுமதித்தார்கள்.

அந்தக் கறுப்பு நிற அம்பாஸிடர் கார் விநாடியில் மிலிட்டரி குவார்ட்டர்ஸின் முகப்பைக் கடந்து - காம்பவுண்டைச் சுற்றி - பின் பக்கமாய்ப் போய் நின்றது.

பரபரப்பை நெற்றியில் அணிந்த முகங்களோடு உள்ளே இருந்து இறங்கினார்கள், விக்னேஷ்வர்த்தனும் நந்த கோபாலும்.

கனமான ஜெர்கின்களால் உடம்பை மூடியிருந்தார்கள். லோஹீல் ஷூ அவர்களின் ஆறடி உயரத்தை இன்னும் இரண்டு இஞ்ச் அதிகரித்துக் காட்டியது. காரின் கதவை அறைந்து சாத்திவிட்டு ஜன்னலில் குனிந்து தலையசைத்தார்கள்.

காருக்குள்ளிருந்து இந்தியில் கட்டைக் குரல் வந்தது.

''கவனம் விக்னேஷ்வர்த்தன்!''

''தெரியும்'' என்று கட்டை விரலை உயர்த்திக் காட்டினான் விக்னேஷ்வர்த்தன்.

கார் சைலன்சரில் வெண்புகையைத் துப்பிக் கொண்டே விருட்டென்று கிளம்பியது. பின்புறம் சிவப்பு விளக்குகள் இருட்டில் வெகு தூரம் சென்று கண்ணை விட்டுத் தேய்ந்து மறைந்தன. விக்னேஷ்வர்த்தனும் நந்தகோபாலும் அந்த மிலிட்டரி குவார்ட்டர்ஸின் காம்பவுண்ட் சுவரை

நெருங்கினார்கள்.

லெதர் பையைத் திறந்து சுருட்டி வைக்கப்பட்ட கயிறை வெளியே எடுத்தான் நந்தகோபால். அதன் ஒரு முனையில் இரும்புக் கொக்கியைப் பொருத்தினான். பிறகு விக்னேஷ் வர்த்தனைத் திரும்பிப் பார்த்தான். கிசுகிசுத்தான்.

"விக்னேஷ்..!"

"சொல்லு..."

"குவார்ட்டர்சின் பின்பக்கம்தான் குதிக்கப் போறோம். இது யாரும் அதிகம் புழங்காத பகுதி. துரதிஷ்டவசமா யாராவது நம்மைப் பாத்துட்டா... தயங்காம சுட்டுத் தள்ளிரணும்..."

தோல் உறைக்குள் உறங்கிக் கொண்டிருந்த மாக்னம் ரிவால்வரைத் தடவிக் கொண்டே - தலையசைத்தான் விக்னேஷ்வர்த்தன். "ம்..."

மதில் சுவரின் உச்சியைக் குறிபார்த்து கொக்கியைச் சுழற்றி - இருட்டில் விருட்டென்று வீசினான்.

"ணங்..."

ஒரு சின்ன உலோக சப்தத்துடன் கொக்கி சுவர் உச்சியில் சிக்கிக் கொண்டது. நந்தகோபால் விசை கொடுத்து இழுத்துப் பார்த்தான். பிறகு கயிறைப் பற்றிக் கொண்டு ஊசலாட்டமாய் மேலேற ஆரம்பித்தான்.

மதில் உச்சியை அடைந்ததும் மின்னல் வேகத்தில் உள்ளே குதித்தான்.

"த்தட்...."

ராத்திரி நிசப்தப் பின்னணியில் பூட்ஸ் சத்தம் மெதுவான ட்ரம்ஸ் ஒத்தடம் மாதிரி கேட்டது. தொடர்ந்து விக்னேஷ் வர்த்தன் கயிறைப் பற்றி ஏற ஆரம்பித்தான். மதிலைக் கடப்பதற்கு முன் நிதானமாய்க் கயிறைச் சுருட்டி மீண்டும் தோல் பையில் அடைத்துக் கொண்டு - இன்னொரு 'த்தட்' சத்தத்துடன் கீழே குதித்தான்.

முட்புதரில் உடைகள் உரசி சரசரவென்று சப்தம் உற்பத்தியானது. வெகு தூரத்தில் இருட்டுக்குள் குவார்ட்டர்ஸ் கட்டிடங்கள் மசமசப்பாகக் கண்ணில் பட்டது. அதை நோக்கி மெதுவாய் அவர்கள் அடியெடுத்த போது -



பதுங்கினார்கள். சற்று தொலைவில் கறுப்பாய் அசைந்து அந்த உருவம் அவர்கள் இருந்த இடத்தை நோக்கி வந்து கொண்டிருந்தது. நெருங்க நெருங்க அதன் வேகம் அதிகரித்தது.

தூரத்து மெல்லிய வெளிச்சத்தில் அவன் சீஸா பச்சையில் மிலிட்டரி யூனிஃபார்ம் அணிந்திருப்பது தெரிந்தது. கெண்டைக்கால் வரை மூடியிருந்த பூட்ஸ் உறுதியாக அடியெடுத்து வைத்தன. தோளில் மாட்டியிருந்த துப்பாக்கி மாரில் புரண்டது. இடுப்பில் சொருகி வைத்து இருந்த இரண்டடி நீள டார்ச் லைட்டை விசுக்கென்று எடுத்து அதன் வயிற்றிலிருந்த சுவிட்சை அமுக்கி உயிரூட்டினான்.

மஞ்சள் வெளிச்சம் கொத்தாக அவனுக்கு முன்னால் விழுந்தது.

விக்னேஷ்வர்த்தனும், நந்தகோபாலும் புதர் மறைவில் நன்றாக ஒடுங்கிக் கொண்டார்கள். அவன் டார்ச் வெளிச்சத்தை அந்தப் பிராந்தியம் முழுக்க சுழற்றியடித்தான். அவன் கண்களில் தீவிரமான தேடல்.

குதித்த சப்தம் அவனுக்குக் கேட்டிருக்க வேண்டும் என்று நினைத்தான் விக்னேஷ்வர்த்தன்.

யோசித்துக் கொண்டிருக்கும்போது-

அந்த துரதிர்ஷ்ட விநாடியில் டார்ச் வெளிச்சம் சரியாய் அவர்கள் பதுங்கியிருந்த புதர் மேலேயே குவிந்து விழுந்தது.

"கோன் ஹை...?"

அவன் உறுமினான்.

இனி பதுங்குவதில் அர்த்தமில்லை.

விக்னேஷ்வர்த்தனும், நந்தகோபாலும் விருட்டென்று நிமிர்ந்தார்கள். அந்த மிலிட்டரி செக்யூரிட்டிக்கு யோசிக்க அவகாசம் தராமல் விரைவாக ரிவால்வரை வெளிப்படுத்த - அவன் டார்ச் லைட்டிலிருந்து துப்பாக்கிக்கு மாறுவதற்குள்-

"ட்யுப்..."

"ட்யுப்..."

இரண்டு தோட்டாக்கள் இவர்களிடமிருந்து சீறியது. நெஞ்சில் ரத்தம் பொத்துக் கொள்ள சுருண்டு

தப்...

தப்...

தூரத்திலிருந்து நிறைய உருவங்கள் ஓடி வருவது தெரிந்தது.

நந்தகோபாலும், விக்னேஷ்வர்த்தனும் குவார்ட்டர்ஸ் இருந்த திசையில் மூச்சிறைக்க ஓட ஆரம்பித்தார்கள்.

## 2

துப்பாக்கிகளோடும், டார்ச் லைட்டுகளோடும் தபதபவென ஓடி வந்த - ட்யூட்டியிலிருந்த கார்ப்பொரல்கள் அந்த இடத்துக்கு வந்ததும் - அதிர்ந்து நின்றார்கள். மார்பில் துப்பாக்கிக் குண்டு பாய்ந்து ரத்தமாய் கிடந்த அந்த இராணுவ சிப்பாயை திடுக்கிடலோடு சூழ்ந்து நின்றார்கள்.

ஒருவன் குனிந்து குப்புறக் கிடந்த அந்த சிப்பாயின் முகத்தைத் திருப்பினான்.

அடையாளம் தெரிந்து துடித்தார்கள்.

''ஓம்பிரகாஷ்!''

''எந்த ராஸ்கல் இந்தக் காரியத்தைச் செய்தது?''

''லெப்டினண்டுக்குத் தகவல் அனுப்பு...''

அவர்கள் சொல்லிக் கொண்டிருந்தபோதே அந்த இடத்தை நோக்கி ஒரு இராணுவ ஜீப் புயல் வேகத்தில் வந்தது. 'கிறீச்'செண பிரேக்கிட்டு நின்றது.

ஜீப்புக்குள்ளிருந்து லெப்டினன்ட் ராஜப்பா பரபரப்புடன் இறங்கினார். நெஞ்சில் மெடல்கள் அசைந்தன. தலையில் நாற்பது சதவிகிதம் நரைத்திருந்தார். சூழ்ந்திருந்த செக்யூரிட்டி ஃபோர்ஸை நோக்கி கத்தினார்.

''ஹரியப்! சுட்டவர்கள் லிவிங் இன் பேச்சிலர்ஸ் குவார்ட்டர்ஸ் நோக்கி தப்பியோடியிருக்கிறார்கள். ஹோல்ட் தெம்!''

செக்யூரிட்டி ஸெல்லுக்கு தகவல் போய் - ராணுவ வீரர் பேச்சிலர்ஸ் குவார்ட்டர்சை நாலாபுறமும் சூழ்ந்தார்கள். ட்யூட்டியிலிருந்த ராணுவ வீரர்களும் விநாடிகளில் குவிந்து மனிதச் சங்கிலி மாதிரி அந்தப் பகுதியைச் சுற்றி வளைத்தார்கள்.

இன்னொரு கோஷ்டி உள்ளே புகுந்து அவர்களைத் தேட ஆரம்பித்தது.



களேபர சப்தம் கேட்டு குவார்ட்டர்ஸ்களில் விளக்குகள் பட்பட்டென்று கண் விழிக்கத் துவங்கின. ஓய்விலிருந்த ராணுவ வீரர்கள் சட்டையை மாட்டிக் கொண்டு வெளியே வந்தார்கள்.

''என்ன பிரச்னை?''

''ஓம்பிரகாஷை யாரோ இரண்டு அந்நியர்கள் சுட்டு விட்டார்கள்.''

''சுட்டு விட்டார்களா...? எப்படி...?''

''மதில் சுவரைக் கடந்து இரண்டு பேர் இந்த ராணுவக் கேந்திரத்துக்குள் ஊடுருவியிருக்கிறார்கள். ரோந்து வரும் போது ஓம்பிரகாஷ் அவர்களைப் பார்த்துவிட்டான். வயர்லஸ்ஸில் லெப்டினண்ட்டுக்கு தகவல் கொடுத்துவிட்டு அவர்களை மடக்கிப் பிடிப்பதற்குள்... அந்த ஆசாமிகள் ஓம்பிரகாஷை சுட்டுத்தள்ளிவிட்டார்கள். அந்த ஆசாமிகள் பேச்சிலர்ஸ் குவார்ட்டர்ஸ் இருந்த திசையில் ஊடுருவிப் போனதாக ஓம்பிரகாஷ் சாவதற்கு முன் வயர்லஸ்ஸில் தெரிவித்திருக்கிறான்.''

''ராணுவக் கேந்திரத்துக்குள் அத்துமீறி நுழைந்து ஒரு வீரனை சுட்டுக் கொல்வதென்றால் எத்தனை துணிச்சல் வேண்டும்? அவர்களை இந்நேரம் பிடித்து வெட்டியிருக்க வேண்டாமா...?''

''குவார்ட்டர்சைச் சுற்றி வளைத்தாகி விட்டது. எல்லோரையும் அலர்ட் செய்து விட்டோம். இங்கிருந்து சின்ன துரும்புகூட வெளியே போக முடியாது... இன்னும் சில நிமிஷத் தேடலில் அவர்களைத் பிடித்துவிட முடியும்.''

பூட்ஸ் கால்கள் தபதபவென்று சப்திக்க - குவார்ட்டர்ஸின் ஒவ்வொரு மில்லி மீட்டரையும் புரட்டிப் போட்டார்கள்.

சாத்தியிருந்த குவார்ட்டர்ஸ் கதவுகளைத் தட்டி அங்கே இருப்பவர்களை எழுப்பி சோதனை செய்தார்கள்.

அரை மணி நேர தேடலுக்குப் பின்-

அந்த மத்திய குவார்ட்டர்ஸ் கதவைத் தட்டியதும் - தூக்கக் கலக்கக் கண்களோடும், வெற்று மார்போடும், லுங்கியை இழுத்துக் கட்டிக் கொண்டே கதவைத் திறந்து கேள்விக் குறிப் பார்வையுடன் நின்றார்கள்.

விக்னேஷ்வர்த்தனும்-

நந்தகோபாலும்!

''என்ன ஆச்சு..?''

''ஓம்பிரகாஷை யாரோ சுட்டுட்டாங்க. குவார்ட்டர்ஸ் பூராவும் அல்லோலகல்லோலப்பட்டுட்டிருக்கு! நல்ல தூக்கமா விக்னேஷ்வர்த்தன்..?''

கேட்டுக் கொண்டே - ட்யூட்டியிலிருந்த ராணுவ வீரர்கள் அந்தக் குவார்ட்டர்ஸின் ஒவ்வொரு அறையையும் எக்ஸ்ரே கண்களால் மேய்ந்து விட்டு - வெளியே வந்தார்கள்.

''அந்த அந்நியர்கள் இந்தப் பகுதிக்குள்தான் தப்பி வந்துள்ளார்கள். சந்தேகத்துக்கிடமாக யாரையாவது பார்த்தால் பிடித்து லெப்டினன்ட்டிடம் ஒப்படையுங்கள்.''

''ஆகட்டும்.''

தலையசைத்தார்கள் விக்னேஷ்வர்த்தனும், நந்தகோபாலும்.

அந்த ராணுவ வீரர்கள் அடுத்த குவார்ட்டர்சை நோக்கிச் சென்றார்கள்.

விக்னேஷ்வர்த்தனும், நந்தகோபாலும் நிம்மதிப் பெருமூச்சோடும் புன்னகையோடு ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டார்கள்.

## 3

'டெல்லி போலீஸ்' என்று சிவப்பு எழுத்துக்களை உடம்பில் அப்பிக் கொண்டு அந்த மாருதி ஜிப்ஸி லெப்டினன்ட் அலுவலகத்துக்கு எதிர்ப்புற மைதானத்தில் வந்து நின்றது. ஜீப்பிலிருந்து நெடுநெடுவென்று உயரமாய் வளர்ந்திருந்த அந்த இன்ஸ்பெக்டர் இறங்கினார். கையிலிருந்த தொப்பியைத் தலைக்குக் கொடுத்துக் கொண்டே - அலுவலகக் கட்டிடத்தின் வராந்தாவை நோக்கி நடந்தார்.

தொலைதூரத்தில் கோரஸான ஷூ சப்தத்தோடு பெரேடு நடந்து கொண்டிருந்தது. ஒரு மிலிட்டரி வார்டன் ஆபீசர் உரக்க உரக்க ஹிந்தியில் கத்திக் கொண்டிருந்தார். மிலிட்டரி பச்சை யூனிஃபார்ம்களோடு ராணுவ ஆசாமிகள் குறுக்கும் நெடுக்கும் போய்க் கொண்டிருந்தார்கள்.



இன்ஸ்பெக்டர் வராந்தா படிகளேறினார்.

லெப்டினன்ட் அலுவலகத்தில் நுழைய - ராஜப்பா அவரை வரவேற்று உட்கார இருக்கையைக் காட்டினார்.

''வாங்க இன்ஸ்பெக்டர்...''

இன்ஸ்பெக்டர் உட்கார்ந்த பின் - ராஜப்பா கேட்டார்.

''போஸ்ட்மார்ட்டம் முடிஞ்சதா...?''

இன்ஸ்பெக்டர் தலையசைத்துக் கொண்டே, அந்த பழுப்பு நிறக் கவரை நீட்டினார்.

''முடிஞ்சது..! ரிப்போர்ட்...''

ராஜப்பா அந்தக் கவரின் வாயை உடைத்தார். உள்ளே இருந்த அந்த மடிக்கப்பட்ட தாளை விரித்தார். பொதுவான படிவம் அச்சடிக்கப்பட்டிருக்க அவற்றுக்கு நேரே விபரங்கள் டாக்டரின் கிறுக்கல் கையெழுத்தில் ஓடி இருந்தது.

அந்த விபரங்களின் மேல் கண்களை ஓட விட்டார் ராஜப்பா. முழுசாய்ப் படித்து முடித்து விட்டு நிமிர்ந்தார்.

''ரெண்டு துப்பாக்கித் தோட்டா அந்த ஓம்பிரகாஷின் உடம்பில் பதிஞ்சிருந்ததா ரிப்போர்ட் சொல்லுது.''

''ஆமா... சிக்ஸ்மென் எம்.எம். ஹெவி மாக்னம் வகை துப்பாக்கியில் உபயோகிக்கும் தோட்டாக்கள்.''

''இந்தத் துப்பாக்கிகள் இந்தியாவில் அதிகம் புழக்கத்தில் இல்லாதவைன்னு நினைக்கறேன்.''

''யூவார் கரெக்ட் ஸார்! இந்த மாதிரி துப்பாக்கிகளை கண்டாவிலிருந்து பாகிஸ்தான் பெருமளவில் இறக்குமதி செய்திருப்பதாகத் தகவல் இருக்கு.''

''யு மீன்..?''

''எஸ்! இந்தக் கொலைகளுக்குப் பின்னணியில் பாகிஸ்தானின் பங்கு இருக்கு!''

''மை குட்னஸ்! இது சம்பந்தமா மேற்கொண்டு தகவல்கள் சேகரிக்க முடிஞ்சதா..?''

''போலீஸ் விங்கைத் தீவிரமா விசாரணையில் முடுக்கி விட்டதில் ஏராளமான தகவல்கள் கிடைச்சிருக்கு.''

''என்ன தகவல்கள்?''

''கடந்த ரெண்டு மாதத்தில் சிறு சிறு குழுக்களாக பாகிஸ்தான் தீவிரவாதிகள் ஏராளமா இந்தியாவுக்குள்

ஊடுருவியிருக்காங்க. அவங்க எல்லோருமே டெல்லியில்தான் குழுமியிருக்காங்க. பெரிய பெரிய சதித் திட்டங்களோடதான் அவங்க இங்க வந்து இறங்கியிருக்காங்க..."

"அவங்களை மடக்கிப் பிடிக்க ஏற்பாடு செஞ்சிருக்கா?"

"தீவிரமாத் தேடிட்டிருக்கோம். அந்தத் தீவிர வாதிகள் எங்கே பதுங்கியிருக்காங்கன்னு இதுவரைக்கும் கண்டு பிடிக்க முடியலை."

"மிலிட்டரி காம்பஸ¬க்குள் அவங்க எந்த நோக்கத்தோட புகுந்தாங்கன்னு உங்களால யூகிக்க முடியாதா இன்ஸ்பெக்டர்..?"

"அதை என்னால யூகம் செய்ய முடியலை. ஏதோ சதித்திட்டம் இருக்குன்னுதான் இப்போதைக்கு சொல்ல முடியும். ராத்திரி நடந்த சம்பவத்தை யோசிச்சுப் பார்க்கையில் எனக்குள்ளே நெருடல் இருக்கு ஸார்..."

"என்ன நெருடல்?"

"ரெண்டு பேர் மிலிட்டரி காம்பஸின் பின்பக்கமா சட்ட விரோதமா உள்ளே நுழைஞ்சவங்களை ரோந்து வர்ற ஒரு கார்ப்பொரல் பார்த்துட்டார். அவர் அவங்களை மடக்கறதுக்குள்ளே... உள்ளே நுழைஞ்சு அவரைத் துப்பாக்கியால் தீர்த்துக் கட்டிட்டாங்க."

"எக்ஸாக்ட்லி."

"அவரை சுட்ட ஆசாமிங்க பேச்சிலர்ஸ் குவார்ட்டர்ஸ் பக்கமா நழுவிப் போனதாக சாகறதுக்கு முந்தி அவர் வயர்லஸ்ல சொல்லியிருக்கார்... அப்படித்தானே?"

"ஆமா..."

"உடனே ட்யூட்டியில் இருந்த எல்லோரையும் அலர்ட் பண்ணி சில நிமிஷங்களுக்குள்ளாகவே அந்த க்வார்ட்டர்சை நீங்க எல்லாருமா ரவுண்ட் - அப் பண்ணிட்டீங்க. அப்படியிருக்க அந்த ஆசாமிகள் தப்பிச்சுப் போக வாய்ப்பு ரொம்பவும் கம்மிதானே..?"

"நீங்க என்ன சொல்ல வர்றீங்க?"

"ஆயுதம் தாங்கிய மிலிட்டரி காம்பஸ் மொத்தமும் விழித்துக் கொண்ட பிறகும் ரெண்டு அந்நியர்கள் இங்கிருந்து தப்பிச்சுப் போறது அத்தனை சுலபமான விஷயமில்லை."

"ஆனா அந்த ஆட்கள் பிடிபடலையே... காம்பஸ் மொத்தத்தையும் சல்லடையாத் துளைச்செடுத்துட்டோம்..."



"அதுதான் என்னுடைய நெருடலுக்குக் காரணம்! அந்த ஆட்கள் உள்ளே இருந்து செயல்படும் ஐந்தாம்படையாய் இருக்குமோ..?"

ராஜப்பா சட்டென்று நிமிர்ந்தார்.

"நான் இந்தக் கோணத்தில் யோசிக்கவில்லை. ஆனா ஒரு சந்தேகம். உள்ளே இருக்கிற ஆட்கள் எதுக்காக திருட்டுத்தனமா மதில சுவரைக் கடந்து வரணும்? அடையாள அட்டையைக் காட்டி மெயின் என்ட்ரன்ஸ் வழியாகவே அவங்க வந்திருக்கலாமே...?"

"மெயின்கேட் ரிஜிஸ்தரில் அடிக்கடி அவங்க பேர் என்ட்ரி ஆகறதை விரும்பாமல் இருந்திருக்கலாம். இது ஒரு யூகம்தான்."

"உங்க யூகம் ஓரளவு சரி. நீங்க சொல்ற காரணம் ஏத்துக்கக் கூடியதாகத்தான் இருக்கு. ஸோ... இந்தக் கோணத்தில் பார்க்கும்போது... மிலிட்டரி காம்பஸ்க்குள்ளேயே இருக்கும் ஆட்களில் சந்தேகத்துக்கிடமான நபர்களின் பட்டியல் ஒண்ணு தயார் செய்யணும்."

"எஸ்..."

"அந்த சந்தேகத்துக்குரிய நபர்கள் மேல 'க்ளோஸ் வாட்ச் - அப்'புக்கு ஏற்பாடு செய்யணும்."

"எஸ். அவங்களைக் கையும் களவுமாய் பிடிச்சுட்டா மத்ததெல்லாம் சுலபம்."

"அப்படி உள்ளே இருந்து கொண்டு யாராவது சதி செய்யறாங்கன்னா... அவங்களை இன்னும் ஒரு வாரத்துக்குள்ளே மடக்கறேன்."

சொன்ன லெப்டினன்ட்டின் குரலில் வேகமும், உறுதியும் இருந்தது.




**சாந்தினி** சவுக் அந்த சாயந்திர நேர ஐந்தரை மணிக்கு பலமான ட்ராபிக்ஸில் விழி பிதுங்கிக் கொண்டிருந்தது. இருட்டு மெல்லிய கறுப்பு மஸ்லின் துணி மாதிரி சற்றுப் புறத்தைப் போர்த்த ஆரம்பித்திருந்தது. மெர்க்குரி

விளக்குகள் தெருவோர நிலாக்களாக பனிப் புகைக்கிடையே உதயம் ஆகி இருந்தன. சாலையோரப் புல்வெளிகளில் சிலர் இரண்டு கைகளையும் சிலாக்ஸாக ஊன்றி உட்கார்ந்திருக்க... சிலர் மல்லாந்து படுத்து வானத்தை வெறித்துக் கொண்டிருந்தார்கள்... இன்னும் சிலர் காதலிக்கு விரல்கள் பத்துதானா என்று திரும்பத் திரும்ப ஓயாமல் எண்ணிக் கொண்டிருந்தார்கள்.

நியான் விளக்கு சைன் போர்டுகளை நெற்றியில் தீற்றிக் கொண்டிருந்த ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் வரிசைக்கிடையே ஒரு கார்மெண்ட் ஷோரூமுக்கு அருகே இருந்தார்கள் விக்னேஷ்வர்த்தனும், நந்தகோபாலும். ஹேங்கர்களில் நீளமாய் வரிசை வகுத்திருந்த ஜீன்ஸ் பேண்ட்களை சிரத்தையில்லாமல் அளந்து கொண்டே நந்தகோபால் சொன்னான்.

''இனிமே நாம ரொம்ப ஜாக்கிரதையா இருக்கணும் விக்னேஷ். என்னா... உள்ளேயே இருக்கற ஆட்கள் மேலும்... சந்தேகப் பார்வை விழ ஆரம்பிச்சிடுச்சி.''

''ஆமா... இன்னிக்கு குவார்ட்டர்ஸ் காம்பஸை விட்டு வெளியே வாறதுக்குள்ளேயே விழி பிதுங்கிடுச்சே...! பர்ச்சேஸா...? என்ன பர்ச்சேஸ்...? எதுக்குப் பர்ச்சேஸ்? ன்னு செக்யூரிட்டில துளைச்செடுத்துட்டானே..!''

''நேத்து... நாம காம்பவுண்டைக் கடக்கறப்போ ஓம்பிரகாஷ் வந்துட்டது நம்ம துரதிர்ஷ்டம்தான்...''

''நோ நந்தகோபால்..! அது ஓம்பிரகாஷின் துரதிர்ஷ்டம்'' என்று சொல்லிக் கொண்டே - மணிக்கட்டை உயர்த்தி வாட்சைப் பார்த்தான்.

''மணி எத்தனை?''

''அஞ்சு நாப்பது...''

''அவங்க அஞ்சரை மணிக்கெல்லாம் வந்து பிக் - அப் பண்ணிக்கிறதா சொன்னாங்களே...''

''வந்துருவாங்க.''

''இந்த கார்மெண்ட் ஷோரூமில்தானே காத்திருக்கச் சொன்னாங்க?''

''ஆமா...''

அவர்கள் சொல்லிக் கொண்டிருந்தபோது - அந்த சர்தார்ஜி அவர்களை நெருங்கினான். சற்றே தணிந்த குரலில், ''ஜெய் பாக்!'' என்றான்.

விக்னேஷ்வர்த்தன் பதிலுக்கு ''ஜெய் பாக்!'' என்று



சொல்ல - சர்தார்ஜி தாடிக்குள் புன்னகைத்து. ''விக்னேஷ்வர்த்தன் - நந்தகோபால்...?''

''எஸ்!''

''டாக்சி காத்திருக்கிறது. நாம் போகலாம்'' - சுத்தமான ஹிந்தியில் பேசினான்.

சுழல் படிகளில் தடதடத்து அந்த சர்தார்ஜியின் பின்னால் சென்றார்கள் இருவரும். காம்ப்ளக்ஸ் வராந்தாவின் முனையில் அந்த டாக்சி நின்றிருந்தது. சர்தார்ஜி டிரைவிங் இருக்கையை ஆக்ரமிக்க - நந்தகோபாலும், விக்னேஷ்வர்த்தனும் பின்சீட்டை நிரப்பினார்கள்.

ஜன்னல்களில் குளிர்காற்று ஊடுருவ - இருபது நிமிஷங்கள் பயணித்தார்கள். பழைய டெல்லியின் கசகசப்புக்கிடையே ஆரவாரமில்லாமல் நின்றிருந்த அந்தக் குட்டி லாட்ஜின் பின்பக்கக் கதவு வழியாக பிரவேசமானது டாக்ஸி. அருகாமை மசூதி ஒன்றில் தொழுகை சப்தம் உரக்கக் கேட்டது.

லாட்ஜின் இருபத்திநாலாம் அறைக்குள் நுழைய - கறுப்பு உடையணிந்த ஐம்பது வயது ஷஃபீக் அஹமத் கம்பீரமாய் உட்கார்ந்திருந்தார். அவருக்குப் பாதுகாவலர்கள் மாதிரி இரண்டு பேர் ஏ.கே. 47 துப்பாக்கிகளோடு அருகில் நின்றிருந்தார்கள். பழைய மோஸ்தரில் இருந்த குட்டி வயர்லஸ் கருவி ஒன்று கரகரத்த குரலை இரைச்சலுக்கிடையே இறக்குமதி பண்ணிக் கொண்டிருந்தது.

விக்னேஷ்வர்த்தனும், நந்தகோபாலும் அவருக்கு எதிரே பவ்யமாய் குனிந்து வணங்கினார்கள்.

''உட்காருங்கள்.''

அந்த இருக்கைகளில் அமர்ந்தார்கள் நந்தகோபாலும், விக்னேஷ் வர்த்தனும்.

ஷஃபீக் அஹமத் கனமான குரலில் கேட்டார்.

''மிலிட்டரி காம்பஸ் நிலவரம் என்ன?''

''நிலைமை கொஞ்சம் மோசம்தான்...''

''கேள்விப்பட்டேன்.''

''இத்தனை நாள் யாருடைய சந்தேகத்துக்கும் இலக்காகாமல் உங்களை வந்து சந்தித்துப் போக முடிந்தது. இனிமேல் அப்படி வருவதற்கான சாத்தியக் கூறுகள் குறைவு. காம்பஸில் கெடுபிடிகள் அதிகமாகி விட்டன. நின்றால் குற்றம். நடந்தால் குற்றம்.''

ஷஃபீக் அஹமத் உன்னிப்பாய் அவர்கள்

பேசுவதைக் கேட்டு - மெதுவாகச் சொன்னார்.

''இனிமேல் என்னை நீங்கள் ஒரு சில மாதங்களுக்கு சந்திக்க வேண்டியதில்லை.''

விக்னேஸ்வர்த்தன் கேட்டான்.

''எங்களிடம் ஒரு முக்கியமான அதிரடி ஆபரேஷனை அளிக்கப் போவதாகச் சொன்னீர்கள்.''

ஷஃபீக் அஹமத் தலையசைத்தார்.

''ஆமாம். சொன்னேன். அதைத்தான் இப்போது உங்களிடம் ஒப்படைக்கப் போகிறேன்...''

சொன்னவர் - அங்கிருந்த இண்டர்காமை இயக்கினார். யாரிடமோ உருதுவில் பேசினார். அவருடைய பேச்சில், பாவனையில் பாகிஸ்தான் தனம் பிசகாமல் இருந்தது. பேசி முடித்து ரிசீவரைச் சாத்தினார்.

கொஞ்ச நேரத்தில் ஒரு ஆசாமி கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தான்.

ஒரு சின்ன பிளாஸ்டிக் பெட்டியை - ஷஃபீக் அஹமதின் முன்னால் வைத்துவிட்டு நகர்ந்து நின்றான்.

''நீ போகலாம்...''

ஷஃபீக் அஹமத் தலையசைக்க - அவன் வெளியேறிச் சென்றான்.

ஷஃபீக் அஹமத் அந்த பிளாஸ்டிக் பெட்டியைப் பிரித்துக் கொண்டே - அவர்கள் செய்ய வேண்டிய காரியத்தைச் சொல்ல ஆரம்பித்தார். ஐந்து நிமிஷத்தில் சொல்லி முடித்தார்.

இருவரும் திகிலடைந்த முகங்களோடு அவரைப் பார்த்தார்கள்.

ஷஃபீக் அஹமத் புன்னகைத்தார்.

''என்ன இரண்டு பேரும் உறைந்து போய் விட்டீர்கள்?''

''உங்க திட்டம் இவ்வளவு பயங்கரமானதாக இருக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. ஆயிரக்கணக்கில் ராணுவ வீரரர்கள் பலியாகி விடுவார்கள்.''

''பச்சாதாபப்பட்டால் எங்கள் லட்சியம் நிறைவேறாது. இந்திய ராணுவத்தை தூள் தூளாகச் சிதறடிக்கறதுதான் எங்களோட நோக்கம். அதன் முதல் கட்டம்தான் இது. இது மாதிரி நிறைய அதிரடி நடவடிக்கைகள் வைத்திருக்கிறோம். முதலில்



டெல்லி... தொடர்ந்து கல்கத்தா... புனே... லக்னோ... எல்லா இடங்களிலும் கைவரிசையைக் காட்டப் போறோம்... உங்களை மாதிரி எங்களுக்கு விசுவாசமான ராணுவ வீரர்களை ஒவ்வொரு ராணுவ கேந்திரத்திலும் பொறுக்கி வைத்திருக்கிறோம். இந்த சுலபமான காரியத்துக்காக உங்களுக்குக் கிடைக்கப் போவது எக்கச்சக்க பணம். அத்தனையும் இந்தியன் கரன்சி. காரியத்தை முடித்ததும் ஹாட் கேஷாக வாங்கிக் கொள்ளலாம்.''

விக்னேஷ்வர்த்தன், நந்தகோபால் இருவர் முகங்களிலும் திகில் விலகி சந்தோஷம் குடியேறியது.

''கவலைப்படாதீர்கள். இன்றைக்கு ராத்திரியே இந்தக் காரியம் நிறைவேற்றப்படும். இந்த ஆபரேஷனுக்குக் குறைந்தது ரெண்டாயிரம் ராணுவ வீரர்களாவது பலியாவார்கள்.''

அவர்கள் சொல்ல-

ஷஃபீக் அஹமதின் கண்கள் உற்சாகத்தில் பளபளத்தது.

## 5

**ரா**த்திரி பன்னிரண்டரை மணிக்கு குவார்ட்டர்சை விட்டு பின்பக்க கதவு வழியாக வெளியே வந்தார்கள் - விக்னேஷ்வர்த்தனும், நந்தகோபாலும். கனமான கறுப்பு உடைகளில் - இருட்டுக்கும், அவர்களுக்கும் வித்தியாசம் தெரியாத் தனமாய் சுற்றும் முற்றும் பார்த்தபடி நடந்தார்கள்.

நந்தகோபால் தன் இடுப்பிலிருந்த அந்த பிளாஸ்டிக் பெட்டியை ஒருதரம் தொட்டுப் பார்த்துக் கொண்டான். ஆங்காங்கே மிலிட்டரி காம்பஸுக்குள் சோகையாய் மஞ்சள் விளக்குகள் எரிந்து கொண்டிருக்க - அடர்த்தியான மர இருட்டு நிழல்களில் பதுங்கி மிலிட்டரி காம்பஸின் தெற்குப் பக்கமாய் முன்னேறிச் சென்றார்கள்.

விக்னேஷ்வர்த்தன் நந்தகோபாலிடம் கிசுகிசுத்தான்.

''அன்னிக்கு நாம ஓம்பிரகாஷ் வந்ததைக் கவனிக்காம விட்டுட்டோம். இன்னிக்கு அந்த மாதிரி

அலட்சியமா இருக்கக்கூடாது.''

நந்தகோபால் தலையாட்டினான்.

''இன்னிக்கு ஒரே ஒரு நாள் மட்டும் ஜாக்கிரதையா இருந்துகிட்டோம்ன்னா போதும்...! இவ்வளவு நாளா நாம எடுத்துக்கிட்ட ரிஸ்க்குக்கும் பலன் கிடைச்சிரும்.''

''பேச்சு வேண்டாம்; செயல்!''

சொல்லிக் கொண்டே விக்னேஷ்வர்த்தன் அந்த மரத்தை விட்டு விலகிப் போனபோது - ''ஷ்!'' என்று எச்சரித்து நந்தகோபால் அவனை மறைவில் இழுத்தான்.

''அங்க பாரு...''

கிசுகிசுத்தான்.

துப்பாக்கியுடன் ஒரு செக்யூரிட்டி மெதுவாய் நடந்து வந்து கொண்டிருந்தான். காற்று மரத்து இலைகளை சரசரக்க வைத்துக் கொண்டிருந்தது. சில்வண்டுகள் சுருதி பிசகாமல் ரீங்காரம் எழுப்பிக் கொண்டிருந்தன.

'டக்...'

'டக்...'

'டக்...'

அந்த ரோந்து வரும் ராணுவ வீரனின் காலடிச் சத்தம். இவற்றைக் கடந்து விட்டால் அந்தப் பிராந்தியம் கனமான நிசப்தத்தில் இருந்தது. விக்னேஷ்வர்த்தனும், நந்த கோபாலும் அந்த மர நிழல் மறைவில் மூச்சுக் காட்டாமல் பதுங்கி இருந்தார்கள்.

அந்த செக்யூரிட்டி அவர்கள் பதுங்கியிருந்த திசையை நோக்கித்தான் வந்தான். டக் டக்கென்ற ஷூ சப்தம் அவன் நெருங்க நெருங்க அதிகரித்தது. இரண்டு பேருக்கும் இருதயம் தடக் தடக்கென்று அடித்துக் கொண்டது.

அவன் சுற்றும் முற்றும் பார்த்துக்கொண்டே - நிதானமான நடையில் அந்த மரத்தினருகே வந்து - பிறகு முதுகைக் காட்டிக் கொண்டு கடந்து சென்றான்.

பத்து நிமிஷங்களுக்கு மேல் விக்னேஷ்வர்த்தனும், நந்தகோபாலும் அந்த மர நிழல் மறைவிலேயே பதுங்கி இருந்தார்கள்.

அந்த ராணுவ வீரன் அந்தப் பகுதியை முழுதாகக் கடந்திருப்பான் என்று உறுதிப்படுத்திக் கொண்டு



மரத்தை விட்டு வெளிப்பட்டார்கள்.

தூரத்து இருட்டில் கான்கிரீட் கால்களோடு அந்த உயரமான தண்ணீர் தொட்டி தெரிந்தது. வேகமாய் அதை நெருங்கினார்கள்.

நந்தகோபால் கிசுகிசுத்தான்.

''இங்கே வாட்டர் லைன் ப்ளம்பர் இருப்பான். அவன் கண்ணில் படாம காரியத்தை முடிக்கணும்.''

''டாங்க்கில் ஏறும்போது பார்த்துட்டான்னா காரியம் கெட்டுவிடும்.''

விக்னேஷ்வர்த்தன் சொன்னபோது - பம்ப் ரூம் அருகே இருந்து மெல்லிதாய்க் குறட்டை சத்தம் கேட்டது. ஸ்டூலில் உட்கார்ந்து கொண்டு - தூங்கி விழுந்து கொண்டிருந்தான் அந்த நைட் ஷிஃப்ட் ப்ளம்பர்.

பம்ப் ரூமைச் சுற்றிக் கொண்டு இருவரும் சத்தமில்லாமல் அவனைப் பின்புறம் அணுகினார்கள். விக்னேஷ்வர்த்தன் அங்கே கவரோரமாய்க் கிடந்த ஒரு துண்டு பைப்பைக் கையிலெடுத்துக் கொண்டான். தூங்கி வழியும் ப்ளம்பரின் தலைக்கு மேலே வாகாய்ப் பிடித்து உயர்த்த - சின்ன சத்தத்தில் அவன் விழித்துக் கொண்டான்.

''கோன்...?''

வார்த்தைகள் அவன் உதட்டைவிட்டு வெளியேறியதுமே வேகமாய்ச் செயல்பட்டான் நந்தகோபால். உள்ளங்கையைச் சப்பென்று பிளாஸ்திரி மாதிரி அவன் வாயில் பொத்தி - மறுகையால் இரும்புச் சங்கிலியாய் அவன் உடம்பை வளைத்தான்.

ப்ளம்பரின் திமிறல்கள் நந்தகோபாலின் நண்டு பிடிப்பில் தோற்றுப் போனது.

''விக்னேஷ்வர்த்தன்...அடி.''

அவன் துண்டு ஜி. ஐ. பைப்பை வீச-

'ச்சட்.'

ப்ளம்பரின் உச்சந்தலையில் ஒரு மரண அடி.

சிவப்பு வர்ணத்தில் கொழகொழ ஊற்று குபீரென உற்பத்தியாகி - சத்தம் போடக்கூட அவகாசம் இல்லாமல் சரிந்தான் அவன்.

அவனைத் தரதரவென்று இழுத்து - பம்ப் ரூமுக்குப் பக்கவாட்டிலிருந்த புதர் மறைவில் தள்ளி விட்டு - அந்த உயரமான தண்ணீர்த் தொட்டியின்

அடிவாரத்தில் நின்று அண்ணாந்து பார்த்தார்கள்.

இரும்புக் குழாய்ப் படிகள் சுழன்று சுழன்று டாங்கின் உச்சி வரை சென்றது.

''நான் கீழே நின்னு யாராவது வந்தா சமாளிக்கறேன். நீ மேல ஏறு.''

சொல்லிவிட்டு நந்தகோபால் யாருக்கும் சந்தேகம் தட்டாமல் பம்ப் ரூம் அருகே இருந்த ப்ளம்பரின் ஸ்டூலில் உட்கார்ந்து கொண்டான்.

விக்னேஷ்வர்த்தனின் கான்வாஸ் பாதங்கள் மெத்தென்று இரும்புப் படிகளைக் கவ்வின. சுற்றுப்புற இருட்டுடன் கச்சிதமாய்ப் பொருந்திக் கொண்ட கறுப்பு உடையுடன் சரசரவென்று டாங்கின் உச்சந்தலைக்கு வந்தான்.

புடைத்துக் கொண்டிருந்த மேன்ஹோல் மூடி - கால்வாசி நிலா வெளிச்சத்தை வாங்கிப் பளபளத்தது.

மேன்ஹோல் அருகே குனிந்தான். மூடியின் கைப்பிடியை அவன் கைகள் வலுவாய்ப் பற்றி இழுத்தன. திறந்து கொண்டது.

உள்ளே-

நீர்ப்பரப்பு - நட்சத்திரங்களைப் பிரதிபலித்துக் கொண்டு தெரிந்தது.

விக்னேஷ்வர்த்தன் பரபரப்பாய்த் தன் ஜெர்கின் பாக்கெட்டில் கையை விட்டான்.

அந்த பிளாஸ்டிக் பொட்டலம் வெளிப்பட்டது.

பொட்டலத்தை உடைத்துத் தண்ணீர்த் தொட்டிக்குள் கவிழ்த்தான்.

மொத்தமாய்ச் சிந்திய பவுடர் நீர்ப்பரப்பைத் தொட்டு இன்ஸ்டண்ட்டாய்க் கரைய ஆரம்பித்தது.

ஷஃபீக் அஹமத் லாட்ஜ் அறையில் சிரித்துக் கொண்டு சொன்ன வார்த்தைகள் அவன் காதில் ஒலித்தன.

**''இது பொட்டாசியம் சயனைட் பவுடர். லேசாய் நாக்கில் பட்டாலே போதும். ருசியை உணர்வதற்குள் ஆள் காலி. ராணுவக் கேந்திரத்தில் வாட்டர் டாங்க்கில் இதைக் கலந்து விட்டால் தண்ணீரை வாயில் வைத்த அந்த விநாடியே மரணம்.''**

'நாளைக்குக் காலையில இந்த ராணுவக் கேந்திரம் ஒரு பிணக்காடாக மாறியிருக்கும்!' மனசுக்குள் சந்தோஷப்பட்டுக் கொண்டே விக்னேஷ்வர்த்தன்



கீழே இறங்குவதற்காக இரும்புப் படிகளை நெருங்கிக் கீழே பார்த்தவன் - அதிர்ந்தான்.

## 6

கீ... கீழே நந்தகோபால் சில ராணுவ வீரர்களின் பிடியில் மாட்டியிருந்தான். கொஞ்ச நேரத்துக்கு முன்னால் சேர்ந்து போன ஆசாமி பரபரத்த குரலில் என்னவோ சொல்லிக் கொண்டிருந்தான். அதே விநாடியில்-

ஹெட்லைட் வெளிச்சத்தைப் பீய்ச்சியடித்துக் கொண்டு லெப்டினன்ட் ராஜப்பாவின் ஜீப் புயல் வேகத்தில் அங்கே வந்து நின்றது.

ராஜப்பா ஜீப்பை விட்டு இறங்கினார்.

அந்த அர்த்த ராத்திரியிலும் விறைப்பாய்ப் பல ராணுவ சல்யூட் அவருக்கு விழுந்தன.

''பிடிபட்ட ஆசாமி யாரு...?'' ராஜப்பா கேட்டார்.

நந்தகோபாலின் முகத்தில் கொத்தாய் டார்ச் வெளிச்சம் விழுந்து கண்கள் சூரியனைப் பார்த்த மாதிரி கூசிப் போக- புறங்கையால் வெளிச்சத்தைத் தடுக்க முயன்றான். ஒரு கார்ப்பொரல் அவன் புறங்கையை முறுக்கிப் பிடிக்க-

ராஜப்பாவால் முகத்தை தெளிவாய்ப் பார்க்க முடிந்தது.

''இவன்?''

''நந்தகோபால் ஸார். **விவிங்-இன்** க்வார்ட்டர்சில் தான் இருக்கிறான். எண்பத்தைந்தாம் வருட ரெக்ரூட்மெண்ட்டில் ராணுவத்தில் சேர்ந்தவன். போன வருஷம் நடந்த 'ப்ளக் ஸ்டார்ம்' ஆபரேஷனில் சிறப்பாக செயல்பட்டதற்காக உங்கள் கையால் ஒரு மெடலை வாங்கிக் குத்தியிருக்கிறான்.''

ராஜப்பா நந்தகோபாலின் தோளைப் பற்றினார்.

''இந்த அர்த்த ராத்திரி நேரத்தில் உனக்கு இங்கென்ன வேலை..?''

''க்வார்ட்டர்சுக்கு வெளியே யாரோ நடமாடற சத்தங்கள் கேட்டு எந்திரிச்சு வெளியே வந்தேன். நடமாட்டம் இந்தப் பக்கம் தெரிஞ்சது. இங்க வந்து பார்த்தபோது - ஸ்டாண்ட் பை ட்யூட்டியில் இருந்த இவர்கள் என்னைச் சூழ்ந்துகிட்டாங்க.''

"நீ சொல்ற கதையை ஒரு சின்னக் குழந்தைகூட நம்பாது மேன். ராணுவக் கேந்திரத்தில் இரவு நேர நடமாட்டங்களைக் கண்காணிக்க - ஸ்டாண்ட் பை ட்யூட்டியில் ஆட்கள் இருக்காங்க. ஒவ்வொரு க்வார்ட்டர்சிலும் இன்டர்காம் இருக்கு. அப்படி ஒருவேளை சந்தேகத்துக்கிடமான நடமாட்டங்கள் தெரிஞ்சிருந்தா... நீ செக்யூரிட்டி ஃபோர்ஸுக்கு இன்டர்காம் மூலமா தகவல் சொல்லி இருக்கணும்."

"ஸார்... இந்தக் கேந்திரத்துக்குள் ஊடுருவி வர்ற அந்நியர்களை நான் என் கையால பிடிக்க ஆசைப்பட்டேன்."

"உன்னுடைய கடமையை நீ ஒழுங்காச் செய்யணும். உனக்குக் கொடுக்கப்படாத கடமைகளில் தன்னிச்சையா மூக்கை நீட்ட நினைக்கறதும் ராணுவ ஒழுங்கீனம்தான்."

ரோந்து வந்த காப்பொரல் டார்ச் வெளிச்சத்தை நந்தகோபாலின் முகத்திலிருந்து கீழே இறக்கி குறுக்கிட்டான்.

"நிஜமாகவே இவன் அந்த மாதிரி எண்ணத்தோட வந்திருந்தா நாம நிச்சயமா பாராட்டலாம் ஸார். ஆனா இவன் அப்படி வரலை. இவன் கிட்ட திருட்டுத் தனம் இருக்கு. உள்ளேயே இருக்கற ஆளாயிருந்தும் இவன் மேல எனக்கு சந்தேகம் வரக் காரணம் இவனோட சர்ட்டிலிருக்கும் ரத்தக் கறைதான். இந்த ரத்தக் கறைக்கு பதில் சொல்லச் சொல்லுங்க ஸார்!"

டார்ச் வெளிச்சத்தில் அவன் அணிந்திருந்த கறுப்பு சர்ட்டில் திட்டுத் திட்டாய் ஈரம் தெரிந்தது. ப்ளம்பரை விக்னேஷ்வர்த்தன் தாக்கியபோது ரத்தம் மேலே தெறித்திருக்க வேண்டும்.

நந்தகோபால் மனசுக்குள் நொறுங்கிப் போனான். 'எப்படி இதைக் கவனிக்காமல் போனோம்?'

ராஜப்பா கேட்டார்.

"ரத்தக்கறை எப்படி வந்தது..?"

"......"

நந்தகோபால் திணறிப் போனான். உடனடியாய் அவன் வாயிலிருந்து வார்த்தைகள் வெளிப்படவில்லை. மவுனம் காத்தான்.

ராஜப்பாவின் முகம் பாறை மாதிரி இறுகியது. தாடை நரம்புகள் புடைத்துக் கொள்ள - இரைந்தார்.

"இவனை விசேஷமா விசாரிக்கணும்.



ரெட் செல்லுக்கு கொண்டு போங்க."

நந்தகோபாலின்மேல் சந்தேகம் உறுதியாகிவிட - மேலே இருந்த விக்னேஷ்வர்த்தனைப் பதட்டம் தொற்றிக் கொண்டது.

இரண்டு விஷயங்கள் அவனுக்குள் தீவிரமாய் அபாய சைரன்கள் ஊதின.

1. நந்தகோபாலின் ரூம் மேட் என்பதால் உடனடியாய் அவனைத் தேடி ஆட்கள் செல்வார்கள். அவர்கள் க்வார்ட்டர்ஸுக்குப் போவதற்குள் அவன் அங்கே போய்ச் சேர வேண்டும்.

2. நந்தகோபாலை ரெட் ரூமுக்குக் கூட்டிப் போகிறார்கள். ராணுவத்தின் சிவப்பறைச் சிகிச்சைகள் எப்பேர்ப்பட்ட கல்லுளிமங்கனையும் வாயைத் திறக்க வைத்துவிடும். சிகிச்சையின் தீவிரம் பொறுக்க முடியாமல் உண்மைகளை உளறிக் கொட்ட வைத்து விடும்.

இரும்புப் பிடிகளை உபயோகித்துக் கீழே இறங்க முடியாத நிலை. அதற்கு அருகேதான் அத்தனை கூட்டமும் மொய்த்திருந்தது.

பம்ப் ரூமின் பின்னால் இறங்கினால் க்வார்ட்டர்சுக்குத் தப்பியோட ஐந்து சதவீத வாய்ப்பு இருக்கிறது. தொண்ணூற்றைந்து சதவீதம் மாட்டிக் கொள்வோம்.

டாங்க்கின் உச்சந்தலைக்கு வந்து சேரும் தடித்த இரும்புக் குழாயைப் பற்றிக் கொண்டுதான் இறங்க வேண்டும். இறங்கத் துணிந்தான்.

அவன் இருந்த இடத்திலிருந்து பதுங்கி ஊர்ந்து வாட்டர் டாங்க்கின் மறு கோடிக்குப் போனான். சத்தமே இல்லாமல் லாவகத்தோடு அந்தக் குழாயைத் தாவிப் பற்றி - மிக ஜாக்கிரதையாகச் சறுக்கினான்.

முப்பது விநாடிகள்.

தரையைத் தொட்டான்.

அங்கிருந்த எல்லோருடைய கவனமும் நந்தகோபாலின் மேல் குவிந்திருக்க - இருட்டுக்குள் பதுங்கி வேகமாய் க்வார்ட்டர்ஸுக்கு ஓடினான்.

பின்புற வழியை உபயோகித்து - க்வார்ட்டர்ஸுக்குள் நுழைந்தவன் ஆசுவாச மூச்சு விட்டு - ஜெர்கினையும், இதர உடைகளையும் அவசரமாய்க் கழற்றியெறிந்தான். வேறு உடைக்கு மாறினான்.

நந்தகோபாலைப் பற்றின கவலை தீவிரமாய்

அவனைத் துளை போட்டது. அத்தனை கூட்டம் அங்கே சேர்ந்திருக்காவிட்டால் - அவனைச் சுட்டுக் கொன்று விட்டாவது தப்பித்து வந்திருக்கலாம்.

'சிவப்பறை சிகிச்சையில் நந்தகோபால் நிஜங்களைக் கக்கிவிடக் கூடாது. என்ன செய்யலாம்?'

யோசித்துக் கொண்டே அவன் படுக்கையில் விழுந்த போது-

'தட்...தட்...தட்...'

க்வார்ட்டர்சின் முகப்புக் கதவு தட்டப்படத் துவங்கியது.

## 7

**வா**சல் விளக்கை உயிரூட்டி விட்டு கதவைத் திறந்தான் விக்னேஷ்வர்த்தன். வெளியே செக்யூரிட்டி வீரர்கள் நாலைந்து பேர் நின்றிருந்தார்கள்.

ஒருத்தன் சொன்னான்,

''உன்னோட ரூம் மேட் நந்தகோபால் கைது செய்யப்பட்டிருக்கிறான். சதியில் ஈடுபட்டிருப்பதாக அவன் மேல் சந்தேகம். லெப்டினன்ட் உன்னைப் பார்க்க விரும்புகிறார்.''

விக்னேஷ்வர்த்தன் போலி அதிர்ச்சியை முகத்தில் காட்டினான்.

''நந்தகோபாலைக் கைது பண்ணியிருக்காங்களா? அவன் உள்ளே தூங்கிட்டிருக்கானே..!''

சொல்லிக் கொண்டே நந்தகோபாலின் அறையைக் காட்டினான். உள்ளே கட்டிலில் போர்வையால் மூடப்பட்டு ஒரு உருவம் தெரிந்தது. அவர்கள் அறைக் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே போய் போர்வையை உருவினார்கள்.

''உனக்குச் சந்தேகம் வராம இருக்கறதுக்காக படுக்கையில் தலையணைகளை வெச்சுப் போர்த்திட்டு க்வார்ட்டர்சை விட்டு நள்ளிரவில் வெளியே போயிருக்கான்.''

''மைகாட்! எதுக்காகப் போனான்?''

''தெரியலை. ஓம்பிரகாஷ் இறந்ததுக்குக் கூட நந்தகோபால் காரணமா இருக்கலாம்னு



சந்தேகப்படறாங்க. சிவப்பறையில் வெச்சு விசாரணை நடந்துட்டிருக்கு. விசாரணை முடிஞ்சாத்தான் நிஜம் என்னன்னு தெரிய வரும்.''

விக்னேஷ்வர்த்தன் உத்தமன் மாதிரி அவர்களிடம் பேசிக் கொண்டு உடையை மாற்றினான்.

முன்புறமிருந்த ராணுவக் கேந்திரத்தின் அலுவலகக் கட்டிடத்துக்கு அவர்களோடு நடந்து - லெப்டினன்ட்டின் அறைக்குள் அனுமதி பெற்று நுழைந்தான்.

விறைப்பாய் ஒரு சல்யூட் அடித்து அவர் முன்னால் நின்றான்.

ராஜப்பா ஏறிட்டார். பார்வை லேஸர் கதிர் மாதிரி அவனைத் தீவிரமாய் ஊடுருவியது.

'விக்னேஷ்வர்த்தன்...!' சன்னமாய் அவன் பெயரை உச்சரித்த ராஜப்பா சற்று கரகரத்த குரலில் கேட்டார். ''நந்தகோபாலும், நீயும் எத்தனை வருஷமாய் ஒரே அறையில் இருக்கிறீர்கள்?''

''இரண்டு வருஷமாக.''

''அப்படியானால் இருவருக்கும் நல்ல நெருக்கம் இருக்க வேண்டும். உன்னிடம் நந்தகோபால் எல்லா விஷயங்களையும் வெளிப்படையாய் பேசுவான் என்றுதான் நினைக்கிறேன்.''

''நந்தகோபால் ரிசர்வ்ட் டைப். கேட்ட கேள்விக்கு பதில் சொல்வான். அவனாகப் பேசுவது அரிதான சந்தர்ப்பங்களில்தான்.''

''எத்தனை நாளாக இப்படி ராத்திரி நேரங்களில் குவார்ட்டர்ஸை விட்டு வெளியே போகிறான்?''

''எனக்குத் தெரியாது. இவர்கள் தட்டியெழுப்பி விஷயத்தைக் சொன்னபோது கூட என்னால் நம்ப முடியவில்லை. நந்தகோபால் உள்ளே படுத்திருக்கிறான் என்றுதான் நினைத்தேன். ஆள் படுத்திருக்கிற மாதிரி தலையணைகளை வைத்து விட்டுப் போயிருக்கிறான் என்ற விஷயம் இப்போதுதான் எனக்குத் தெரிந்தது.''

''ஒரே அறைக்குள் இருந்து கொண்டு ரூம் மேட்டின் நடமாட்டம் பற்றித் தெரியாது என்று சொல்வது நம்புகிற மாதிரி இல்லையே?''

''நிஜம் அதுதான்.''

''உன்னுடைய எண் என்ன?''

''894349.''

''உன் ஐடென்டிஃபிகேஷன் கார்டைக் கொடு.''

விக்னேஷ்வர்த்தன் சர்ட் பாக்கெட்டில் கையை நுழைத்தான். அடையாள அட்டை இல்லை. பேண்ட் பாக்கெட்டுகளிலும் தேடிப் பார்த்துவிட்டு நிமிர்ந்தான்.

''அடையாள அட்டையை ரூமில் விட்டு விட்டேன்.''

''இங்கே எல்லோருமே அடையாள அட்டையைக் கூடவே வைத்திருப்பது வழக்கம்.''

''உடை மாற்றும்போது தவறுதலாய் விட்டிருப்பேன். அறைக்குப் போய் எடுத்துக் கொண்டு வருகிறேன்.''

''அறையிலிருந்து அடையாள அட்டையை உன்னால எடுத்து வர முடியாது. ஏனென்றால் அந்தக் கார்டு இதோ இங்கிருக்கிறது.''

ராஜப்பா மேஜையில் தூக்கிப் போட்ட ஐடென்டிஃபிகேஷன் கார்டை திகைப்புடன் பார்த்தான். அவர் தொடர்ந்தார்.

''இது எப்படி இங்கே வந்ததென்று பார்க்கிறாயா? நந்தகோபாலை மடக்கி கைது செய்த இடத்தில் கிடைத்தது. அதாவது... அந்த இடத்துக்கு நீயும் வந்திருக்கிறாய்... நந்தகோபால் பிடிபட்டதும் எப்படியோ தப்பித்து குவார்ட்டர்ஸில் போய்ப் படுத்துக் கொண்டு விட்டாய்...''

''அடையாள அட்டை அங்கே கிடந்ததை வைத்து நீங்கள் அப்படி ஒரு முடிவுக்கு வரக்கூடாது. என்னை மாட்டி விடுவதற்காக நந்தகோபாலே கூட அடையாள அட்டையை அங்கே போட்டிருக்கலாம்.''

ராஜப்பாவின் முகம் சிவப்புக்குப் போனது.

''நாங்களெல்லாம் முட்டாள்கள் என்கிற நினைப்போடு பேசிக் கொண்டிருக்காதே! நீங்கள் இரண்டு பேரும் அடித்துப் போட்ட ப்ளம்பருக்கு உணர்வு திரும்பிவிட்டது. இரண்டு பேர் சேர்ந்து தாக்கியதை அவன் சொல்லிவிட்டான். அது மட்டுமில்லை. ஏற்கெனவே ஓம்பிரகாஷ் இறப்பதற்கு முன்னால் இரண்டு பேர் தப்பித்துப் போனதாகத்தான் ஒயர்லஸ்ஸில் தகவல் தந்தான். இரண்டு பேரில் ஒருவன் நந்தகோபால். இன்னொருவன் நீ.''

விக்னேஷ்வர்த்தன் ஸ்தம்பித்தான். 'எல்லாம் வெட்ட வெளிச்சமாகி விட்டது!'



''ஏதோ சதி வேலைகளில ஈடுபடுகிறீர்கள் என்பது தெரிகிறது. என்ன காரியம் அது? யாருக்காக வேலை செய்கிறீர்கள்...?''

''.........''

விக்னேஷ்வர்த்தன் அமைதி காத்தான்.

''இங்கே பார்... உன்னுடைய அறைத்தோழன் அங்கே சிவப்பறையில படாத பாடு பட்டுக் கொண்டிருக்கிறான். அந்த சித்திரவதைகளெல்லாம் நீ அனுபவிக்க வேண்டாமென்றால் கேட்கிற கேள்விகளுக்கெல்லாம் பதிலைச் சொல்லிவிடு. ம்... யாருக்காக இங்கே ஐந்தாம்படையாக இயங்குகிறீர்கள்..?''

''.........''

''உன் அறையை தலைகீழாகப் புரட்டி சோதனை போட்டுக் கொண்டு இருக்கிறார்கள். நாங்களாகக் கண்டுபிடிக்கும் முன்னால் நீயாக உண்மைகளைச் சொல்லி விடுவது நல்லது.''

''.........''

விக்னேஷ்வர்த்தன் தீவிரமாய் மவுனம் அனுஷ்டித்துக் கொண்டிருக்க - ஒரு ஜவான் அனுமதி கேட்டு விட்டு உள்ளே வந்தார். அவர் முகத்தில் பதட்டம்.

''ஸார்... அந்த நந்தகோபால் சிவப்பறையில விசாரணைக்கிடையே தற்கொலை செய்து கொண்டு விட்டான்.''

## 8

விக்னேஷ்வர்த்தனை ரெஜிமெண்ட் லாக்கப்பில் அடைக்கச் சொல்லிவிட்டு லெப்டினண்ட் ராஜப்பா ரெட் ரூமுக்கு விரைந்தார். செண்ட்ரிகள் துப்பாக்கியைத் தாழ்த்திக் கொண்டு - ராஜப்பாவுக்குக் கதவைத் திறந்து விட்டார்கள்.

ஒரு ராணுவ ஆபீஸர் அவரை எதிர்கொண்டு உள்ளே அழைத்துப் போனார். உள்ளே - பிரகாச விளக்குகள் உயிர்ப்பிக்கப்பட்டிருக்க-

விசாரணை நாற்காலியில் உட்கார்ந்த நிலையி

லேயே உயிரை விட்டிருந்தான் நந்தகோபால். உடம்பு முழுவதும் நீலச்சாயம் பூசின மாதிரி நிறம். உதடுகள் வெடித்துப் போயிருந்தன. உதட்டின் பிளவுகளுக்கு இடையே அடர்த்தியாய் நுரை கட்டியிருந்தது.

"எப்படி இவ்வளவு அஜாக்கிரதையாக விட்டீர்கள்...?" கோபத்தோடு ராஜப்பா கேட்டார்.

அந்த ராணுவ ஆபீஸர் தயக்கமாய்ப் பேசினார்.

"கண்ணிமைக்கும் நேரத்தில் நடந்து விட்டது ஸார். பாய்ஸனை எங்கே மறைத்து வைத்திருந்தான் என்று தெரியவில்லை. உடைகளைக் கழற்றச் சொல்லி சோதனை போட்டு விட்டுத்தான் விசாரணையைத் துவக்கினோம்."

"இவனுடைய கூட்டாளி விக்னேஷ்வர்த்தனை லாக்கப்பில் அடைத்திருக்கிறார்கள். அவனை சோதனை போட்டாயிற்றா...?"

"அவனை ஒட்டுத் துணி இல்லாமல் நிற்க வைத்து தரோவாக சோதனையிடச் சொல்லியிருக்கிறேன்."

"நந்தகோபாலிடமிருந்து ஏதாவது விபரம் கசிந்ததா?"

"நம்முடைய சிகிச்சைக்கு இவன் கொஞ்சமும் மசியவில்லை ஸார். எலக்ட்ரிக் ஷாக் ட்ரீட்மெண்ட் கொடுத்த பின்பு குடிப்பதற்கு தண்ணீர் கேட்டான். டேப் வாட்டர் பிடித்துக் குடிப்பதற்குக் கொடுத்தோம். அந்தத் தண்ணீரில் விஷத்தைக் கலந்து குடித்துத் தற்கொலை செய்து கொண்டு விட்டான்."

"கையைக் கட்டி வைத்தல்லவா இவனை விசாரணை செய்திருக்க வேண்டும்?"

"தண்ணீர் குடிப்பதற்காக அவிழ்த்து விட்டோம். இதை நாங்கள் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை ஸார்..."

"ஒரு ராணுவக் கைதியை இவ்வளவு அசட்டையாக நடத்தியது உங்கள் தவறுதான்..."

அந்த ஆபீஸர் தலையைக் குனிந்து நின்றார்.

ராஜப்பா இறுக்கமான குரலில் தொடர்ந்தார்.

"அந்த விக்னேஷ்வர்த்தனை தீவிரமாய் விசாரித்து - அவர்களை ஏவியிருக்கும் அந்நிய சக்தி எது... என்பதை நீங்கள் கறந்தாக வேண்டும்."

"எஸ்...ஸார்..."

## 9

விடிகாலை ஐந்து மணிக்கு டெலிபோன் உச்சஸ் தாயியில் வீறிட்டுக் கத்த - ராஜப்பாவின் தூக்கம் கலைந்தது. ராத்திரி நடந்த எதிர்பாராத சம்பவங்களால் மூன்று மணிக்குத்தான் அறைக்கு திரும்பினார். சற்றே அயர்வதற்குள் மீண்டும் டெலிபோன்.

படுக்கையிலிருந்தே கையை நீட்டி ரிசீவரை எடுத்தார்.

"ஹலோ..."

அடுத்த முனையிலிருந்து பதட்டமான குரல் புறப்பட்டு வந்தது.

"ஸார்... நீங்கள் உடனே **சோல்ஜர்ஸ் லிவிங் இன் க்வார்ட்டர்சுக்கு** வர வேண்டும்."

"என்னாயிற்று?"

"நம் ரெஜிமெண்ட் முழுவதும் பிணக்காடாக இருக்கிறது. சாவு எண்ணிக்கை ஆயிரத்தைக் கடந்திருக்கும்."

ராஜப்பா அதிர்ச்சியுடன் கேட்டார்.

"என்ன நடந்தது?"

"வாட்டர் பொல்யூஷன்."

"எப்படி?"

"ரெஜிமெண்டுக்கான ஓவர் ஹெட் டாங்கில் விஷம் கலக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் எழுந்துள்ளது. தண்ணீர் சாம்பிள்களை லெபாரட்டரிக்கு அனுப்பி வைத்துள்ளோம்."

லெப்டினண்ட் ராஜப்பா அவசர அவசரமாய்க் கிளம்பினார். தூக்கக் கலக்கமும் கண் எரிச்சலும் இருந்த இடம் தெரியாமல் தொலைந்தது.

ஜீப் டிரைவரைத் தேடிக் கொண்டிருக்க அவகாசமில்லாமல் அவரே இக்னீஷியனை உசுப்பினார். காலைநேரக் குளிரில் தொண்டை கட்டிப்போய் உறுமியது. ஜீப் புகையும், புழுதிப் படலமும் பக்கவாட்டில் உயரமாய்க் கிளம்ப ஆஃபீஸர்ஸ் இல்லங்களை சரேலெனப் பின் தள்ளினார்.

விடிகாலையில் கன்னி வெளிச்சத்தில் - ஆர்மி

குவார்ட்டர்ஸின் கம்பி வேலி சொற்ப தொலைவில் தெரிந்தது. கம்பி வேலிக்கப்பால் சதுர சதுர கட்டிகளாய் குடியிருப்புக் கட்டிடங்கள். இடையிடையே பச்சை முக்காடுகளை அசைக்கும் மரங்கள்.

குவார்ட்டர்ஸ் மத்தியில் நடமாட்டங்கள் தெரிந்தன. ஆம்புலன்ஸ் மண்டையில் சிவப்பு விளக்கு சுழல நின்றிருக்க - ஆர்மி ஆஸ்பிடலில் டாக்டர்களும் நர்ஸ்களும் பரபரப்பு முளைத்த முகங்களோடு அங்கே இயங்கிக் கொண்டிருந்தார்கள்.

ராஜப்பா ஒரு மையமான இடத்தில் ஜீப்பைக் கொண்டு போய் நிறுத்தினார். அவர் இறங்கியதுமே கவலையைப் பூசிக் கொண்ட முகங்களோடு சில ராணுவ ஆபீஸர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டார்கள். ராஜப்பா அவசரக் குரலில் கேட்டார்.

''எப்படி... இந்த அவலம்?''

''தண்ணீரில் விஷம் கலக்கப்பட்டுள்ளது உறுதியாகி விட்டது ஸார். ஒவ்வொரு குவார்ட்டர்சிலும் குறைந்தது மூன்று பிணங்கள். தண்ணீரை உபயோகிக்காமல் பிழைத்தவர்கள் அரிது.''

''டாக்டர்ஸ் விங் என்ன சொல்கிறார்கள்?''

''அவர்கள் ஸ்தம்பித்துப் போயிருக்கிறார்கள். தண்ணீர் வாயில் பட்டதுமே மரணத்தைக் கொடுத்து விடக் கூடிய கொடிய விஷம். அதனால் யாரையும் காப்பாற்ற முடியாமல் திணறுகிறார்கள். இந்தத் தண்ணீரை உபயோகிக்க வேண்டாம் என்று மிச்சமிருப்பவர்களுக்கு எச்சரிக்கை விடுப்பது மட்டுமே இப்போதைக்கு நம்மால் செய்யக்கூடிய காரியம்.''

''அந்த நந்தகோபாலை ராத்திரி தண்ணீர்த் தொட்டிக்குக் கீழே வைத்துத்தான் கைது செய்தோம். இப்படி ஒரு கோணம் நமக்குத் தோன்றாமல் போய் விட்டது துரதிர்ஷ்டம்தான்...''

''ஸார்! நந்தகோபால் மறைத்து வைத்திருந்த விஷத்தை தண்ணீர் குடிக்கிற சாக்கில் உட்கொண்டு தற்கொலை செய்து கொண்டான் என்று நாம் நினைத்தது தவறு. சித்திரவதைகள் பொறுக்க முடியாமல் - தண்ணீரில் விஷம் இருப்பது தெரிந்தே - டேங்க் வாட்டரைக் கேட்டுப் பெற்றுக் குடித்துத் தற்கொலை செய்து கொண்டிருக்கிறான்.''



''விக்னேஷ்வரத்தனை விசாரணை செய்தீர்களா? என்ன சொன்னான் அவன்?'' ராஜப்பா ஆத்திரத்தோடு கேட்டார்.

புலன் விசாரணைப் பிரிவு அதிகாரி குறுக்கிட்டுப் பதில் சொன்னார்.

''அவனிடம் விசாரணை தொடர்கிறது. நந்தகோபாலிடம் ஏமாந்தது போல ஏமாந்து விடாமல் ஜாக்கிரதையாக விசாரிக்கிறார்கள்.''

''ஏதாவது உருப்படியான தகவல்கள்?''

''கிடைத்தன.''

ராஜப்பாவின் கண்ணில் ஆர்வம் கொப்பளித்தது.

''என்ன தகவல்?''

''ஷஃபீக் அஹமத் என்ற பெயரைச் சொன்னான். பழைய டெல்லியில் உள்ள ஒரு லாட்ஜ் பெயரைச் சொன்னான்.''

## 10

ஃபேன் சுற்றிற்குக் கீழே ராஜப்பா உட்கார்ந்திருக்க அவருக்கு எதிர் இருக்கையில் இருந்தார் இன்ஸ்பெக்டர் சர்தார்ஜி. பெயர் மித்ரா சிங்.

சரளமான பஞ்சாபியில் ராஜப்பா சொன்னார்.

''இன்ஸ்பெக்டர்... நீங்க அன்னிக்குத் தந்த க்ளூ... ரொம்பச் சரிதான். அந்த ஆசாமிகள் ஆர்மிக்கு உள்ளேயே இருந்தவங்கதான். ஆனா அந்த ஆசாமிகளை முன்னமே நாம கண்டு பிடிக்காததின் விளைவு... இன்னிக்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட உயிர்களைப் பலி வாங்கிடுச்சு.''

''கொடூரம்!''

''ஏறக்குறைய இந்த ராணுவ ரெஜிமெண்டே இறந்து போச்சுன்னு சொல்லலாம் இன்ஸ்பெக்டர்...''

ராஜப்பா தொடர்ந்தார்.

''ரெண்டு பேரைக் கைது பண்ணினோம். அதுல ஒருத்தன் தற்கொலை பண்ணிகிட்டான். இன்னொருத்தனை விசாரித்ததில் பல அதிர்ச்சியான தகவல்கள் கிடைச்சிருக்கு.''

''என்ன?''

''சில அந்நிய சக்திகள்... பண ஆசை காட்டி அந்த ரெண்டு பேரையும் வளைச்சுப் போட்டு சில

சதித்திட்டங்கள் பின்னிக் கொடுத்திருக்கு. தண்ணீர்த் தொட்டிக்குள் பொட்டாசியம் சயனைடைக் கலந்து... ஒரு போர்க்களத்தில் கூட இத்தனை உயிரிழப்பு இருக்காது.''

''யார் அந்த அந்நிய சக்தி?''

''பாகிஸ்தான்! பயிற்சி பெற்ற தீவிரவாதக் குழுவை இந்தியாவுக்கு அனுப்பி வெச்சு இருக்கு. முக்கியமான ராணுவ கேந்திரங்களில் - சத்தமில்லாமல் - ஒரு போரில் ஏற்படக்கூடிய அளவுக்கு பேரிழப்பை உண்டாக்கத் திட்டம் தீட்டியிருக்காங்க. அதன் முதல் கட்டத்துக்கு இந்த ரெஜிமெண்ட் பலி. இப்படி ஒரு நிழல் யுத்தத்தால் நம் ராணுவத்தின் ஆணி வேரை பலமிழக்கச் செய்ய உத்தேசிச்சிருக்காங்க.''

''முதல் கட்டமே இவ்வளவு கொடூரமா இருக்கே! அவங்களைக் கண்டு பிடிச்சு செயல்படாமத் தடுத்தாகணும். அந்த செயல் திட்டங்களின் பின்னணி ஏதாவது தெரிஞ்சதா? ஐ மீன்... அடுத்து எந்த இடத்தைக் குறி வெச்சிருக்காங்க...?''

''தண்ணீர்த் தொட்டியை பொல்யூட் பண்றதோட இவங்க ரெண்டு பேரோட வேலை முடிஞ்சது. அவங்களோட மத்த திட்டங்கள் பத்தி இவங்களுக்குத் தெரியலை. ஷஃபீக் அஹமத்ங்கற ஆசாமிதான் இவங்க ரெண்டு பேர்க்கும் தொடர்பு ஆசாமியா இருந்திருக்கான்.''

இன்ஸ்பெக்டர் நிமிர்ந்தார்.

''ஷஃபீக் அஹமத்! அவன் போலீஸின் ஹிட் லிஸ்ட்டில் இருக்கான்! தீவிரவாதி. ரொம்ப வருஷமாத் தேடப்பட்டு வர்றான்.''

''ஓல்டு டெல்லியில் வெச்சுத்தான் ஏழெட்டு தடவை அந்த ஷஃபீக் அஹமத் இவங்க ரெண்டு பேரையும் சந்திச்சுப் பேசியிருக்கான்.''

''இடம்?''

''பாரூக் நிவாஸ் அப்படின்னு ஒரு லாட்ஜ் பேரைச் சொன்னான்.''

இன்ஸ்பெக்டரின் முகத்தில் நம்பிக்கை வந்தது.

''உபயோகமான தகவல். அந்த லாட்ஜ் மூலமா அவங்க பதுங்கியிருக்கக் கூடிய இடத்தைக் கண்டு பிடிச்சிடலாம்.''

''உங்களுக்கு மிலிட்டரி போர்சின் உதவி தேவைப்பட்டா தேவைப்படும் உதவியைச் செய்யத்



தயாரா இருக்கேன்.''

''தாங்க்யூ மிஸ்டர் லெப்டினன்ட். முதலில் அவங்க இருப்பிடமும் ஆயுத பலமும் தெரியணும். அதைக் கண்டு பிடிச்ச பின்னாலதான் எந்த மாதிரி முன்னேற்பாட்டோடு அவங்களை மடக்கலாம்னு முடிவு பண்ணணும். நான் உங்களை மறுபடி தொடர்பு கொள்கிறேன்.''

ராஜப்பா எழுந்து நின்று இன்ஸ்பெக்டருக்கு கையைக் குலுக்கி விடை கொடுத்தார்.

## 11

இன்ஸ்பெக்டர் மித்ரா சிங்கின் யமஹா பைக் ஓல்டு டெல்லியை நோக்கி ஒரு புயலைப் போல போய்க் கொண்டிருந்தது. போலீஸ் யூனிஃபார்முக்கு விடுதலை தந்துவிட்டு, மஃப்டியில் இருந்தார். பைக்கின் பாக்ஸ் கேரியரில் ஒரு கையடக்கமான ஃப்ரீப்கேஸ் சொருகிக் கிடந்தது.

கசகசப்பை அப்பிக் கொண்ட சந்து பொந்துகளில் நுழைந்து லாட்ஜை அடைந்தார்.

'பாரூக் நிவாஸ்' என்று இந்தியிலும், உருதிலும் எழுதியிருந்த போர்டு ஒரு ஆணி கழன்று போய்க் கோணலாகத் தொங்கிக் கொண்டிருந்தது. டிஸ்டெம்பரை மறந்து போன சுவர்களில் கனமாய்ப் படர்ந்த அழுக்கைப் பார்த்தபோது அவருடைய சட்டைக்குள் மூட்டைப் பூச்சிகள் ஊர்கிற மாதிரி பிரமை ஏற்பட்டது.

வாசலில் எரிந்து கொண்டிருந்த மங்கலான மஞ்சள் பல்பு - உள்ளே யார் போகிறார்கள் யார் வருகிறார்கள் என்று அக்கறை எடுத்துக் கொள்ளாத மாதிரி பலஹீன வெளிச்சத்தைப் பரப்பியிருந்தது.

இன்ஸ்பெக்டர் சுவரோரமாய் பைக்கை நிறுத்திப் பூட்டி விட்டு ப்ரீஃப்கேசோடு லாட்ஜ் வாசலுக்குள் நுழைந்தார்.

மாடிப்படிகளை உள்ளடக்கி ரிசப்ஷன் என்ற பெயரில் ஒரு கடைசலான அறை முன்னால் இருந்தது. அங்கே, போனால்போகிறது என்று ஒரு

உயரத்துக்கு ரசம் போன கண்ணாடி ஒன்று தெரிந்த
தான் ஒரு சேல்ஸ் ரெப்ரஸன்டேட்டி
தோரணைக்குப் பொருந்தி வருகிறோமா என்
அந்தக் கண்ணாடியின் மூலமாக - விட்டுப் போ
இடங்களைப் பூர்த்தி செய்து - பார்த்துக் கொண்ட
இன்ஸ்பெக்டர்.

"ரூம் வேண்டும்" என்று கேட்ட அவ
சந்தேகப்பார்வையோடு நிமிர்ந்து பார்த்தா
கௌண்ட்டரில் இருந்த ஆசாமி.

"உங்கள் பெயர்?"

"ராவ்."

"எங்கிருந்து வருகிறீர்கள்?"

"அம்பாலாவிலிருந்து வருகிறேன்."

"என்ன நிமித்தம்?"

"நான் ஒரு சேல்ஸ் ரெப்."

"இதற்கு முன்னால் இந்த லாட்ஜி
தங்கியிருக்கிறீர்களா?"

"இல்லை."

"இங்கே வசதி குறைவு. அறைகள் அவ்வள
சுத்தமாக இருக்குமென்று எதிர்பார்க்க முடியாது
வெளிப்படையாகச் சொல்லுகிறேன். வாடகை
குறைவாய் இருக்க வேண்டுமென்று
எதிர்பார்ப்பவர்கள்தான் இந்த லாட்ஜுக்கு வருவார்கள்
உங்களைப் போல டீசன்ட்டான ஆட்களுக்கு
சௌகரியமாக இருக்காது."

"பரவாயில்லை. இந்தப் பகுதியில் வேறு
லாட்ஜுகளில் இடம் இல்லை. இன்றைக்கு ஒரு
ராத்திரிதானே... சமாளித்துக் கொள்ளுகிறேன்."

"சிங்கிள் ரூம்தான்."

"பரவாயில்லை."

"அட்டாச்டு பாத் இல்லை. வராந்தாவுக்குப்
பொதுவாய் இருக்கிற பாத்ரூமைத்தான்
உபயோகித்துக் கொள்ள வேண்டும்."

"சரி."

அவன் லெட்ஜரில் எழுதி - கையெழுத்தை
வாங்கிக் கொண்டு - சாவியை நீட்டும்போது அவரை
ஒரு தரம் சந்தேகமாய்ப் பார்த்தான்.

"மாடியில் முப்பத்திரண்டாவது அறை."

"தாங்க்ஸ்" என்றபடியே ப்ரீஃப்கேசைக்
கையிலெடுத்த இன்ஸ்பெக்டர், "ரூம் பாயை அனுப்பி



வையுங்கள்" என்று சொல்லிவிட்டு படிகளில்
உயர்ந்தார்.

வராந்தாவின் மத்தியிலிருந்த அந்த அறையின்
லாக்கை விடுவித்தார். உள்ளே ஒரு ஜீரோ வாட்
விளக்கு எரிந்து கொண்டு இருந்தது. அந்த மங்கலான
வெளிச்சத்தின் உதவியால் சுவிட்ச் போர்டைக் கண்டு
பிடித்து - ட்யூப் லைட்டைப் போட்டார். அறைக்குள்
ஒரு நாற்றம் அடித்தது.

ஜன்னலைத் திறந்து வெளியே பார்வையைப்
போட - வரிசை வகுத்திருந்த தெரு விளக்குகளுக்கு
நடுவில் நெருக்கியடித்துக் கொண்டு வீடுகள்
தெரிந்தன. அந்த வீடுகளைத் தாண்டி பார்வைக்கு
கிடைத்தது. ஒரு பெரிய மசூதி. மசூதியிலிருந்து
தொழுகை ஒலி கேட்டுக் கொண்டிருந்தது.

"ஸார்..."

சத்தம் கேட்டுத் திரும்பினார் இன்ஸ்பெக்டர்.

ஒரு பதினெட்டு வயதுப் பையன் கையில்
துடைப்பத்தோடு உள்ளே வந்தான். "அறையைப்
பெருக்கி சுத்தம் பண்ணிடறேன். டிபன் ஏதாவது
வேணும்னா சொல்லுங்க ஸார். வாங்கிட்டு வந்து
தர்றேன்." லோக்கல் இந்தியில் பேசினான்.

"உம் பேரென்ன...?" கேட்டார் இன்ஸ்பெக்டர்.

"நஸீர்."

அறையை வேகவேகமாய்ப் பெருக்கிக் கொண்டே
பதில் சொன்னான் அவன்.

"எத்தனை நாளா நீ இந்த ஹோட்டல்ல வேலை
பாக்கறே...?"

"ரெண்டு வருஷமா ஸார்."

"அப்படின்னா இந்த ஹோட்டலுக்கு அடிக்கடி
வந்து தங்குறவங்களை உனக்கு நல்லாவே தெரியும்...
இல்லையா..?"

"ஆமா ஸார். ஒரு தடவை வந்து தங்கிட்டுப்
போனாலும்... நான் ரொம்ப நாள் ஞாபகம்
வச்சிக்குவேன்."

"என்னைப் பார்த்திருக்கியா?"

"இல்லை ஸார். நீங்க இதுக்கு முன்னால் இங்க வந்து
தங்கின மாதிரி தெரியலை."

புன்னகைத்த இன்ஸ்பெக்டர் சர்ட்
பாக்கெட்டிலிருந்து ஐம்பது ரூபாய்த்தாளை எடுத்து
அவன் கையில் தந்தார்.

"எனக்கு டிபன் வாங்கிட்டு வா நஸீர். மீதிப் பணத்தை நீயே வெச்சுக்க."

அவன் ஆச்சரியமாய் அந்த ஐம்பது ரூபாய் நோட்டையும், இன்ஸ்பெக்டரையும் பார்த்தான். இன்ஸ்பெக்டர் ப்ரீஃப்கேஸின் வாயைத் திறந்தார். உள்ளே இருந்து கறுப்பு மேலாடை அணிந்த அந்த நீள் செவ்வக ஆல்பத்தை வெளியே எடுத்தார்.

"நஸீர்."

"ஸார்?"

"டிபன் வாங்கப் போறதுக்கு முந்தி நீ எனக்கு ஒரு சில தகவல் சொல்லணும்" என்று சொல்லிக் கொண்டே ஆல்பத்தைப் பிரித்தார்.

நஸீரின் கண்களில் மெல்லிசாய் ஒரு பயக்கீற்று தெரிந்தாலும் அவர் கொடுத்த ஐம்பது ரூபாய் அவனுக்குள் வேலை செய்தது.

"என்ன ஸார்?"

"இந்த ஃபோட்டோவில் இருக்கிற ஆளை நீ பார்த்திருக்கியா?"

ஷஃபீக் அஹமதின் ஃபோட்டோவைக் காட்டினார் இன்ஸ்பெக்டர். நஸீர் நிமிர்ந்து பயக்கண்களால் அவரைப் பார்த்தான்.

"நீங்க... போலீஸா..?"

"இல்லை."

"அப்புறம் எதுக்காக இந்த விபரமெல்லாம் கேக்கறீங்க?"

"நான் ஃபைனான்ஸ் கம்பெனிலர்ந்து வந்திருக்கேன். இந்த ஃபோட்டோவில் இருக்கறவங்க லட்ச லட்சமாக் கடன் வாங்கினவங்க. சொல்லு!... இந்த ஃபோட்டோவில இருக்கற ஆளைப் பார்த்திருக்கியா?"

"பார்த்திருக்கேன். போன வாரம்கூட இங்க தங்கியிருந்தார்."

"அவங்க ரூமில் நீ சர்வீஸ் பண்ணப் போவியா?"

"அங்கெல்லாம் என்னை விட மாட்டாங்க."

இன்ஸ்பெக்டர் அந்தத் தீவிரவாதிகளின் போட்டோக்கள் ஒட்டப்பட்ட ஆல்பத்தில் இதர பக்கங்களை அவனிடம் புரட்டிக் காட்டினார்.

"இந்த ஆல்பத்தில் உனக்கு வேற யாரையெல்லாம் தெரியும்?"

அவன் சில புகைப்படங்களைத் தொட்டுக்



காட்டினான்.

"இவங்க எல்லாம் அவரைப் பார்க்க வருவாங்க."

"இவங்கல்ல யாராவது இப்ப இந்த ஹோட்டல்ல தங்கியிருக்காங்களா?"

"இல்லை."

"இந்த ஹோட்டல் முதலாளி யாரு?"

"ஹோட்டல் முதலாளி சிங்கப்பூர்ல இருக்கார். வருஷத்துக்கொரு தடவை வந்து கணக்குகளை சரி பார்த்துட்டுப் போவார். மிச்ச நாள் பூராவும் மேனேஜர் பொறுப்பில்தான் இருக்கும்."

"மேனேஜர் யாரு?"

"அவர் பேர் கல்யாண். கீழே அவருக்கும் ரூம் இருக்கு."

"இப்ப இருப்பாரா?"

"இருப்பார். ஹோட்டலைக் கவனிச்சிட்டு இருபத்தி நாலு மணி நேரமும் இங்கதான் இருப்பார்."

இன்ஸ்பெக்டர் நஸீரின் முதுகைத் தட்டிக் கொடுத்தார்.

"நீ போய் டிபன் வாங்கிட்டு வா..."

அவன் இன்ஸ்பெக்டர் தந்த பணத்தில் தனக்கு எத்தனை தேறும் என்று கணக்கிட்டுக் கொண்டே - அந்த அறையிலிருந்து வெளியேறினான்.

இன்ஸ்பெக்டர் யோசனையாய் கட்டிலில் உட்கார்ந்தார்.

'அந்த மேனேஜர் கல்யாணை கவனிக்கிற விதத்தில் கவனித்தால் ஷஃபீக் அஹமத் கோஷ்டி எங்கிருந்து வருகிறார்கள் என்று தெரிந்து விடும். அல்லது அடுத்து அவர்கள் எப்போது இங்கே வந்து தங்குவார்கள் என்கிற அளவுக்காவது விபரம் தெரிந்து விடும்.'

கதவைச் சாத்திவிட்டுக் கீழே வந்தார்.

ரிசப்ஷனிஸ்ட் இளைஞன், மேஜையருகே இன்ஸ்பெக்டர் வந்து நின்றதும் - பீறிட்ட கொட்டாவியை புறங்கையால் தடுத்துவிட்டு, "என்ன வேணும் ஸார்?" என்றான்.

"லாட்ஜ் மேனேஜரைப் பார்க்கணும்."

"எதுக்காக? உங்களுக்கு ஏதாவது தேவைன்னா என்கிட்டேயே நீங்க சொல்லலாம். நான் உங்களுக்கு ஏற்பாடு செய்யறேன்."

"உங்க மேனேஜர் பேர் கல்யாண்தானே?"

''ஆமா.''

''அவர் என்னோட பழைய க்ளாஸ்மேட். அவரைப் பார்த்துப் பேச விரும்புகிறேன்.''

''என்ன ஸார்... வேற எங்கேயும் ரூம் கிடைக்காம நீங்க இந்த லாட்ஜில் வந்து தங்கினீங்க. இப்ப மேனேஜர் என்னோட க்ளாஸ்மேட்ன்னு சொல்றீங்களே..?''

''ரூம் பாய் கிட்டே பேசிட்டிருந்தபோது இந்த ஹோட்டல் மேனேஜர் பேர் கல்யாண்ணு ஏதேச்சையாத் தெரிஞ்சது. என்னோட க்ளாஸ்மேட் கல்யாண் ஹோட்டல் மேனேஜரா இருக்கான். அவனோட முதலாளி சிங்கப்பூர்ல பிசினஸ் பண்றார். அந்தக் கல்யாண்தான் இவர்ன்னு நான் யூகம் பண்றேன். அவரை நேரில் பார்த்தா தெரிஞ்சி போகுமே!''

அவன் இன்டர்காம் எடுத்துப் பேசி விட்டுப் பிறகு சொன்னான். ''இந்த வராந்தாவின் கடைசியில் மேனேஜர் ரூம். போய்ப் பாருங்க.''

இன்ஸ்பெக்டர் அந்த அறையைத் தொட்டுக் கதவைத் தட்டினார்.

உள்ளே இருந்து குரல் வந்தது.

''கமின்.''

கதவைத் திறந்தார்.

உள்ளே - கட்டிலில் சாய்ந்து உட்கார்ந்திருந்த அந்த நாற்பது வயது கல்யாண் பெரிதாய் புன்னகைத்துக் கொண்டே, ''வாங்க சார்.'' என்றான்.

இன்ஸ்பெக்டர் உள்ளே நுழைந்தார்.

கல்யாண் எழுந்து ''வெல்கம் இன்ஸ்பெக்டர்'' என்று சொல்ல - க்ளிக்.

இரண்டு முரட்டு ஆசாமிகள் அந்த அறைக்கதவை உள்பக்கமாய்த் தாளிட்டார்கள்.

## 12

மேனேஜர் கல்யாண் அவரைப் பார்த்து கேலியாகச் சிரித்தான்.

''இன்ஸ்பெக்டர்ன்னு... நான் உங்களைக் கூப்பிட்டது ஆச்சரியமா இருக்கா?''

இன்ஸ்பெக்டரின் பார்வை அந்த அறையின் எல்லாத் திசைகளிலும் சுழன்றது. அந்த அறையில்



குறைந்தது பத்துப் பேர்களாவது இருந்தார்கள்.

கல்யாண் சிரித்துக் கொண்டே தொடர்ந்தான்...

''நீங்க எப்படி முக்கியமான ஆளுங்களைப் படம் பிடிச்சு ஆல்பம் போட்டு வெச்சிருக்கீங்களோ... அதே போல நாங்களும் எங்களுக்குப் பிடிக்காத ஆசாமிகளின் போட்டோ, அவங்களை பத்தின விபரங்களை சேகரிச்சு வெச்சிருக்கோம். அந்த லிஸ்ட்டைச் சேர்ந்த யாராவது எந்த ஹோட்டலில் வந்து தங்கினாலும் உடனே எனக்குத் தகவல் வந்துரும். அப்புறம் அந்த ஆசாமி உயிரோட இங்கிருந்து போக முடியாது.''

இன்ஸ்பெக்டரின் கைகள் மெதுவாய் இடுப்போரம் நகர்ந்து - பிஸ்டலைத் தொடுவதற்குள் - சட்டென்று இருவர் அவரை நெருங்கி அவர் கைகளை இறுக்கிப் பிடித்தார்கள். இரும்புப் பிடி.

''உங்க போலீஸ் சாகசமெல்லாம் இங்கே செல்லுபடியாகாது இன்ஸ்பெக்டர்! அவர்கிட்டே இருந்து ஆயுதங்களைப் பறிச்சிரு மொய்தீன்...''

கல்யாண் சொன்னதும் - இன்ஸ்பெக்டரை நெருங்கி - தீவிரமாய் அவரைத் தடவிப் பார்த்து - ஒரு பிஸ்டலையும் - சில தோட்டாக்களையும் அப்புறப் படுத்தினான் அந்த மொய்தீன்.

''ஷஃபீக் அஹமதைப் பத்தி தெரிஞ்சிக்கிறதுக்காகத் தானே நீங்க இங்க வந்தீங்க? இப்ப நான் உங்களை ஷஃபீக் அஹமத் கிட்டே தான் ஒப்படைக்கப் போறேன். உங்களை என்ன செய்யறதுன்னு அவருக்குத் தான் தெரியும்.''

திரும்பி தன் சகாக்களைப் பார்த்து உருதுவில் ஏதோ சொன்னான்.

அதில் இரண்டு பேர் தலையசைத்து விட்டு - அதே அறையின் பின் பக்க வழியாக வெளியேறிச் சென்றார்கள். இன்னும் இரண்டு பேர் இன்ஸ்பெக்டரின் கைகளைப் பின்புறமாக இணைத்துக் கட்டினார்கள். அடுத்த சில நிமிஷங்களில் இன்ஸ்பெக்டர் ஹோட்டலின் பின்புற வழியாக ஜீப்புக்குள் கொண்டு செல்லப்பட்டார்.

இரண்டு ஹெட்லைட்களையும் வெளிச்சத்துக்குக் கொண்டு வந்து - இருட்டைக் கிழித்தது ஜீப். ஐந்து நிமிஷ பயணத்தில் சில தெருக்கள் இருட்டில் புறக்கணிக்கப்பட்டு - அந்த மகுதி வளாகத்தில்

நுழைந்து - மசூதியின் பிரம்மாண்டமான சுவர்களுக்கருகே பேய் இயக்கத்தை நிறுத்திக் கொண்டது.

பெரிய வெள்ளை ஷேப்பில் மூன்று கோபுரங்கள் வெள்ளை டிஸ்டெம்பரில் பாபமாக இருட்டில் நின்றிருந்தன. கோபுரஉச்சியில் சிம்னி விளக்கு மாதிரி ஒரு லைட் எரிந்து கொண்டிருந்தது.

அது மொகலாயர்கள் காலத்தில் கட்டப்பட்ட பழமையான மசூதி. மத குருக்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் இந்த மசூதியில் இவர்களுக்கென்ன வேலை?

சின்ன விக்கெட் கதவருகே ஒரு முஸ்லீம் பெரியவர் உட்கார்ந்திருந்தார்.

கல்யாண் அவரிடம் என்னவோ சொல்ல - அலுமினியம் பெயிண்ட் அடித்த க்ரில் கதவைத் திறந்து விட்டார் அந்தப் பெரியவர்.

இன்ஸ்பெக்டரைத் தள்ளிக் கொண்டு அவர்கள் உள்ளே நுழைந்தார்கள். பளிங்குத் தரையை மிதித்து மசூதியின் உட்புறம் சென்றார்கள். குளிர்ச்சியாய் இருந்தது. இடதுபுற ஓரத்தில் தரையோடு தரையாய் ஒரு சின்னக் கதவு.

அந்தக் கதவை மேலே உயர்த்த - ஒரு குறுகலான படிக்கட்டு கீழே இறங்கிச் சென்றது. படியின் குறுகல் சில வினாடிகளில் அகலமானது. கீழே ஒரு பெரிய நிலவறை. அந்த நிலவறையின் மையத்தில் மசூதியைக் கட்டிய மொகலாய அரசனின் நீளமான சமாதி அலங்காரச் செதுக்கல்களோடு தெரிந்தது.

இன்ஸ்பெக்டர் பிரமித்தார்.

கறுப்பு உடைகளோடு கையில் ஏ.கே. 47 தரித்த தீவிரவாதிகள் நிறையபேர் பார்வைக்குத் தட்டுப்பட்டார்கள். ஒரு தற்காலிக ராணுவ கேந்திரம் போன்ற தோற்றத்துடன் இருந்தது அந்த இடம். எல்லாமே பாகிஸ்தானிய முகங்கள்.

நிலவறையின் அடுத்த பகுதிக்கு இன்ஸ்பெக்டரைக் கூட்டிக் கொண்டு போனார்கள். ஒரு பெரிய ஆசனத்தில் ஷஃபீக் அஹமத் பான் மென்று கொண்டு தெரிந்தார். அவருக்கு முன்பாய் இன்ஸ்பெக்டர் நிறுத்தப்பட்டார்.

"வேவு பார்க்க வந்தீங்களா இன்ஸ்பெக்டர்?" ஷஃபீக் அஹமத் கேட்டார்.

இன்ஸ்பெக்டர் பொறிந்தார்.



"ஒரு புனிதமான மசூதிக்குக் கீழே பதுங்கிட்டு மனிதாபிமானமில்லாத காரியங்களைப் பண்ணிட்டிருக்கே! உனக்கு வெக்கமாயில்லே..?"

சிரித்தார் ஷஃபீக் அஹமத்.

"நான் எதுக்காக வெக்கப்படணும்! செத்தது இந்தியர்கள். அதுவும் இந்திய ராணுவ வீரர்கள். நான் சந்தோஷப்படறேன். இன்னமும் லக்னோ. உத்தம்பூர், புனே... இந்த இடங்களில் எல்லாம் என்னோட கைவரிசை பாக்கியிருக்கு. இந்திய ராணுவத்தின் ஆணிவேரை ஆட்டம் காண வைக்க வந்திருக்கும் ஒன் மேன் ஆர்மி நான்."

"இது முதுகில் குத்தற கயமையான போர் முறை..!"

"முறையான போர்கள், அந்தக் காலத்துக்கு சரி. இந்தக் காலத்தில் ஒரு ராணுவமானா அது எந்த மாதிரித் தாக்குதலுக்கும் தயாராகத்தான் இருக்கணும்! இந்த வாட்டர் டாங்க் ஆபரேசன் இந்த டெல்லி ஜோனோட முடிஞ்சது. அடுத்தது பாஸ்பரஸ் பெண்டா க்ளோரைட் திட்டம். டெல்லி ஜோனில் நடந்த ஆபரேஷனில் ஆபிசர்ஸ் எல்லாரும் பிழைச்சிட்டாங்க. ஆனா அடுத்த திட்டத்தில் ஆபிஸர்ஸ் முதற் கொண்டு ஒரு புல் பூண்டு கூட மிச்சமிருக்காது! அது என்ன திட்டம்ன்னு தெரிஞ்சிக்க ஆசையா இருக்கா? விளக்கி சொல்றதில் எனக்கு ஆட்சேபணை எதுவுமில்லை. ஆனா நேரம்தான் வேஸ்ட். ஏன்னா நீங்களே இன்னும் கொஞ்சம் நேரத்தில் சாம்பலாகப் போறீங்க."

"சாவைப் பத்தி எனக்குப் பயமில்லை. ஆனா இந்திய ராணுவத்தின் திறமையை நீ குறைச்சி மதிப்பிட்டிருக்கே. நாங்க ஒரு தடவை ஏமாந்திருக்கலாம். மறுபடியும் ஏமாற மாட்டோம். சீக்கிரமே உன்னை இந்திய ராணுவம் கைது பண்ணும்."

"நான் பதுங்கியிருக்கும் இடம் ஒரு மசூதி. அதாவது கடவுளின் பாதுகாப்பில் இருக்கேன்... அப்படி ஒருக்கால் கண்டு பிடிச்சாலும் புனிதமான இந்த மசூதிக்குள் போலீசோ ராணுவமோ காலடி வெச்சா உங்க நாடு சுடுகாடாயிடும்."

சொன்ன ஷஃபீக் அஹமத் தன் ஆட்களிடம் திரும்பி, "இன்ஸ்பெக்டரை எலக்ட்ரிக் சேருக்கு கொண்டு போங்க" என்றார்.

## 13

இன்ஸ்பெக்டருக்கு ஆச்சரியமாயிருந்தது. ஐந்து நேரமும் தவறாமல் தொழுகை நடக்கும் இந்த மசூதியை பாகிஸ்தானிய தீவிரவாதிகள் ராணுவ கேந்திரமாய் பயன்படுத்துவதை நினைத்து ஆத்திரமும் மீறிட்டது. கீழே நிலவறையில் ஆயுதங்கள் உட்பட சகல வசதிகளையும் நிர்மாணித்து இருந்தார்கள்.

அவரை அவர்கள் நிலவறையின் திருப்பங்களில் எங்கோ அழைத்துப் போனார்கள். இரண்டு நிமிஷ நேரத்துக்குப் பின் ஒரு அறைக்குள் நுழைய-

அந்தச் சின்ன அறையில் ஒரு ஸ்டீல் நாற்காலி - மையமாய் தெரிந்தது. அந்த நாற்காலியோடு வயர்கள் பின்னியிருந்தன.

"அதில் உட்கார்."

ஒருத்தன் கத்திக் கொண்டே அவரை அந்த நாற்காலியின் மேல் தள்ளினான். இன்னொருவன் அவர் தோளை பலமாய் அழுத்திக்கொள்ள - நாற்காலியின் பெல்டுட்கள் அவரோடு சேர்த்துப் பிணைக்கப்பட்டன.

திமிறிப் பார்த்தார்.

அசைய முடியவில்லை.

ஷஃபீக் அஹ்மத் அந்த அறைக்கு வெளியே வந்து நின்று உதடுகளில் புன்னகை தவழ வேடிக்கை பார்த்தார்.

"உங்களுக்கு கடைசி ஆசை என்று ஏதாவது இருக்கா இன்ஸ்பெக்டர்? சாவடிக்கறதுக்கு முன்னாடி இப்படி ஒரு பெரிய சம்பிரதாயம் இருக்கே!"

இன்ஸ்பெக்டர் மவுனமாயிருந்தார். ஷஃபீக் அஹ்மத் கேலியாய் கேட்டார்.

"பெண்டாட்டி பிள்ளை குட்டிகளுக்கு ஏதாவது சொல்ல வேண்டியிருக்கா?"

"........."

"இப்படி வாயைத் திறக்காம இருந்தாஎப்படி? ஷாக் குடுக்கறப்ப நீங்க கத்தாம இருக்கறதுக்காக இன்னும் கொஞ்ச நேரத்தில் நிஜமாகவே நீங்க வாயைத் திறக்க முடியாதபடி பிளாஸ்திரி போட்டுருவாங்க.



பிளாஸ்திரி போட்டதுக்கப்புறம் - 'ஜெய்ஹிந்த்'னு கத்திட்டு சாகலாமேன்னு உங்களுக்கு அற்ப ஆசை எழுந்ததுன்னா அதைக்கூட நிறைவேத்திக்க முடியாமப் போயிடும்."

"ஸார்... கனெக்ஷன்ஸ் ஓவர்" என்றான் ஒருவன்.

ஷஃபீக் அஹ்மதின் முகம் இறுகியது.

"சுவிட்சைப் போட்டா இப்ப நீங்க உட்கார்ந்திருக்கிற இடத்தில் உங்க சாம்பல்தான் இருக்கும். ஒரு இந்தியன் செத்துப் போறதை நேருக்கு நேர் பார்ப்பதில் எனக்கு அலாதிப் பிரியம்...ம்... காரியம் ஆகட்டும்."

தலையசைத்தார் ஷஃபீக் அஹ்மத்.

சுவிட்சைப் போடுவதற்காக பேனல் போர்டை நோக்கிச் சென்றவன் சட்டென முகம் மாறித் திரும்பினான். பதட்டமாய் சொன்னான்.

"ஸார்... இப்ப ஷாக் ட்ரீட்மெண்ட் தர முடியாது; தந்தாலும் அது அரைகுறை வேலையாகத்தான் முடியும்."

"ஏன்?"

"வோல்ட்டேஜ் ட்ராப்."

"எப்போது சரியாகும்...?"

"சொல்ல முடியாது. பகல்ல வோல்ட்டேஜ் ஃப்ளக்சுவேஷன்ஸ் அதிகம் இருக்காது.

"இன்ஸ்பெக்டர்க்கு ஆயுசு ஒரு நாள் அதிகம். இந்தக் காரியத்தை நாளைக்குக் காலைல வரை ஒத்திப் போடலாம். அதுவரைக்கும் இன்ஸ்பெக்டரை பக்கத்து அறையில் அடச்சி வெச்சிருங்க."

சொல்லிவிட்டு ஷஃபீக் அஹ்மத் சென்று விட்டார்.

இன்ஸ்பெக்டரை அடுத்த அறையில் அடைத்து - வெளிப்புறம் தாழிட்டார்கள். பத்துக்கு பத்து அறை. உள்ளே ஒரு மரக்கட்டில் இருந்தது. சுவர் மூலையில் ஒரு பானை. நிலவறை புழுக்கம் உடல் வியர்க்க வைத்தது. மங்கலாய் ஒரு நாற்பது வாட்ஸ் பல்பு எரிந்து கொண்டிருந்தது. இவர்கள் போட்டுக் கொண்ட வயரிங் என்பது வெளியே தெரிந்த புது வயர்களில் தெரிந்தது. முப்பது நிமிஷ நிசப்தத்திற்குப் பிறகு -

இன்ஸ்பெக்டரின் பார்வை ஏதேச்சையாய் சீலிங் அருகே செல்ல-

அவர் முகத்தில் மெலிதான மலர்ச்சி எழுந்தது. அந்த மரக்கட்டிலை சத்தமில்லாமல் நிமிர்த்திப்

போட்டார். கட்டிலின் மேல் ஏறி நின்று சீலிங் எட்டியது. தன் பாக்கெட் மறைவில் உள்ளங்கை சைசுக்கு கால்குலேட்டர் மாதிரி மறைத்து வைத்து இருந்த அதை எடுத்தார்.

## 14

**ரா**த்திரி பதினொரு மணிக்கு லெப்டினன்ட் ராஜப்பாவை அந்தப் போலீஸ் அதிகாரி சந்தித்தார். அவர் கொண்டு வந்திருந்த அந்த நீளமான தாள் ராஜப்பாவின் கைக்கு மாறியது. அந்தத் தாளின் மேல் வரிசையாய்க் கம்ப்யூட்டர் எழுத்துக்கள் நீல நிறத்தில் அச்சாகியிருந்தன.

''என்ன இது...?'' என்றார் ராஜப்பா.

''இன்ஸ்பெக்டர் மித்ராசிங் அனுப்பி வெச்சிருக்கும் மெஸேஜ்.''

''ஏதாவது முக்கியமான தகவல் இருக்கா? எங்கிருந்து மெஸேஜை அனுப்பி இருக்கார்..?''

''இன்ஸ்பெக்டர் மித்ராசிங் எதிரிகளின் பிடியில் சிக்கியிருக்கார்! அவர்கிட்டே கையடக்கமா ஒரு சின்ன இம்போர்ட்டட் ஃபாக்ஸ் மெஷின் இருக்கு. அவர் அடைபட்டிருக்கும் அறை வழியாக அதிர்ஷ்டவசமா டெலிபோன் கேபிள் போயிருக்கு. டெலிபோன் கேபிள் எங்கே இருந்தாலும் கால்குலேட்டர் போல இருக்கும் அந்த ஃபாக்ஸ் மெஷீனை இன்ஸ்டன்ட்டா கனெக்ட் பண்ணலாம். அதன் உதவியால் இன்ஸ்பெக்டர் மித்ரா எங்களுக்குத் தகவல் அனுப்பினார்.''

''ஷஃபீக் அஹ்மத் கோஷ்டியின் இருப்பிடத்தை இன்ஸ்பெக்டர் கண்டுபிடிச்சுட்டாரா?''

''எஸ்... ஆனா அங்கிருந்து தப்ப முடியாத சூழல்ல மாட்டியிருக்கார், அவங்க பழைய டெல்லியில் இருக்கற **தௌலா மஸ்ஜித்**ங்கற மசூதியில் பதுங்கி இருக்காங்க.''

வியப்பாய் நிமிர்ந்தார் ராஜப்பா.

''மசூதியிலா?''

''ஆமா ஸார். பெரிய சதித் திட்டங்களோட அடுத்தடுத்து லக்னோ... உத்தம்பூர்... புனே ராணுவத் தளங்கள் மேல தாக்குதல் நடத்தத் திட்டமிட்டி



ருக்காங்க. போதுமான ஆயுதத் தளவாடங்களோட அவங்க அங்கே பதுங்கியிருக்காங்க. அவங்களோட அடுத்த திட்டங்களை முறியடிக்கணும்ன்னா... ராணுவம் மசூதிக்குள்ள நுழைஞ்சு அவங்களைச் சுத்தி வளைச்சாகணும்.''

''சிறுபான்மை இனத்தவரின் கோயிலுக்குள்ளே ராணுவமோ... போலீஸோ நுழையறதுங்கறது இந்தியா மாதிரியான நாட்டில் அவ்வளவு சுலபமான காரியமில்லை.''

''பாகிஸ்தான் தீவிரவாதிகள் ஆயுதங்களோட அங்கே பதுங்கி இருக்காங்க..! அவங்க உள்ளே நுழையறது தப்பில்லை. ஆனா நம்ம உள்ளே நுழையறதுதான் தப்பா..?''

''நியாயமான கேள்விதான். ஆனா நம்ம அரசியல்வாதிகள் சும்மா இருக்கமாட்டாங்க. அந்த மசூதியை ராணுவமோ, போலீஸோ முற்றுகை இட்டாலே அவங்க குதிக்க ஆரம்பிச்சுடுவாங்க.''

''இப்ப என்ன செய்ய?''

''அதை நானோ, நீங்களோ தீர்மானிக்க முடியாது. ராணுவ மந்திரிதான் முடிவெடுக்கணும்.''

## 15

**பி**ரம்மாண்டமான கான்ஃப்ரன்ஸ் ஹால்.

மையமான நாற்காலிகளில் ராணுவ அமைச்சரும் உள்துறை அமைச்சரும் அமர்ந்திருந்தார்கள். அவர்களை அடுத்து டிஃபென்ஸ் செகரட்டரியும் அட்வைஸரும் இருக்கைகளை நிரப்பியிருக்க - தொடர்ந்து எதிரும் புதிருமாக ஃபீல்டு மார்ஷல், ஜெனரல், லெப்டினன்ட் ஜெனரல், மேஜர் ஜெனரல் என்று உயர்மட்ட ராணுவ அதிகாரிகள் கவலையில் சுருங்கிய நெற்றியோடு தெரிந்தார்கள்.

உரையாடல்கள் இந்தியில் இருந்தது. ''டெல்லி ரெஜிமென்ட்டில் நடந்திருக்கும் சம்பவத்தைப் பார்க்கும்போது அவர்கள் எவ்வளவு ஆபத்தானவர்கள் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். உடனடியாய் அந்தத் தீவிரவாதக் கும்பலைப் பிடித்து ஒடுக்கியாக வேண்டும்.''

"மருதி ஒரு புனிதமான இடம். அதற்குள் ராணுவம் நுழைந்தால் அது அரசாங்கத்துக்கும், ராணுவத்துக்கும் பொதுமக்கள் மத்தியில் கெட்ட பெயர் சம்பாதித்துத் தரும். அதன் விளைவுகள் பல வருடங்களுக்கு நீடிக்கும். பொற்கோயில் சம்பவங்களை நாம் இந்த நேரத்தில் நினைத்துப் பார்ப்பது நல்லது."

"தீவிரவாதிகள் அதற்குள் பதுங்கியிருக்கிறார்கள் என்பது நன்றாகத் தெரிந்திருக்கிறது. அவர்கள் அடுத்தடுத்து பல நாசகாரியங்கள் செய்ய உள்ளார்கள் என்பதும் தெரிந்திருக்கிறது. இன்னமும் எதற்காக நாம் தயங்க வேண்டும்?"

"ராணுவம் அதிரடியாக மருதிக்குள் நுழையுமானால் மருதிக்கு அதனால் நேரப்போகும் சேதங்களையும் கணக்கிலெடுத்துப் பார்க்க வேண்டும். மருதிக்கு எந்த சேதத்தையும் ஏற்படுத்தாமல் ஒரு ராணுவ நடவடிக்கை எடுப்பது சாத்தியமா?" இப்படி ராணுவ அமைச்சர் கேட்டதும்-

"சாத்தியம்!" என்றார் ராணுவ ஜெனரல்.

எல்லோருடைய பார்வையும் அவரிடம் திரும்பியது.

"எப்படி..?"

"இரண்டு சிறப்பு கமேண்டோக்களைத் தயார் செய்து - மருதிக்குள் நுழையச் செய்ய வேண்டும். அவர்களின் குறி தீவிரவாத கும்பலின் தலைவன் ஷஃபீக் அஹ்மது! அவனைக் கைது செய்து ராணுவத்தில் சேர்ப்பிக்க வேண்டும். தலையை நசுக்கி விட்டால் உடம்பு தன்னால் துவண்டு போகும்!"

அரைமணி நேர தீவிர வாதத்துக்குப் பின்-

லெப்டினண்ட் ஜெனரலின் அந்த யோசனை ஒரு வடிவத்துக்கு வந்தது.

அந்த விநாடிகளில்-

டெல்லி வடக்கு போலீஸ் ஸ்டேஷன் வாசலில் ஒரு சின்ன பார்சல் அநாதையாகக் கிடந்தது. வெடிகுண்டு நிபுணர்களால் சர்வ ஜாக்கிரதையாகப் பிரிக்கப்பட்ட அந்த பார்சலில்-

'இது இன்ஸ்பெக்டர் மித்ரா' என்ற துண்டு சீட்டோடு சாம்பல் தெரிந்தது.

# 16

ட்யூட்டி முடிந்து - யூனிஃபார்ம் இறுக்கங்களைத் தளர்த்திக் கொண்டு ரெஜிமெண்டுக்கு ஒரு கி.மீ. அப்பாலிருக்கும் ஃபேமிலி குவார்ட்டர்சை நோக்கி போய்க் கொண்டிருந்தார்கள் சூர்யப் பிரகாஷும், தயானந்தும்.

தயானந்த் 'லிவிங் ரூம்' குவார்ட்டர்சுக்கு அப்ளை செய்து வைத்திருக்கிறான். இன்னும் கிடைக்காததால் சூர்யப் பிரகாஷுடன் 'ஷேரிங்' செய்திருக்கிறான். சூர்யப் பிரகாஷின் மனைவி வந்தனாவின் சமையல் ருசிக்காக இன்னும் கொஞ்சம் அதிக வாடகையை ஷேர் பண்ணிக் கொள்ளலாம் என்று அடிக்கடி சொல்லுவான் தயானந்த். இருவருமே தங்கள் அசாதாரண திறமைகளை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வெளிக்காட்டி உயர்ந்த விருதான பரம்வீர் சக்ரா பெற்றவர்கள்.

அந்த கேம்ப் கட்டிடத்தைக் கடந்து கொண்டிருந்தபோது - ஒரு ஸ்டாண்டர்ட் 2000 அவர்களோரம் உரசி நின்றது. ஜன்னல் கண்ணாடி மெதுவாய்க் கீழிறங்கியது. உள்ளே ஒரு ஐம்பது வயது நபர் உட்கார்ந்திருந்தார்.

"நீங்கள்தானே சூர்யப்பிரகாஷ், தயானந்த்?"

"ஆமாம்!"

"காரில் ஏறுங்கள்."

இரண்டு பேரின் முகங்களையும் குழப்பம் போர்த்திக் கொண்டது.

சூர்யப் பிரகாஷ் கார் ஜன்னலருகே குனிந்தான்.

"நீங்கள் யாரென்று தெரியவில்லையே...? எதற்காக எங்களைக் காரில் ஏறச் சொல்லுகிறீர்கள்..?"

அவர் தன் கோட் பாக்கெட்டுக்குள் கையை நுழைத்து ஒரு பச்சை நிற அட்டையை அவர்கள் முகத்துக்கு நேரே காண்பித்தார்.

"கர்னல் உங்களை உடனே பார்க்க விரும்புகிறார். நான் கர்னலின் அந்தரங்க காரியதரிசி."

சட்டென்று சூர்யப்பிரகாஷும், தயானந்தும் விறைப்பாகி அவருக்கு ஒரு ராணுவ மரியாதை தந்தார்கள். காரின் கதவை பவ்யமாகத் திறந்து குஷன்

சீட்டின் நுனிகளை ஆக்ரமித்தார்கள்.

அவர் தலையசைத்ததும் கார் குலுங்காமல் சாலையில் விரைந்தது. டிஃபென்ஸ் எக்விப்மெண்ட் யூனிட்டையும், பாராட்ரூப்பர்ஸ், ட்ரெய்னிங் ஸ்கூலையும் கடந்தது கார். செண்ட்ரல் கமெண்ட் ஹெட்குவார்ட்டர்ஸைப் புறக்கணித்துக் கார் விரைந்தபோது - இருவரும் லேசாக ஆச்சர்யம் காட்டினார்கள்.

''என்ன ஸார்... கார் ஹெட்க்வார்ட்டர்ஸுக்குப் போகவில்லையா?''

''நாம் கர்னலைப் பார்க்கப் போகிறோம்.''

''கர்னலின் அறை இங்கேதானே இருக்கிறது?''

''உங்களைக் கர்னல் வெளி இடத்தில் சந்திக்க விரும்புகிறார்.''

''ஏன்?''

''இந்தச் சந்திப்பு மிக ரகசியமான சந்திப்பு.''

கார் சில கிலோமீட்டர்களை விழுங்கிவிட்டு - டெல்லியின் பெரிய வளையத்தில் ஓடிக் கொண்டிருந்தது. சிட்டி ஆரவாரத்தினின்றும் ஒதுங்கிய பங்களாக்கள் நிறைய தென்பட்டன. சாலையில் நடப்பவர்கள் அரிதாகத் தெரிந்தார்கள். சில நிமிஷங்களில் ஒரு பங்களா காம்பவுண்டுக்குள் நுழைந்தது கார்.

கம்பவுண்டு மேல் இரண்டடி உயரத்துக்கு போகன் வில்லா வளர்ந்திருந்தது. பின்புறமிருந்து அல்சேஷன் குரைப்பு கேட்டது. அவர் காரை விட்டு இறங்கி மொஸைக் தரையில் நடந்து போக சூர்யப் பிரகாஷும், தயானந்தும் அவரைப் பின்தொடர்ந்தார்கள். முன்னறை வந்தது.

இருவருக்கும் ஸோஃபாவைக் காட்டிவிட்டு அவர் உள்ளே எங்கோ சென்றார்.

''எதுக்காக நம்மைக் கூப்பிட்டிருப்பார்ன்னு நீ யூகிக்கிறே?''

''என்னால எதையும் யூகிக்க முடியலை.''

ஸோபாவில் உட்கார்ந்தார்கள். பத்து நிமிஷம் கரைந்திருந்தபோது உள்ளேயிருந்து - உயரமாய் குர்தா பைஜாமா அணிந்த ஒரு நபர் வெளிப்பட்டார். கர்னலின் காரியதரிசி என்று தன்னைச் சொல்லிக் கொண்டவரும் உடன் நடந்து வந்தார்.

''வெல்கம்.''



சொல்லிக் கொண்டே எதிர் இருக்கையில் அமர்ந்தார் அவர். அந்த காரியதரிசியைப் பார்த்து தயானந்த் கேட்டான்.

''கர்னல் எங்கே ஸார்?''

''நான் சொன்ன கர்னல் இவர்தான்!'' என்று சிரித்தார் அந்த காரியதரிசி.

''இவர் கர்னலா?''

''எங்கள் இயக்கத்தின் கர்னல்.''

''இயக்கமா? என்ன சொல்கிறீர்கள்?''

''டெல்லி கன்டோன்மெண்டில் ரெண்டாயிரம் ராணுவ வீரர்கள் உயிர்களைக் குடித்த இயக்கம்!''

திடுக்கிட்டு எழுந்து நின்றான் சூர்யபிரகாஷ். அவர் அமைதியாகப் புன்னகைத்தார். ''உட்கார்.''

''எங்கள் இருவரையும் எதற்காகக் கூட்டி வந்திருக்கிறீர்கள்?''

''உங்களால் எங்களுக்கு சில முக்கியமான காரியங்கள் ஆகவேண்டி இருக்கிறது.''

தயானந்த அவர்களை ஏறிட்டான்.

''விக்னேஷ்வாதன், நந்தகோபாலைப் போல தேசத்துரோகிகள் என்று எங்களை நினைத்தீர்களா?''

தயானந்தின் முகம் ஜிவ்வெனச் சிவந்தது.

அவர் அவனுடைய கோபத்தைக் கண்டு கொள்ளவில்லை. அலட்டிக் கொள்ளாமல் தொடர்ந்து சொன்னார். ''தேசாபிமானிகளுக்கு வெறும் மெடல்தான் கிடைக்கும். நாங்கள் சொல்லப் போகிற சின்னக் காரியத்தை நடத்திக் கொடுத்தால் உங்களுக்கு லட்சம் லட்சமாய் டாலர் கிடைக்கும்.''

''பணத்தைவிட தேசத்தைப் பெரியதாய் மதிக்கிற ரகம் நாங்கள்'' என்றான் சூர்யப்பிரகாஷ்.

''உணர்ச்சிவசப்பட வேண்டாம். நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை ஒரு நிமிஷம் காது கொடுத்துக் கேளுங்கள்'' - சொல்லிவிட்டு காரியதரிசியைப் பார்த்தார் அந்த நபர்.

காரியதரிசி தொடர்ந்தார். ''உங்கள் டிஃபென்ஸ் எக்விப் மெண்ட் யூனிட் - ஐ. எஸ். 506 என்ற புதிய ரகத் துப்பாக்கியை வடிவமைத்து உற்பத்தியையும் துவக்கியிருக்கிறீர்கள்... இல்லையா?''

அவர் கேட்டதும் - சூர்யப் பிரகாஷும், தயானந்தும் ஆச்சரியத்தைக் குழைத்துக் கொண்ட பார்வைகளோடு நிமிர்ந்தார்கள். அதே யூனிட்டில்தான்

அவர்களுக்கு ட்யூட்டி. ஏ.கே. 47, ஏ.கே. 56 ஆகியவைகளை மிஞ்சக்கூடிய அதி நவீன துப்பாக்கியான ஐ.எஸ். 506 இந்திய ராணுவத்தின் பிரத்யேக வடிவமைப்பு. அதன் உற்பத்தித் துவக்கம் முதற்கொண்டு எல்லாமே பரம ரகசியமாகப் பாதுகாக்கப்படுகிற விஷயங்கள்.

'இவர்களுக்கு எப்படித் தெரிந்தது..?'

''என்ன பார்க்கறீங்க சூர்யப்பிரகாஷ், தயானந்த்? இந்த டாப் சீக்ரட் சங்கதிகள் எல்லாம் எங்களுக்கு எப்படித் தெரியும் என்றா? நாங்கள் நினைத்தால் முடியாத காரியம் எதுவும் இல்லை. முதலில் சுலபமான வழிமுறைகளைப் பார்ப்போம்! அதாவது இப்போது உங்களைக் கூப்பிட்டு உதவி கேட்கிறோமே... இது மாதிரி. இது நடக்கவில்லையென்றால் அடுத்தடுத்து கடுமையான நடவடிக்கைகளில் இறங்குவோம். எப்படியும் நினைத்த காரியத்தை ஜெயித்து விட்டுத்தான் மறுவேலை பார்ப்போம். சரி, விஷயத்துக்கு வருகிறேன். அந்த ஐ.எஸ். 506 துப்பாக்கியின் மெக்கானிக்கல் டிசைன் கேல்குலேஷன்கள் எங்களுக்குத் தேவை. அந்தத் துப்பாக்கியின் உற்பத்தி மேற்பார்வையில் நீங்கள் இருப்பதால் உங்கள் கைக்கெட்டும் இடத்தில்தான் அந்த டிசைன் பர்டிகுலர்ஸ் இருக்கின்றன. அந்தக் குறிப்பிட்ட தஸ்தாவேஜுகளை உருவிக் கொண்டு வந்து எங்களிடம் சேர்ப்பித்தால் போதும். இந்த அற்புதமான வேலைக்கு நாங்கள் தரும் கூலி அற்பமல்ல!''

சொல்லிவிட்டு அந்த நபரும், காரியதரிசியும் இரண்டு பேரின் முகங்களையும் எதிர்பார்ப்போடு ஏறிட்டார்கள்.

சூர்யப்பிரகாஷ், தயானந்த் இருவரிடமும் எந்த சலனமுமில்லை. ''இது நாங்கள் செய்யக்கூடிய வேலை இல்லை.''

''பணம் போதாது என்றால் அதிகமாகத் தருகிறோம்.''

காரியதரிசி ஒரு ப்ரீஃப்கேஸைக் கொண்டு வந்து மேஜையில் வைத்து விரித்தார். சலவை மணத்தோடு புத்தம் புது கரன்சிக்கட்டுகள் பளீரெனச் சிரித்தன. இருவரின் பார்வைகளும் ஒரு சில விநாடிகள் அந்தக் கரன்சிக் கட்டுகள் மேல் நீந்தியது.



சூர்யப்பிரகாஷ் மெலிதான புன்னகையைச் சிந்தினான்.

''இந்த மாதிரி கரன்சிக் கட்டுகளுக்கு ஆசைப்படுகிறவர்களாக நாங்கள் பிறந்திருந்தால் ராணுவ வீரர்களாக இந்த வேலைக்கு வந்திருக்க மாட்டோம்.''

''சாகத் துணிந்து விட்டார்கள்.''

சொல்லிக் கொண்டே - இரண்டு முறை கையைத் தட்டினார் அவர். கறுப்பான உடையணிந்த பலர் விநாடிக்குள் அறை முழுவதும் முளைத்தார்கள்.

சூர்யப்பிரகாஷும், தயானந்தும் சுதாரிப்பதற்குள் இருவரையும் நாலைந்து ஆசாமிகள் மடக்கி அசைய விடாமல் நாற்காலியில் பிணைத்தார்கள்.

ஒரு செவ்வக சைஸ் லெதர் கேஸ் மேஜைக்கு வந்தது. அதற்குள் சர்வ ஜாக்கிரதையாக வைக்கப்பட்டிருந்த இரண்டு டெனிம் பெல்ட்டுகள் வெளியே எடுக்கப்பட்டன. பெல்ட்டைச் சுற்றிலும் இணைக்கப்பட்டிருந்தன சின்னச் சின்ன ஆர்டிஎக்ஸ் வெடிகுண்டு சமாச்சாரங்கள். பெல்ட்டின் முன்புறம் ஒரு பேட்டரி அமைப்பும், பேட்டரியை ஆன் செய்யக் கூடிய எலக்ட்ரானிக் சென்ஸார் சர்க்யூட்டும்... தெரிந்தன.

சூர்யப்பிரகாஷ், தயானந்த் இருவரின் இடுப்பிலும் அந்த பெல்ட் பொருத்தப்பட்டு பெல்ட்டை ரிலீஸ் செய்ய முடியாமல் லாக் செய்யப்பட்டது.

அவர் புன்னகைத்தார்.

''அரை கிலோமீட்டர் தூரத்திலிருந்து இந்த ரிமோட் சுவிட்சை ஆபரேட் செய்யலாம். உங்களுக்கு இன்னும் ஒரு மணி நேரம் டயம் தருகிறேன். அந்த டிசைன் தஸ்தாவேஜுகளோடு நீங்கள் இங்கே வரவேண்டும். இல்லையென்றால் ரிமோட் கண்ட்ரோலோடு உங்களைப் பின் தொடரும் எங்கள் ஆள் சுவிட்சை அழுத்தி விடுவான். சிதறிப் போவீர்கள்.''

சூர்யப்பிரகாஷும், தயானந்தும் அலட்சிய முகங்களோடு அவரைப் பார்த்தார்கள்.

''ஒரு மணி நேரம் டயம் கொடுத்து நேரத்தை ஏன் விரயமாக்க வேண்டும்? இப்பொழுதே... இந்த விநாடியே அந்த ரிமோட் கண்ட்ரோல் பட்டனை நீங்கள் அழுத்தலாம். இந்திய ராணுவத்திற்கெதிராக

ஒரு துரும்பைக் கிள்ளிப் போடக்கூட நாங்கள் தயாராக இல்லை."

"என்னுடைய கோபத்தைத் தூண்டாதீர்கள். ரிமோட் பட்டனை அழுத்தி விடுவேன்."

"அழுத்துங்கள்!"

சூர்யப்பிரகாஷும், தயானந்தும் கண்களை இறுக்கி மூடிக்கொண்டார்கள். அவருடைய ஆட்காட்டி விரல் அந்த ரிமோட் கண்ட்ரோல் சுவிட்சின் மீது ஊர்ந்து - சிவப்பு பட்டனைத் தொட்டு அழுத்தியது.

## 17

லெப்டினன்ட் ராஜப்பா அந்த அரசாங்க முத்திரையிட்ட ஆர்டரை அவர்களிடம் நீட்டினார். சூர்யப்பிரகாஷும், தயானந்தும் சந்தோஷம் நீந்தும் முகங்களோடு ஆர்டரை வாங்கிக் கொண்டு அவரிடம் உற்சாகமாகக் கையைக் குலுக்கினார்கள்.

ராஜப்பா சொன்னார். "ராணுவ உயர்மட்டக் குழு கூடி இரண்டு சிறப்பு கமேண்டோக்களைத் தேர்ந்தெடுப்பது பற்றி விவாதித்தது. ஒவ்வொரு வீரனின் சாகசங்கள், விருதுகள், நேர்மை ஆகிய அடிப்படைகளில் ஒரு பட்டியல் தயார் செய்தோம். அந்தப் பட்டியலில் சிறப்பு கமேண்டோ பணியை மேற்கொள்ள எல்லாவிதத் தகுதிகளும் உங்கள் இருவருக்கும் இருந்தன. ஏற்குறைய நீங்கள் இருவரும் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையில் - ஃபீல்டு மார்ஷல் ஒரு யோசனை சொன்னார். உங்களின் தேசப்பற்றை சோதிக்க ஒரு கடைசிப் பரீட்சை நடத்திப் பார்க்க வேண்டும் என்று. அதன்படி ஒரு சின்ன நாடகம் துவக்கினோம். உயிர் முக்கியமில்லை; தேசம்தான் முக்கியம் என்று நிரூபித்து இந்தக் கடைசிக்கட்ட சோதனையிலும் தேறி விட்டீர்கள்! ரிமோட் சுவிட்சை அழுத்தினால் உயிர் போகும் என்று மிரட்டப்பட்ட நிலையிலும் - 'நாங்கள் ராணுவ தஸ்தாவேஜுகளைத் திருடித் தரமாட்டோம்' என்று சொன்ன உங்கள் உறுதி பாராட்டுக்குரியது."

"ஸார்! இந்த உயர்ந்த பொறுப்பை சுமப்பதற்காக சந்தோஷப்படுகிறோம். பாகிஸ்தான்



தீவிரவாதிகளையும் - அவர்கள் சதித்திட்டங்களையும் முறியடிக்க - துடிப்புடன் காத்திருக்கிறோம்."

"இன்னும் இரண்டு நாட்களில் நீங்கள் மேற்கொள்ள வேண்டிய செயல் திட்டம் தயாராகி விடும். சனிக்கிழமை இரவு நீங்கள் இருவரும் அந்த உன்னத காரியத்தில் இறங்கப் போகிறீர்கள்."

ஒரு விறைப்பான சல்யூட்டுக்குப் பின் - அங்கிருந்து வெளியேறினார்கள். சூர்யப்பிரகாஷ் மகிழ்ச்சி ததும்பும் குரலில் சொன்னான்.

"இந்த சந்தோஷமான விஷயத்தை உடனே என் ஒய்ஃப் வந்தனா கிட்டே சொல்லணும்!"

"நீ குவார்ட்டர்சுக்குப் போ சூர்யப்பிரகாஷ்!"

"நீ...?"

"எனக்கு மிலிட்டரி கான்டீன் வரைக்கும் போகணும். அரை மணி நேரம் கழிச்சு வாறேன்..."

சூர்யப்பிரகாஷ் குவார்ட்டர்ஸ் பக்கம் போகும் வேன் ஒன்றில் லிஃப்ட் வாங்கிக் கொண்டு சென்றான்.

மரத்தினடியில் இளைப்பாறிக் கொண்டிருந்த சீலா பச்சை ராணுவ பைக்கின் ஸ்டாண்டை விடுவித்தான் தயானந்த். கிக்கரை உதைத்து பைக்கை ஸ்டார்ட் செய்து கொண்டு - ரெஜிமெண்டின் கீழ்புறம் விரட்டினான். கான்டீன் வந்தது.

கான்டீன் வாயிலில் பைக்கை ஸ்டாண்டிட்டு நிறுத்தி விட்டு - உள்ளே போனான்.

முகப்புக் கதவைத் தொட்டிருப்பான்.

அதே விநாடி-

'டொம்ம்ம்ம்...'

அந்தப் பிராந்தியமே கிடுகிடுக்கும்படி நெருப்புப் பிழம்பாக வெடித்துச் சிதறியது பைக்.

## 18

லெப்டினன்ட் ராஜப்பா தைரிய வார்த்தைகளை உதிர்த்து தயானந்தின் முதுகைத் தட்டிக் கொடுத்தார். பைக் கருகிப் போன ரொட்டித் துண்டாய் அங்கே கிடந்தது. நிபுணர்கள் சிரத்தையாய்க் குனிந்து பைக்கை பரிசோதித்துக் கொண்டிருந்தார்கள். ட்யூட்டி முடிந்த

ராணுவ வீரர்கள் கும்பலாய்ச் சேர்ந்து பீதி பரவிய முகங்களோடு பேசிக் கொண்டார்கள்.

வெடிகுண்டு நிபுணர், ராஜப்பாவை நெருங்கினார்.

''சக்தி வாய்ந்த வெடிகுண்டு.''

''என்ன ரகம்?''

''ஜெலட்டின்.''

''இக்னீஷன்?''

''எலக்ட்ரானிக் டைமர் இக்னீஷன் இணைக்கப் பட்டிருப்பதற்கான தடயங்கள் உள்ளன. தயானந்த் மயிரிழையில் பிழைத்திருக்கிறார், பைக்கை விட்டு இறங்கி கான்டீனில் நுழைந்ததால் தப்பியிருக்கிறார், ஒரு பத்து செகண்ட் முன் பின் ஆகியிருந்தால் இந்நேரம் இந்த இடத்தில் தயானந்தின் உடல் துணுக்குகளைத்தான் நாம் தேடிக் கொண்டிருக்க வேண்டும்.''

ராஜப்பா தயானந்திடம் கேட்டார்.

''பைக்கை எங்கே நிறுத்தியிருந்தாய்?''

''எக்யூப்மெண்ட் யூனிட்டின் ஸ்டாண்டில் ஸார்.''

''அதற்கு முன்னால்?''

''காலை ஆறு மணிக்கு குவார்ட்டர்சிலிருந்து பைக்கை எடுத்துக் கொண்டு ட்யூட்டிக்கு வந்து விட்டேன்.''

''கடைசியாக பைக்கை நிறுத்தியிருந்த இடம்?''

''உங்கள் அலுவலகத்துக்கு முன்பு.''

''மிக ரகசியம் என நாம் நினைத்துக் கொண்டிருந்த விஷயம் விரைவில் எதிரிக்குத் தெரிந்திருக்கிறது. சிறப்பு கமேண்டோவாக உங்களைத் தேர்ந்தெடுத்ததைச் சொல்லுகிறேன்.''

''ராணுவத்துக்குள்ளேயேதான் சதி வேலை நடக்கிறது. உள்ளே இருக்கிற எவனோதான் பைக்கில் வெடிகுண்டைப் பொருத்தியிருக்கிறான்.''

''என்னிடம் பேசிவிட்டு நீங்கள் இருவருமாகத்தான் வெளியே வந்தீர்கள். சூர்யப்பிரகாஷ் எங்கே?''

''வேனில் லிஃப்ட் வாங்கிக் கொண்டு குவார்ட்டர்ஸ் போய்விட்டான். எனக்கு கான்ட்டீனில் வேலை இருந்ததால் நான் இந்தப் பக்கம் வந்து விட்டேன்.''

''உங்கள் இருவருக்கும் சேர்த்துக் குறி வைக்கப்பட்ட குண்டு என்று நினைக்கிறேன்!''



''இருக்கலாம் ஸர்.''

''கான்டீன் போவது உங்கள் திடீர் முடிவா?''

''பர்ச்சேஸ் இருப்பதால் மிலிட்டரி கான்டீன் வரை சென்று விட்டுத்தான் குவார்ட்டர்சுக்குத் திரும்பிப் போவேன் என்று காலையில இருந்தே சொல்லிக் கொண்டிருக்கிறேன்.''

''அப்படியானால் நீங்கள் இருவரும் குவார்ட்டர்சுக்கு சேர்ந்து திரும்பிப் போகப் போவதில்லை என்பது காலையிலேயே முடிவாகி விட்டது..?''

''ஆமாம்.''

''நான் கொஞ்சம் வேறு மாதிரி யோசித்துப் பார்க்கிறேன்.''

''எப்படி ஸார்?''

''எதிரிகள் நன்கு திட்டமிட்டு வேலை செய்கிறார்கள். நீங்கள் இருவரும் தனித்தனியே குவார்ட்டர்ஸ் திரும்பிப் போவது ஏற்கனவே அவர்களுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பிருக்கிறது.''

''எஸ் ஸார்.''

''அப்படியிருக்கும் பட்சத்தில இந்த வெடிகுண்டு உன்னை மட்டும் குறி வைத்துப் பொருத்தப்பட்டிருக்கலாம்... இல்லையா?''

''நீங்கள் சொல்வது சரிதான் ஸார்.''

''இது உனக்கு வைக்கப்பட்ட குறி. அப்படியானால் இப்போது சூர்யப்பிரகாஷின் நிலைமை என்ன?''

ராஜப்பா கேட்டதும் - அதிர்ச்சியோடு நிமிர்ந்தான் தயானந்த்.



## 19

ராணுவ அடையாளங்களை உடம்பில் தீற்றியிருந்த அந்த டாட்டா எஸ்டேட் கார் சூர்யப் பிரகாஷின் குவார்ட்டர்சை அடைந்ததும், ராஜப் பாவும், தயானந்தும் காரிலிருந்து அவசரமாக இறங்கினார்கள்.

குவார்ட்டர்ஸின் முகப்பை அடைந்தார்கள். கதவில் ஒரு பூட்டுத் தொங்கிக் கொண்டிருந்தது.

''வீடு பூட்டியிருக்கே?''

''ஒய்ஃபும் அவனும் வெளியே போயிருப்பார்களா?''

"அப்படி ஏதாவது ப்ரொக்ராம் இருந்தால் என்னிடம் சொல்லியிருப்பானே..."

எதிர்குவார்ட்டர்ஸ் ஜன்னலில் ஒரு பெண் முகம் தெரிந்தது. ராஜப்பா அந்த குவார்ட்டர்ஸின் கதவைத் தட்டினார். முக்காடு போட்ட பெண் கதவைத் திறந்தாள்.

"எதிர் வீட்டில் குடியிருக்கும் சூர்யப்பிரகாஷைத் தெரியுமா?"

"தெரியும்."

"இந்த ஜன்னலில் இருந்து பார்த்தால் அவர்கள் வீட்டில் வந்து போகிறவர்களை நன்றாகப் பார்க்க முடியும் இல்லையா?" - அந்தப் பெண் 'ஆமாம்' என்கிற மாதிரி தலையாட்டினாள்.

"சற்று நேரம் முன்னதாக சூர்யப்பிரகாஷ் வீட்டுக்குத் திரும்பினதைப் பார்த்தீர்களா?"

"ஆமாம். ஒரு வேனில் வந்து இறங்கினார்."

"அதற்கப்புறம் வேறு யாராவது அவர் வீட்டுக்கு வந்தார்களா?"

"வந்த மாதிரி தெரியவில்லை."

"வீடு பூட்டியிருக்கிறது. சூர்யப்பிரகாஷும் வந்தனாவும் எங்காவது வெளியே சென்றார்களா?"

"நான் பார்க்கவில்லை."

ராஜப்பா. தயானந்தின் முகத்தை ஏமாற்றம் சூழ்ந்தது.

## 20

**சா**ந்தினி சவுக்கின் மையத்தில் இருந்த நீள்வட்ட ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் அருகே - ஆட்டோவை நிறுத்தினார்கள், சூர்யப்பிரகாஷும், வந்தனாவும். மீட்டர் சார்ஜைக் கொடுத்து விட்டு காம்ப்ளக்சுக்குள் நுழைந்தார்கள்.

சூர்யப்பிரகாஷ் கொஞ்ச நேரம் முன்னால் ட்யூட்டி முடிந்து வீடு திரும்பினதுமே - வந்தனாவை இடுப்போடு சேர்த்துத் தூக்கி தட்டாமாலை சுற்றி உற்சாகமாய்ச் சொன்னான். "எனக்கு ப்ரமோஷன் கிடைச்சிருக்கு வந்தனா..."

"கங்கிராட்ஸ்..." மலர்ந்தாள். "என்ன ப்ரமோஷன்..?"



"ஆர்மி ஒரு பெரிய பொறுப்பை நம்பி என் கையில் ஒப்படைச்சு இருக்காங்க."

"என்ன?"

"ரகசியம்!"

"பொண்டாட்டிகிட்டே கூடவா ரகசியம்?"

அவள் கன்னத்தைச் செல்லமாய்த் தட்டிவிட்டு விபரத்தைச் சொன்னான். "வர்ற சனிக்கிழமை ஆபரேஷன் துவக்கறோம். நீ லூஸ் டாக்ஸ் எதுவும் வெச்சுக்காதே வந்தனா..!"

"இது ரொம்ப ஆபத்தான காரியம் இல்லையா..?"

"அதனாலதான் இந்தப் பொறுப்பை என்கிட்டே ஒப்படைச்சு இருக்காங்க. இது ஒரு அரிய சந்தர்ப்பம்."

"இந்த ப்ரொமோஷன் சுபகார்த்தமா எனக்கு ஏதாவது ஒரு பொருளை நீங்க ப்ரஸண்ட் பண்ணியாகணும்."

"பண்ணிட்டா போகுது... இப்பவே கிளம்பு."

பதினைந்தே நிமிஷத்தில் ஒரு வயலட் நிற தேவதை மாதிரி வந்து நின்றாள் வந்தனா. இருபது நிமிஷம் டெல்லி சாலைகளில் பயணித்து - சாந்தினி சவுக்கின் மையத்தில் இருந்த நீள்வட்ட ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் அருகே - ஆட்டோவை நிறுத்தினார்கள். மீட்டர் சார்ஜைக் கொடுத்துவிட்டு காம்ப்ளக்ஸுக்குள் நுழைந்தார்கள்.

அவர்கள் நுழைந்தபோது - காம்ப்ளக்ஸ் வராந்தாவின் கனத்த தூண் ஓரமாய் நின்றிருந்த அந்த ஆசாமியை இருவரும் கவனிக்கவில்லை. அவன் - இருவரையும் டாக்சியில் தொடர்ந்து வந்து - டாக்சியை அனுப்பிவிட்டு - தூண் ஓரமாய்க் காத்து நின்றிருந்தான். முரட்டுத்தனமான ஸ்டேன்வாஷ் அவன் கட்டுமஸ்தான உடம்பைக் கவ்வியிருந்தது. கூலிங்கிளாஸை சரியாக நாசி உச்சியில் பொருத்திக் கொண்டு வராந்தாவில் இடைவெளி விட்டுப் பின் தொடர்ந்தான்.

சூர்யப்பிரகாஷும், வந்தனாவும் பேசிக்கொண்டே - வராந்தா கோடியில் இருந்த பர்ச்சேஸ் ஷாப்புக்குள் பிரவேசித்தார்கள்.

"எனக்கு க்ரிஸ்பல் பூணம் ஸாரி வேணும்."

"இஷ்டப்பட்டதை எடுத்துக்க."

வந்தனா அந்தப் புடவைக் கடலுக்குள் மூழ்கத் துவங்கினாள். சேல்ஸ் மேன் கை வலிக்க

புடவைகளை எடுத்துப் போட்டாள். இடையிடையே, ''எங்க இந்தப் புடவை எப்படி இருக்கு?'' என்று சூர்யப்பிரகாஷிடம் அபிப்ராயம் கேட்டாள். அவனை, ''நல்லாயிருக்கு'' என்று சொன்ன பின்பும், ''இல்லீங்க, இந்த பார்டர் அவுட் ஆஃப் ஃபாஷன்'' - ''கலர் சரியில்லை...'' ''கலர் நல்லாருக்கு. ஆனா டிசைன் மோசம்''... என்று ஒவ்வொரு புடவையும் அவன் கைகளில் இருந்து தள்ளுபடி ஆயின. பெண்கள் புடவை எடுப்பதைப் பற்றி பத்திரிகைகளில் வரும் ஜோக்குகள் உண்மைகள் தான் என்று நினைத்துக் கொண்டான்.

''வந்தனா!''

''ம்.''

''எனக்கு போரடிக்குது.''

''அதுக்காக நான் அவசரப்பட்டு மனசுக்குப் பிடிக்காத ஸாரி எடுக்க முடியுமா?''

''அவசரப்பட வேண்டாம். நீ நிதானமா ஆற அமர உன் மனசுக்குப் பிடிச்ச புடவையை செலக்ட் பண்ணு. நான் அதுவரை வெளியே நின்னு ஒரு சிகரெட் பிடிச்சிட்டு வர்றேன்.''

''புடவை உங்களுக்குப் பிடிக்க வேண்டாமா?''

''நீ ஒரு மூணு ஸாரி எடுத்து வை. மூணில் ஒண்ணை நான் செலக்ட் பண்ணித் தர்றேன்!''

வராந்தா காற்று சூர்யப்பிரகாஷுக்கு இதமாய் இருந்தது. பான்ட் பாக்கெட்டில் சிகரெட்டைத் தேடி - காலி பாக்கெட்டை சலிப்புடன் தூக்கி எறிந்தான். சற்றுத் தொலைவில் புஸ்தகங்களும், பான் டப்பாக்களும் அடுக்கப்பட்ட பெட்டிக்கடை தெரிந்தது. போனான்.

''வில்ஸ் ஃபில்டர் ஒரு பாக்கட்!''

ஒரு சிகரெட் உதட்டுக்கும், மீதி சிகரெட்டுகள் அவன் பாக்கெட்டுக்கும் போனது. எலக்ட்ரிக் கயிலை கோபமூட்டி அந்தக் கோபச் சிவப்பை சிகரெட் முனைக்குத் தொற்ற வைத்தான். புகையைக் காற்றில் கரைத்தபடி புடவைக் கடையை நோக்கி நடக்கத் துவங்கினான்.

சிகரெட்டும் சில நிமிஷங்களும் காலாவதியானதும் - கடைக்குள் எட்டிப் பார்த்தான் சூர்யப்பிரகாஷ்.

வந்தனா தென்படவில்லை.

அவசரமாய் அந்தக் கடைக்குள் நுழைந்தான்.



சேல்ஸ் மேனை அணுகிக் கேட்டான்.

''இங்க புடவையைப் பார்த்திட்டிருந்த என் ஒய்ஃப் எங்கே?

''நீங்க கூப்பிட்டனுப்பினதா ஒருத்தர் வந்து சொன்னார். உங்க ஒய்ஃப் அந்த ஆள் கூடத்தான போனாங்க.''



21

அரை மணி நேரத்துக்கு மேல் அந்த ஷாப்பிங் காம்ப்ளக்ஸை சுற்றிச் சுற்றி வந்தான் சூர்யப்பிரகாஷ். வந்தனாவின் சுவடே இல்லை. காம்ப்ளக்ஸ் வாட்ச்மேனிடம் - வெளியே தள்ளு வண்டியில் பேல் பூரி ஸ்டால் வைத்திருந்த கிழவனிடம் - வந்தனா கட்டியிருந்த வயலட் புடவையை அடையாளம் சொல்லி விசாரித்தான்.

உதட்டைப் பிதுக்கினார்கள்.

பிளாட்பார விளிம்பில் நின்று சற்று நேரம் யோசித்தான் - ஒரு ஆட்டோவைக் கை தட்டிக் கூப்பிட்டான். ஏறி உட்கார்ந்து சொன்னான்.

''டிஃபன்ஸ் க்வார்ட்டர்ஸ்.''

ஆட்டோ ஓடியது. வீட்டு வாசலில் இறங்கி ஆட்டோவை அனுப்பி விட்டுத் திரும்பினான், வீட்டில் அந்த பூட்டு அப்படியே தொங்கிக் கொண்டு இருந்தது.

தயானந்த் போர்ஷனில் விளக்கெரிந்து கொண்டிருக்க - அங்கே போனான்.

சூர்யப்பிரகாஷை பார்த்தவுடன் அவன் முகத்தில் பிரகாசம் தொற்றிக் கொண்டது.

''சூர்யப்பிரகாஷ்! நீ எங்கே போயிருந்தே?''

''வந்தனாவும், நானும் ஷாப்பிங் போனோம்...''

''உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லேயே? நான் ஒரு விபத்துல மயிரிழையில் தப்பிச்சேன்...''

''என்னாச்சு தயானந்த்?''

தயானந்த் பைக் வெடித்த சம்பவத்தைச் சொன்னதும் சூர்யப்பிரகாஷ் முகம் நிறைய அதிர்ச்சி.

தயானந்த் தொடர்ந்து சொன்னான்... ''அதே மாதிரி உனக்கும் ஏதாவது ஆபத்து நேருமான்னு பயந்து - லெப்டினன்ட் ஜீப் எடுத்து கிட்டு நேரா இங்க

வந்திருந்தா. வீடு பூட்டியிருந்தது. நீ வந்ததும் நம்ம ரெண்டு பேரையும் அவர்கிட்டே ரிப்போர்ட் பண்ணச் சொன்னா."

சூர்யப்பிரகாஷ் கவலையுடன் அவனை ஏறிட்டான். "தயானந்த், வந்தனாவைக் காணோம்!"

"வந்தனாவைக் காணோமா? என்ன சொல்றே?"

"ரெண்டு பேருமா ஷாப்பிங் போனோம். இப்ப நான் மட்டும் திரும்பி வந்திருக்கேன்."

"எப்படி?"

விபரம் சொன்னான்.

"சிகரெட் பிடிச்சிட்டு வரதுக்குள்ளே... நீ கூப்பிட்டதா சொல்லி வந்தனாவை யாரோ கூட்டிட்டு போயிட்டாங்களா?"

"ஆமா."

"அந்த வட்டாரம் பூரா நல்லாத் தேடினியா?"

"தேடிப் பார்த்துட்டேன். ஒரு வேளை வீட்டுக்கு வந்திருப்பாளோன்னு இங்க வந்தேன். வீடு பூட்டினது பூட்டினபடியே இருக்கு."

"வந்தனா புத்திசாலிப் பொண்ணு. யார் கிட்டேயும் ஏமாந்துர மாட்டா."

"ஏமாற மாட்டா. ஆனா ஃபோர்ஸ் பண்ணும்போது ஒரு பெண் என்ன செய்ய முடியும்?"

"லெப்டினன்ட் கிட்டே பேசிட்டு போலீஸ்ல ரிப்போர்ட் பண்ணிடலாம். சீக்கிரம் கிளம்பு."

கிக்கரை உதைக்கிற விநாடி - சூர்யப்பிரகாஷின் பார்வை அவன் வீட்டு முகப்புக் கதவருகே போய்ப் புருவங்கள் சுருங்கின.

"தயானந்த்! அங்கே பாரு..."

தயானந்த் கிக்கரை உதைப்பதை நிறுத்தி திரும்பிப் பார்த்தான்.

"கதவிடுக்கில் என்னவோ லெட்டர் சொருகி வெச்சிருக்கு!"

சூர்யப் பிரகாஷ் வேகமாய் போய் சொருகப்பட்டிருந்த அந்தக் கவரை எடுத்தான். அதன் வாயைக் கிழித்தான். உள்ளிருந்த மடிக்கப்பட்ட தாளில் டைப் செய்த எழுத்துக்கள் ஆங்கிலத்தில் ஓடின.

**சூர்யப்பிரகாஷ்!**

**உன் அழகான மனைவி இப்போது எங்கள் கைகளில்.**



**மருதிக்குள் நுழைந்து எங்கள் மீது தாக்குதல் தொடுக்க உன்னை ஒரு சிறப்பு கமேண்டோவாக தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். இந்தப் பணியிலிருந்து உடனே நீ விலகிக்கொள்ள வேண்டும். அதற்கான அதிகாரபூர்வமான அறிவிப்பு இன்னும் இருபத்தி நாலு மணி நேரத்துக்குள் வெளியாக வேண்டும். அப்படி வெளியாகவில்லை எனில் -**

**உன் மனைவி வந்தனா முதலில் கற்பிழப்பாள்.**

**அப்புறம்-**

**உயிரிழப்பாள்..**

**ஜெய் பாக்!**



## 22

லெப்டினன்ட் ராஜப்பா அந்தக் கடிதத்தைப் படித்துப் பார்த்துவிட்டு நெற்றியைச் சுருக்கினார். கடிதத்தை புரட்டிப் பார்த்தார். எக்ஸிக்யூட்டிவ் பாண்ட் பேப்பர் என்பதைத் தவிர வேற எந்தக் க்ளுவும் அந்தக் கடிதத்தில் கிடைக்கவில்லை.

ராஜப்பா நிமிர்ந்தார் கவலையாய். "இந்த லெட்டரை நாம அலட்சியப்படுத்த முடியாது."

"அவங்க மிரட்டலுக்குப் பயந்து நாம பின் வாங்கக் கூடாது ஸார்."

"இந்த நிமிஷம் சூர்யப்பிரகாஷோட மனைவியின் உயிர் முக்கியம். அவங்களை மீட்கறது முக்கியம்."

"அதனால...?"

"சிறப்பு கமேண்டோ பொறுப்பிலிருந்து சூர்யப்பிரகாஷை நீக்கி வைக்கறதா அதிகாரப்பூர்வமான அறிவிப்பு வெளியாக நான் உடனே ஏற்பாடு பண்றேன்."

சூர்யப்பிரகாஷ் அதிர்ச்சியோடு லெப்டினன்ட் ராஜப்பாவைப் பார்த்தான்.

"நோ ஸார். எனக்கு இதில் கொஞ்சம்கூட உடன்பாடு இல்லை."

"சூர்யப்பிரகாஷ்! இதில் சம்பந்தப்பட்டிருப்பது உன் மனைவியோட உயிர்."

"என்னை நீங்க கமேண்டோ பொறுப்பிலிருந்து

விலக்கினா அது எதிரிக்கு கிடைக்கிற இரண்டாவது வெற்றி ஸார். நாம அடிபணியக் கூடாது. அவங்க போட்ட கணக்கைத் தப்பாக்கணும்."

"எப்படி?"

"ஒரு இந்திய ராணுவ வீரனுக்கு மனைவி, குடும்பம் இதைக் காட்டிலும் - நாடும், கடமையும் முக்கியம்னு அவங்களுக்குக் காட்டியாகணும் ஸார். அதுதான் நமக்குப் பெருமை."

"நீ... என்ன சொல்றே?"

"இந்த மிரட்டலை அலட்சியப்படுத்துங்கன்னு... சொல்றேன்."

"வந்தனா?"

"கவலையாத்தான் இருக்கு. ஆனா இது கடமையுணர்வு பத்தின கவலை... ரெண்டாயிரம் ராணுவ வீரர்களை ஒரே இரவில் சாகடிச்ச அந்த வெறியர்களைத் திருப்பித் தாக்கணுமேங்கற கவலை... இதெல்லாம் அதைவிடப் பெரிசா இருக்கு. தாய் நாட்டுக்காக உயிரைக் கொடுக்க ஒரு சந்தர்ப்பம் கிடைச்சா அதை நான் மட்டுமல்ல - என் மனைவி வந்தனாவும் பெரிய பாக்கியமாகத்தான் கருதுவா."

"சூர்யப்பிரகாஷ்!"

"நீங்க எதுவுமே சொல்ல வேண்டாம் ஸார்! தனி மனிதர்களுக்காக இந்திய ராணுவம் தலைகுனியறதை நான் ஒருக்காலும் விரும்பலை."

லெப்டினன்ட் ராஜப்பா பார்வையில் பெருமிதம் வழிய சூர்யப்பிரகாஷைப் பார்த்தார்.

"உன்னோட மன உறுதியைப் பாராட்டறேன் யங் மேன்! உறவையும் உயிரையும்விட கடமைதான் ஒவ்வொரு ராணுவவீரனுக்கும் பெரிசு. அது உனக்கும் பொருந்தும். எனக்கும் பொருந்தும். முன் வெச்ச காலை நாம் பின் வெக்க வேண்டாம். ஆனா... அவன் தந்திருக்கும் இருபத்துநாலு மணிநேர அவகாசத்துக்குள் உன் மனைவி வந்தனாவை உயிரோட மீட்க வேற வழிகள் இருக்கான்னு பார்ப்போம்."

சொன்ன லெப்டினன்ட் ராஜப்பா டெலிபோன் டயலைச் சுழற்ற ஆரம்பித்தார்.

## 23

போலீஸ் ஜீப்பில் சாந்தினி சவுக் வந்து சேர்ந்தார்கள் சூர்யப் பிரகாஷும், தயானந்தும். ராஜப்பா போன் செய்து அந்த இன்ஸ்பெக்டரை வரவழைத்து நிலைமையைத் தெளிவாக விளக்கினார்.

இன்ஸ்பெக்டர் சமீபத்தில்தான் காக்கி உடுப்புக்குள் நுழைந்தவர் போலத் தெரிந்தார். கட்டை தட்டிப் போன கன்னங்கள் ஷேவிங் பசுமையில் மினுமினுத்தன.

ஜீப்பை விட்டு இறங்கியவர் தன் பெரிய மீசையை நிரடிக் கொண்டே நடந்தபடி சொன்னார்.

"டெல்லி கெட்டுப் போச்சு. தீவிரவாதிகள் ஊடுருவ ஆரம்பிச்சு க்ரைம் பெருகிப் போச்சு. ஸ்கூல் ஃபைனல் தாண்டாத பசங்க துப்பாக்கிகள் பிடிக்கக் கத்து வெச்சுருக்காங்க. மிஸ்டர் சூர்யப்பிரகாஷ்.. எந்தக் கடைல பர்ச்சேஸ் பண்ணினீங்க?"

அவன் அந்தத் துணிக்கடையைக் காண்பித்தான். சிகரெட் பிடிக்கப் போன பெட்டிக் கடையைக் காண்பித்தான்..

"இந்த வராந்தா வழியா அவன் உங்க ஒய்ஃபைக் கூட்டிட்டுப் போக சான்சே இல்லை. ஏன்னா நீங்க இங்கதான் இருந்தீங்க!"

"ஆமா ஸார். அந்தப் புடவைக் கடைக்கு இரண்டு என்ட்ரன்ஸ், இன்னொரு என்ட்ரன்ஸ் அடுத்த வராந்தாவில் இருக்கு."

சுற்றிக் கொண்டு அந்த வாயிலுக்கு வந்தார்கள்.

எதிர்த்தாற்போல இருந்த கடையில் விசாரித்தார் இன்ஸ்பெக்டர். அவர்கள் 'நாங்கள் யாரையும் கவனிக்கவில்லை' என்று ஜகா வாங்கினார்கள்.

"பயப்படறாங்க ஸார்."

"நாம விசாரிக்க வேண்டியது காம்ப்ளக்சுக்கு வெளியே! இந்த வராந்தாவைப் பயன்படுத்தி ஆசாமி வெளியே வந்திருந்தா காம்ப்ளக்சின் பக்கவாட்டு வாசலைத்தான் பயன்படுத்தியிருப்பான்."

சொல்லிக் கொண்டே இன்ஸ்பெக்டர் காம்ப்ளக்சின் பக்க வாட்டில் வந்தார். க்ரில் தடுப்புக்கு உள்ளே இருந்த பார்க்கிங் ஸ்பேசில் வாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்தன. தடுப்புக்கு வெளியே பிசியான

மெயின் ரோடு.

இன்ஸ்பெக்டர் அங்கிருந்த பான் ஷாப்காரனை அதட்டினார். அவன் நடுங்கிப் போய் "முஜே பதா நஹிஸாப்!" என்றான்

பார்க்கிங் டிக்கட் கிழித்துக் கொடுத்துக் கொண்டிருந்த ஐம்பத்தைந்து வயது ஆசாமியைப் பார்த்ததும் அவரை நெருங்கினார்.

"உம் பேரென்ன..?" சரளமான இந்தியில் கேட்டார்.

"நட்வர்லால்."

"உனக்கு இங்க டியூட்டி எத்தனை மணியிலிருந்து எத்தனை மணி வரை?"

"காலைல ஒம்பது மணிக்கு வந்தா... ராத்திரி பத்து மணி வரைக்கும் இருப்பேன் ஸார்."

"ஏழரை மணிக்கு நீ இங்கதானே இருந்தே?"

"ஆமா ஸார்."

"நட்வர்லால்! வயலட் கலர் புடவை கட்டின ஒரு பொண்ணை யாராவது சந்தேகத்துக்கிடமா கூட்டிட்டுப் போனங்களா?"

அந்த ஆசாமி தீவிரமாய் யோசித்தான். பிறகு "இல்ல ஸார்... அப்படி எதையும் நான் பார்க்கலை" என்றான்.

"இங்க பாரு... விவகாரம் பெரிசு. நீ எதையாவது மறைச்சிருக்கேன்னு பின்னால தெரிஞ்சா வசமா மாட்டிப்பே."

"நான் எதுக்காக ஸார் மறைக்கறேன்? நீங்க சொன்ன மாதிரி எதையும் நான் கவனிக்கவில்லை."

யோசனையுடன் இன்ஸ்பெக்டர் விலகி வந்தார்.

"பார்க்கிங் கிழவன்கிட்டே விபரம் எதிர்பார்க்கறது தப்பு."

"ஏன்?"

"கடத்துறவன் சாவகாசமா வண்டியை பாக்கிங்ல நிறுத்த மாட்டான்."

"அப்படின்னா?"

"என்னோட யூகப்படி குறைஞ்சது மூணு பேரோ, நாலு பேரோ இதில் இன்வால்வ் ஆகி இருப்பாங்க. ஒருத்தன் நீங்க கூப்பிட்டதா சொல்லி வாசலுக்குக் கூட்டிவர- இன்னொருத்தன் வேனை கரெக்டா வாசலுக்குக் கொண்டு வர - கண்ணிமைக்கும் நேரத்துக்குள் வந்தனாவை பலாத்காரப் படுத்தி வேனுக்குள்ளே தள்ளி - நிக்காமப் பறந்திருக்கணும்."



"இன்ஸ்பெக்டர்... அந்த க்ரில் தடுப்புக்குக் கீழே ஒரு பூட்பாலிஷ் பையன் உட்கார்ந்திருக்கான். அவன்கிட்டே விசாரிச்சுப் பார்த்தா என்ன?"

தயானந்த் சொல்ல-

அவனை நெருங்கி விசாரித்தார்கள். அவன் யோசித்து விட்டு-

"நான் பார்த்தேன் ஸார்!" என்றான்.

"என்ன பார்த்தே?"

"நீங்க சொன்ன மாதிரி வயலட் புடவை கட்டின ஒரு பெண்ணை வேன்ல ஏத்தினாங்க."

"ஒரு பெண்ணை வேன்ல கடத்திட்டுப் போயிருக்காங்க. அதைப் பார்த்த நீ உடனே போலீசில் சொல்ல வேண்டாமா?"

"அந்தப் பொண்ணு மயக்கமா இருந்தது ஸார். யாரோ உடம்பு சரியில்லாதவங்கன்னு நான் நினைச்சேன்."

"சூர்யப்பிரகாஷ்! வந்தனாவை மயக்கப்படுத்தி வேனில் ஏத்தியிருக்காங்க."

"வேன் நம்பர் கவனிச்சியா?"

"எனக்கு எழுதப் படிக்கத் தெரியாது ஸார்."

"கலர்?"

"கறுப்பு."

"அது என்ன வேன்னு தெரியுமா?"

"மெட்டடாரா? மிட்ஷுபிஷியா? எஸ்கார்டா? டாட்டாவா?

"அப்படின்னா?"

"வேன் ப்ராண்ட் ஐடென்ட்டிஃபை பண்ற அளவுக்கு இவனுக்கு நாலெட்ஜ் இல்லை இன்ஸ்பெக்டர்."

"இவன் பார்த்திருக்கான்! இருந்தும் ஒரு பிரயோஜனமில்லை. கறுப்புக் கலர் வேன்ங்கறதைத் தவிர எந்தத் தகவலும் இல்லை. ஸ்டிக்கர் ஏதாவது பார்த்தியா?"

"இல்ல ஸார். கறுப்பு வேன்ல நாலு பேர் வந்தாங்க. பொண்ணு வரவும், வேன் வரவும் சரியாயிருந்தது. பொண்ணை ஏத்திக் கொண்டு போய்ட்டாங்க. அவ்வளவுதான் ஸார் எனக்குத் தெரியும்."

காம்ப்ளக்ஸை ஒரு சுற்று சுற்றிக் கொண்டு ஜீப் அருகே வந்தபோது - ஒரு ஆள் நின்றிருந்தான்.

"இன்ஸ்பெக்டர், உங்களைத்தான் தேடிக்கிட்டு

இருக்கேன்.''

''என்ன விஷயம்?''

''உங்களுக்கு ஃபோன்.''

''எனக்கா? யார் கிட்ட இருந்து?''

''டி.ஐ.ஜி. பேசறார்.''

''போன் எங்க வந்திருக்கு? நான் இங்க இருப்பேன்னு டி.ஐ.ஜி.க்கு எப்படித் தெரியும்?''

''இதே காம்ப்ளக்ஸில் கேஸட் கடை வெச்சிருக்கேன் ஸார்... போலீஸ் டி.ஐ.ஜி என் போன்ல பேசினார். 'உங்க காம்ப்ளக்ஸ் வாசல்ல ஒரு போலீஸ் ஜீப் நிக்கும். அதுல வந்த இன்ஸ்பெக்டரை உடனே கூப்பிட்டு பேசச் சொல்லுங்க'ன்னு சொன்னார்!''

''நட...!'' அந்த ஆளின் பின்னால் போனார் இன்ஸ்பெக்டர்.

கண்ணாடி கேசுக்குப் பின் கேஸட் குவிந்திருந்தது. எக்ஸ்ட்ரா பேசில், 'ச்சோட்டீசி ஆஷா' என்று 'சின்னச் சின்ன ஆசை' இந்தியில் முழங்கியது. கடைப் பையனை வால்யூம் குறைக்கச் சொல்லிவிட்டு ரிசீவரைக் கொடுத்தான் அவன். அவர் வாங்கிப் பேசினார்.

''குட் ஈவினிங் ஸார், ஐ'ம் சிங்!''

மறுமுனை கரகரத்தது.

''நான் டி.ஐ.ஜி. இல்லை. எனக்கு இவ்வளவு மரியாதை வேண்டாம்.''

''யார் நீ...?''

''வந்தனாவைக் கடத்தின பேர்வழி நான்.''

''ராஸ்கல்!''

''திட்டாதீங்க. நான் வந்தனாவைத் திரும்ப ஒப்படைச்சிடறேன்.''

இன்ஸ்பெக்டர் திகைக்க - அவன் தொடர்ந்தான்.

''ஆமா இன்ஸ்பெக்டர் வந்தனாவைத் திருப்பித் தர்றோம். நீங்க நிக்கற இடத்திலிருந்து பழைய டெல்லியை நோக்கிப் போற வழியில் பத்தாவது கிலோ மீட்டர்ல வந்தனாவை நீங்க பார்க்கலாம்.''

''டொக்.''

ரிசீவர் தொடர்பை இழந்தது.

இன்ஸ்பெக்டரால் நம்ப முடியவில்லை. 'அவன் நிஜமாகத் தான் சொல்கிறானா?'

ஜீப்பில் ஏறினார்கள். அது டாப் கியரில் பறந்தது.

அடுத்த சில நிமிஷங்களில் அந்த இடத்தை



அடைந்தார்கள். ஹைவேஸ் ரோடு. நாவல் பழ இருட்டு. இன்ஸ்பெக்டர் டாஷ் போர்டிலிருந்து டார்ச்சை எடுத்து - அதன் வயிற்றில் இருந்த சுவிட்சை அழுத்தினார்.

மனிதச் சுவடே தெரியவில்லை.

''நம்மை அவன் வெட்டியா அலைக்கழிச்சிருக்கான்.''

இன்ஸ்பெக்டர் சொன்ன விநாடி-

தயானந்த், ''இன்ஸ்பெக்டர், அங்க டார்ச் அடிங்க'' என்றான் பதட்டத்தோடு.

வெளிச்சம் அங்கே விழுந்தது.

குப்புறக் கிடந்த வந்தனா ரத்தத்தில் நனைந்திருந்தாள். அவள் முதுகில் செங்குத்தாய் ஒரு கத்தி செருகிக் கிடந்தது. கத்தியின் கைப்பிடியில் ஒரு கடிதம்.

இன்ஸ்பெக்டர் கடிதத்தை விரித்தார்.

சூர்யப்பிரகாஷ்!

உன் அலட்சியத்திற்கு நாங்கள் தந்த விலை.

நீ கமாண்டோ பணியிலிருந்து விலக மறுத்தாய்.

அதற்கு இதோ எங்கள் ரத்தப் பரிசு!

குறிப்பு: இத்துடன் போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்டும் இணைக்கப்பட்டுள்ளது.

ரிப்போர்ட்:

பெயர் :வந்தனா

வயது : 21

பால் : பெண்

கொலைநடந்த நேரம் : 9.00 பி.எம்

நடந்த விதம் : எட்டு அங்குல கத்தியால் வயிறு, மார்பு ஆகிய இடங்களில் நான்கு முறை குத்தப்பட்டு ரத்த சேதாரமாகி உயிரிழந்தார்கள்.

இதர தகவல்கள் : கொலை செய்யப்படும் முன்பு நான்கு பேரால் மாறி மாறிக் கற்பழிக்கப்பட்டுள்ளாள்.

## 24

சனிக்கிழமை இரவு. பாரா விங் பிரிவின் அந்த உயரமான பகுதியில் சூர்யப் பிரகாஷ், தயானந்த், லெப்டினன்ட் ராஜப்பா, இன்னும் சில அதிகாரிகள் இருந்தார்கள். சூர்யப்பிரகாஷும் தயானந்தும் சிறப்பு கமேண்டோவுக்குரிய கரும் பச்சை உடைகளில் இருந்தார்கள்.

பாரா விங்கைச் சேர்ந்த ராடாரின் கண்களுக்குச் சிக்காத மைக்ரோ லைட் ஏர்க்ராஃப்ட் அலுமினிய உடம்போடு இறக்கையை விரித்துக் கொண்டு தயாராக நின்றிருந்தது.

லெப்டினன்ட் ராஜப்பா சூர்யப்பிரகாஷின் தோளைத் தட்டினார்.

''சூர்யப்பிரகாஷ்! நீ ஆபரேஷன் துவங்கும் முன்பே செயற்கரிய தியாகம் செய்து விட்டிருக்கிறாய்...

''ஸார்... ஒரு ராணுவ வீரனின் வாழ்க்கையில் இது போன்ற சோக அத்தியாயங்கள் இடம் பெறத்தான் செய்யும். நான் உறுதி குலையவில்லை. முன்பைவிட வேகம் பெற்றிருக்கிறேன். என் மனைவியின் மரணத்துக்குக் காரணமான அவர்களைச் சிதறடிக்க வேண்டுமென்ற வெறி என்னுள் அதிகரித்திருக்கிறது.

''திட்டம் சரியாக ஞாபகமிருக்கிறதா..?''

''எங்கேயும் பிசகாது.''

''மகுதி வரைபடம்?''

''இரண்டு பேரிடமும் ஆளுக்கொரு பிரதி இருக்கிறது.''

''பாராசூட்டைப் பரிசோதித்துக் கொண்டீர்களா?''

''பாராசூட் ரிலீசிங் மெக்கானிசத்தை ஒரு முறைக்குப் பலமுறை பரிசோதித்தோம். ஒழுங்காக வேலை செய்கிறது.''

''எண்ணை சரி பார்த்தீர்களா?''

''எட்டு, பதினேழு.''

லெப்டினன்ட் ராஜப்பா மணிக்கட்டை உயர்த்திப் பார்த்தார். ரேடியம் ஒளிர்ந்தது.

11.40.

''கெட் இன் த ஏர் க்ராஃப்ட்! ஆல் த பெஸ்ட்!''

மூன்று பேர் அமரக்கூடிய அந்த மைக்ரோ லைட்



த்ரீ ஸீட்டர் ஏர் க்ராஃப்டில் ஒருவர் பின் ஒருவராக சூர்யப் பிரகாஷும், தயானந்தும் ஏறி உட்கார்ந்தார்கள். முன்புறம் பைலட் ஏற்கனவே அமர்ந்திருந்தார்.

லெப்டினன்ட் ராஜப்பாவும், மற்றவர்களும் கண்ணாடிக்கு வெளியே இருட்டுக்குள் கையசைத்தார்கள்.

பைலட் ஹெல்மட் க்ளிப்பை தாடையில் சரிப்படுத்திக் கொண்டவர், ஏர்க்ராஃப்டின் உயிர்நாடியைத் தட்டினார். ஒயிட் பெட்ரோல் சேம்பரில் வெடித்தது. ப்ரொப்பல்லர்கள் அதிவேகத்தில் சுழன்றன. எதிரே இருந்த பேனல் போர்டில் அத்தனை மீட்டர்களும் கண்ணைச் சிமிட்ட - சிவப்பு, பச்சை முட்கள் சைபரைப் புறக்கணித்து அசைந்தன.

லீவரை நகர்த்த-

ஏர்க்ராஃப்ட் குலுங்கிவிட்டு - இருட்டு வானத்தில் உயர ஆரம்பித்தது.

கண்ட்ரோல் ரூம் ஆல்டிட்யூட் பற்றியும், மேகங்கள் பற்றியும் பைலட்டின் ஹெட் போனில் விடாமல் தகவல் சொல்லிற்று.

டெல்லி நகரம் கீழே...எ... கறுப்பு வெல்வெட் துணியில் கலர் கலராய் முத்துக்களைப் போட்டு வைத்த மாதிரி வெளிச்சப் புள்ளிகளாய்த் தெரிந்தது.

பத்தே நிமிஷங்கள்!

''மகுதியை நெருங்கி விட்டோம்!'' என்றார் பைலட்.

விமானம் அந்தப் பிராந்தியத்தை ஒரு ராத்திரி நேரக் கழுகு மாதிரி வட்டமடிக்க ஆரம்பித்தது. வட்டமிட்டுக் கொண்டே அதன் ஆல்டிட்யூட்டைக் குறைத்தார் பைலட் . குறிப்பிட்ட உயரத்தில் ஏர்க்ராஃப்ட்டை மிதக்க விட்டார்.

சூர்யப்பிரகாஷும், தயானந்தும் முதுகுகளில் பாராசூட்டை சுமந்தார்கள். பெல்ட்டை இறுக்கி ஹூக்கை மாட்டினார்கள்.

ஏர்க்ராஃப்ட்டின் அடிவயிறு ஒரு ஆள் நுழையுமளவு சதுரமாய்த் திறந்தது. அந்தத் திறப்பை அடைந்து நிற்க - வெளிக்காற்று இருவரையும் ஒருவர் பின் ஒருவராக ஜிவ்வென்று இழுத்தது.

காற்றில் தயானந்தும், சூர்யப்பிரகாஷும் சரேலென்று கீழ் நோக்கி நழுவ-

மைக்ரோ லைட் ஏர்க்ராஃப்ட் வந்த சுவடு தெரியாமல் மறைந்து போனது.

## 25

சொற்ப கிலோ மீட்டர் புவி ஈர்ப்பு விசையில் வேகமாய்க் கீழே வந்தவர்கள் - பாராசூட் பட்டன்களைத் தட்டினார்கள். நடுவானத்தில் பாராசூட்டின் குடை விரிந்தது. டெல்லியில் - குளிர் காற்றில் - அந்தரத்தில்

மெ....து...வா...க...

மிதக்க ஆரம்பித்தார்கள்.

இலக்கை நோக்கி இறங்க வேண்டியது முக்கியம். காற்றின் வேகத்தைக் கணித்து தகுந்த இடத்தில் ஏர்க்ராஃப்டை விட்டு எஜக்ட் ஆகி - தகுந்த இடத்தில் பட்டனைத் தட்ட வேண்டும்.

அந்தக் காரியத்தை சூர்யப்பிரகாஷும், தயானந்தும் மிகச் சரியாகச் செய்து இருந்தார்கள்.

கீழே மசூதியில் பெரிய கோபுரம் தெரிந்தது. மெல்ல மெல்ல அதன் உச்சியை நோக்கி இறங்கினார்கள்.

சில வினாடிகளில்-

மசூதியின் கோபுரத்தில் கால் பதிக்க -

கோபுர அமைப்பு இருவரையும் பனிக்கட்டி மாதிரி வழுக்கியது.

பாராசூட்டின் கயிறுகளை துரிதமாய் கோபுர உச்சியிலிருந்த பிறை அமைப்பில் சிக்க வைத்து - சிராய்ப்புகளோடு தொங்கினார்கள். பெல்ட்டிலிருந்து தங்களை சுதந்திரப்படுத்திக் கொண்டு கொஞ்சம் கொஞ்சமாய்க் கீழ் நோக்கி சரிந்தார்கள்.

தயானந்தின் சரியும் வேகத்தை சட்டென்று குறுக்கிட்டு தடைப்படுத்தினான் சூர்யப்பிரகாஷ்.

மேல் மாடத்தைக் காட்டினான்.

அங்கே ஒரு ஆசாமி ஏ.கே. 47ஐ கையில் தாங்கிக் கொண்டு நடந்து வந்து கொண்டிருந்தான்.

அவன் தாங்கள் இருக்கும் இடம் வரக் காத்திருந்தார்கள்.

அந்த இடம் வந்ததும்-

ஒரு திடீர் விநாடிகளில் தயானந்த் அவன் மேல்



மொத்தமாய்ப் பாய்ந்தான். தடுமாறியவனை சூர்யப் பிரகாஷ் துப்பாக்கியைத் திருப்பிப் பிடித்துத் தாக்கினான். சப்தம் போடத் திறந்த அவன் வாயை தயானந்த் பொத்தினான்.

'நச்!'

பின் மண்டையில் இன்னொரு அடி.

ஆள் மயங்கிச் சரிந்தான்.

கான்வாஸ் ஷூக்களை, சப்தமில்லாமல் அடியெடுத்து வைத்து - உள் மாடத்தில் குதித்தார்கள். அங்கிருந்த பெரிய தூண் இருட்டுக்குள் பதுங்கினார்கள்.

''கோன்?''

ஒரு கனத்த சத்தம் அடிவயிற்றில் பாய்ந்தது.

அந்த இருட்டுக்குள் அப்படியே பதுங்கியிருந்தார்கள்.

'கோன்?' என்று கேட்டவன் தனக்கு முன்னால் ஒரு டார்ச் வட்டத்தை ஓட விட்டுக்கொண்டே சத்தம் கேட்ட இடம் நோக்கி சற்று உற்றுப் பார்த்துக் கொண்டே வர ஆரம்பித்தான்.

மூச்சைப் பிடித்துப் பதுங்கியிருந்தார்கள் தயானந்தும், சூர்யப்பிரகாஷும். அவனுடைய டார்ச் ஒளி நாலா திசைகளிலும் - சுழன்று - அந்த துரதிர்ஷ்ட விநாடியில் சரியாய் அவர்கள் இருவரின் மேல் கொத்தாக விழுந்தது.

''கோன்? கோன் ஹை...?''

அவன் அதட்டலாகக் கத்தினான். உடனே ஒரு ரிவால்வர் அவன் கையில் முளைத்தது. அதை அவன் பிரயோகிக்கும் முன்பு - தயானந்த் தன்னுடைய மாக்னம் எட்டு எம்.எம். துப்பாக்கியைத் தட்டி விட்டான்.

'ஷ்....ஷ்...ஷ்...'

தோட்டா அவன் மேல் பாய்ந்தது.

தோட்டா சத்தம் கேட்டு - அடுத்த சில விநாடிகளுக்குள்-

தடதடவென்று பூட்ஸ் சத்தங்களோடு மசூதியின் உள் பிரகாரத்தைச் சுற்றிலும் துப்பாக்கிகளோடு ஆட்கள் தோன்றினார்கள்.

எல்லோருடைய கையிலும் துப்பாக்கிகள்.

இருவரும் தூண் மறைவுகளில் பதுங்கிப் பதுங்கி - சுட்டுக் கொண்டே தூண் விட்டுத் தூண்

பாய்ந்தார்கள்.

"இது எத்தனாவது தூண்?"

"ஏழு."

"எட்டாவது தூணுக்குக் கீழே தானே நிலவறை வழி?"

"ஆமாம்."

ஒரு சிரம விநாடியே மேற்கொண்டு எட்டாவது தூணுக்குத் தாவினார்கள்.

தடதடவென கீழே சரிந்தார்கள்.

கீழே-

கனத்த இருட்டு.

"தயானந்த்! பென் டார்ச் எடு."

பென் டார்ச்சை விடுவித்தான். அதன் விசையை அழுக்குவதற்குள் ஒரு முரட்டுக் கரம் அவனை வளைத்தது. தயானந்த் திமிற முயன்றான்.

"ம்...ம்..."

"தயானந்த்! என்னாச்சு..?"

அவன் தன்னிடமிருந்த பென் டார்ச்சை நாடியபோது அவனை இன்னொரு உருவம் மூர்க்கமாய் அழுக்கியது. திமிற முயன்று தோற்றுப் போனார்கள்.

நாற்காலிகளில் கட்டப்பட்டார்கள்.

"லைட்டைப் போடு!"

ஆங்காங்கே சுவிட்சுகள் ஆன் செய்யப்பட்டு வெளிச்ச வெள்ளம் குதித்தது.

தயானந்தும், சூர்யப்பிரகாஷும் கண்களை மலர்த்தினார்கள்.

சுற்றிலும் கறுப்பு உடையணிந்த தீவிரவாதிகள். உருதுவில் கூக்குரல்கள்.

"இந்திய ராணுவம்!"

"சிறப்பு கமேண்டோ!"

"தலைவரைக் கூப்பிடு."

செய்தி போனது.

சில விநாடிகளில்-

ஷெஃபீக் அஹமத் வந்து சேர்ந்தார்.

இருவரையும் பார்த்துப் புன்னகைத்தார்

"இந்திய ராணுவத்துக்காக ரொம்பவே விசுவாசமாக உழைக்கிறீர்கள் போலிருக்கிறது. என்ன பிரயோஜனம்! தாவூத்! இவர்கள் கட்டுக்களை அவிழ்த்து விடு."



தாவூத் முடிச்சுக்களை அவிழ்த்தான்.

கட்டுகள் முற்றிலும் நீக்கப்பட - எழுந்து நின்றார்கள் சூர்யப் பிரகாஷும் தயானந்தும்.

ஷெஃபீக் அஹ்மதை பார்த்து பெரிய குரலில் சிரித்தார்கள்.

ஷெஃபீக் அஹ்மத் புன்னகையுடன் விசாரித்தார்.

"ரொம்ப சிரமப்பட்டீர்களா உள்ளே நுழைய?"

"ஆமாம்! உங்களுக்குத் தெரியும் நாங்கள் உங்கள் நண்பர்கள்தான் என்று! மசூதியைச் சுற்றிக் காவல் காக்கும் இவர்களுக்கு எங்களைத் தெரியுமா? பாதுகாப்பு என்ற பேரில் எங்களை சிரமப்படுத்தி விட்டார்கள். வீரத்தைக் காட்ட வேண்டி வந்தது."

"இந்திய ராணுவம் உங்களை முழுமையாக நம்பியதா?"

"படு முழுமையாக! ராணுவம் எங்களுக்கு ஒரு சோதனை வைத்தார்கள். நீங்கள் தகவல் கொடுத்ததால் நாங்கள் நல்ல பிள்ளைகளாய் நடித்து அந்த சோதனையில் தேறினோம். அப்புறம் தயானந்த் தன்னுடைய ராணுவ பைக்கில் ஒரு டயனமைட் பொருத்தி ரிமோட்டில் வெடிக்க வைத்து அவன் பேரில் நல்லபிப்ராயம் தேடிக் கொண்டான். என்னுடைய மனைவி வந்தனா ஃப் க்வார்ட்டர்ஸ் பீஹாரியுடன் ரொம்ப நாளாகவே கள்ளத் தொடர்பு வைத்திருந்தாள். அவளைத் தீர்த்துக் கட்ட இது ஒரு நல்ல சந்தர்ப்பமாய் எனக்கு அமைந்தது. ஒரே கல்லில் இரண்டு மாங்காய்! ராணுவத்திடம் நல்ல பெயர். கள்ளத் தொடர்பு வைத்திருந்த வந்தனாவையும் சந்தேகத்துக்கிடமின்றி கொலை செய்தாகி விட்டாயிற்று. வெளியே உங்கள் ஆட்கள் நிறைய உதவினார்கள்."

ஷெஃபீக் அஹ்மத் சிரித்தார்.

"இப்போது இந்திய ராணுவத்தின் நம்பிக்கைக்குரிய கமேண்டோக்களாய் நீங்கள் இந்த மசூதிக்குள் நுழைந்துள்ளீர்கள்."

தயானந்த் சூர்யப்பிரகாஷை ஏறிட்டான். "நேரம் ஒன்று முப்பது! மைக்ரோ வேவில் நம் நிலைமையை இந்திய கண்ட்ரோல் ரூமுக்கு தெரிவிக்க வேண்டும்."

சூர்யப்பிரகாஷ் - கான்வாஸ் பையில் இருந்த அந்த கையடக்க கருவியை எடுத்து தட்டினான். பேசினான்.

"அலோ... ஸ்கை புல்ஸ்..."

''எஸ்... கண்ட்ரோல் ரூம்.''

''நாங்கள் பாதுகாப்பாக மருதிக்குள் நுழைந்து விட்டோம்.''

''குட்!''

''நிலவறையில்தான் தீவிரவாதிகள் முகாம்! அதிகாலைக்குள் நிலவறைக்குள் நுழைந்து அந்த இயக்கத்தின் இதய நாடியைக் கண்டு பிடித்து ஒடுக்கும் முயற்சியைத் துவக்குவோம். ஓவர்.''

''வெற்றிக்கு வாழ்த்துக்கள். ஓவர்!''

கருவியை அணைத்தான்.

ஷ°ஃபீக் அஹ்மத் மைக்ரோ வேவ் கருவியைப் பார்த்து சிரிக்க - அந்தச் சிரிப்பில் தயானந்தும், சூர்யப் பிரகாஷ"ம் பலமாய் கலந்து கொண்டார்கள். சுற்றி நின்றவர்களும் சிரிக்க ஆரம்பித்தார்கள்.

## 26

அந்த மருதியின் நில வறையில் உற்சாகம் சிதறியது. ஷ°ஃபீக் அஹமத் - சிரிப்பலை மிதக்க சூர்யபிரகாஷ், தயானந்தின் முதுகுகளைத் தட்டிக் கொடுத்துப் பேசினார். பொன்னிற திரவங்கள் பரிமாறப்பட்டன. ஒரு கோப்பையைக் கையில் வைத்துக் கொண்டு - ஷ°ஃபீக் சொன்னார். ''எங்களை வேவு பார்த்து மடக்குவதற்காக உங்கள் இருவரையும் தேர்ந்தெடுத்து அனுப்பிய இந்திய ராணுவத்தின் கடைந்தெடுத்த முட்டாள்தனத்தைக் கொண்டாடு வதற்காகவும் - இனிமேல் நாம் தொடுக்கப்போகும் தாக்குதல் திட்டங்கள் ஒவ்வொன்றும் பெறப்போகும் வெற்றியைக் கொண்டாடுவதற்காகவும் இந்தக் கோப்பை.''

சூர்யப்பிரகாஷ"ம், தயானந்தும் மிடறுகளை விழுங்கினார்கள். மாறி மாறிப் பேசினார்கள். ''இந்திய ராணுவத்தின் நம்பிக்கையைப் பெறுவதற்காக நாங்கள் ஒவ்வொரு முறையும் கத்தி மேல் நடக்க வேண்டியதாய் இருந்தது.'' ஷ°ஃபீக் குறுக்கிட்டுச் சொன்னார். ''திட்டமிட்ட ஆப்ரேஷன்கள் அத்தனையையும் வெற்றிகரமாய் நடத்தி முடித்த பின்னர் இதற்காக எங்கள் நாட்டில் உங்கள் இருவருக்கும் பெரிய கவுரவம் காத்திருக்கிறது. அது



மட்டுமல்ல... இந்த நிமிஷத்திலிருந்து நீங்கள் அரசாங்கத்திடம் கைநீட்டி சம்பளம் வாங்கும் அன்றாடங்காய்ச்சிகள் அல்ல. மில்லினர்கள். ஆமாம். இந்த ஆப்ரேஷன்களில் உங்களுடைய முக்கிய பங்களிப்புக்கு சன்மானமாய் சில மில்லியன்கள் காத்திருக்கின்றன.

அவர்கள் இருவரும் பிரகாசமான முகங்களோடு ஷ°ஃபீக் அஹமதைப் பார்த்தார்கள்.

''இது எங்கள் வாழ்க்கையின் சந்தோஷமான நிமிஷங்கள் மிஸ்டர் ஷ°ஃபீக். எங்களின் பணக்காரக் கனவுகளை நனவாக்க உதவிய உங்களுக்கு எப்படி நன்றி செலுத்துவது என்று புரியவில்லை.''

''அவசரப்பட வேண்டாம். இங்கே வந்து சேர்ந்ததோடு உங்கள் கடமைகள் முடிந்து விடவில்லை. இன்னும் செய்ய வேண்டிய காரியங்கள் நிறைய இருக்கின்றன. இனிமேல தான் நீங்கள் ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டியிருக்கிறது.''

அவர் சொல்லிக் கொண்டிருந்த நிமிஷம் - அறைக் கதவில் நிழலாடியது. எல்லோருமே திரும்பினார்கள்.

உயரமான முஸ்லீம் பெரியவர் ஒருவர் வந்து கொண்டிருந்தார். இலவம்பஞ்சு மாதிரி வெளுத்துப் போன தாடி தாடையைக் கவ்வியிருந்தது. ஏறக்குறைய ஷ°ஃபீக் அஹ்மதின் வயதிலிருந்தார். நீளமான சம்பிரதாய அங்கி அணிந்து இருந்தார். ஒரு மதகுருவின் கம்பீரமும், தேஜஸ"ம் அவரிடம் நிரம்பியிருந்தன.

ஷ°ஃபீக் அவரைப் பார்த்ததும் புன்னகைத்து வரவேற்றார். ''வாருங்கள் ஹாஜி...''

அருகாமை இருக்கையில் நிரம்பினார் ஹாஜி. சூர்யப்பிரகாஷையும், தயானந்தையும் ஒட்டாத பார்வை பார்த்தார்.

பிறகு ஷ°ஃபீக்கிடம் கேட்டார். ''ஏதோ அந்நிய ஊடுருவல் என்று கேள்விப்பட்டேன். ராணுவ ஆட்கள் இரண்டு பேர் மருதிக்குள் நுழைந்து விட்டதாகத் தகவல் வந்தது.''

''இவர்கள் தான் அவர்கள்.''

''இவர்களா? உட்கார வைத்து விருந்து அளித்துக் கொண்டு இருக்கிறீர்கள்?''

''நண்பர்களுக்கு விருந்தளிப்பதுதானே

நம்முடைய வழக்கம்.''

''நண்பர்களா?''

''ஆமாம் ஹாஜி. தோட்டாக்களையெல்லாம் தோழமைப் படுத்திக் கொண்டால் பிறகு துப்பாக்கிகளைப் பார்த்து பயப்படத் தேவையில்லை. இதுதானே நம் பாலிசி?''

''சரியாகச் சொன்னீர்கள். அப்படியானால் இந்திய ராணுவம் என்ற துப்பாக்கி நம்மை நோக்கிச் செலுத்திய இந்த இரண்டு தோட்டாக்களும் நம்முடைய தோழர்கள்?''

''ஆமாம். ஆரம்பத்திலிருந்தே இவர்கள் நம்முடைய செயல்திட்டப்படியே நடந்து வந்தவர்கள்'' சொன்ன ஷஃபீக் அஹமத் சூர்யப்பிரகாஷ், தயானந்திடம் திரும்பிச் சொன்னார். ''இவர் இந்த மஸ்ஜித்தின் பிரதம ஹாஜி! என்னுடைய இனிய நண்பர். இவருடைய உதவி இல்லையென்றால் எங்களுக்கு இந்த டெல்லியில் புகலிடம் கிடைத்திருப்பது கஷ்டம்தான். எங்களுடைய வெற்றியில் ஐம்பது சதவீதம் இந்த உத்திரவாதமான பாதுகாப்புத் தரும் மசூதி நிழலில்தான் அடங்கியிருக்கிறது.''

சூர்யப்பிரகாஷும், தயானந்தும் ஹாஜிக்கு வணக்கம் செலுத்தினார்கள். அவர் தாடிக்குள் புன்னகைத்து ஏற்றுக் கொண்டார்.

ஷஃபீக் விசாரித்தார். ''மேலே தொழுகை முதலானவைகள் வழக்கம்போல் நடைபெறுகின்றனவா?''

''ஆமாம்.''

''தொழுகைக்கு வரும் பொதுமக்களுக்கு சந்தேகம் அளிக்கும் அளவுக்கு யாரும் நடந்து கொள்வதில்லையே...?''

''இல்லை. நிலவறை ரகசியங்கள் வெளியாட்களுக்கு இம்மியளவு கூடத் தெரியாது.''

''மற்ற ஹாஜிகள் முரண்டு பிடிக்கிறார்களா?''

''அவர்களைத்தான் மிகவும் ஜாக்கிரதையாகக் கையாள வேண்டி இருக்கிறது. சந்தர்ப்பம் கிடைத்தால் நம் அனைவரையும் காட்டிக் கொடுக்கத் தயங்க மாட்டார்கள்.''

''சந்தர்ப்பம் கிடைத்தால்தானே! வெடிகுண்டு மிரட்டல் பலன் அளித்து இருக்கிறதா?''

''மசூதியைச் சுற்றிலும் தரையில்



புதைக்கப்பட்டிருக்கும் வெடிகுண்டுகள்தான் அவர்களைக் கட்டுப்பாட்டில் வைத்து இருக்கிறது. அவர்கள் தங்கள் உயிரைப் பற்றிக்கூடக் கவலைப்படாதவர்கள். 'காட்டித் தர முயன்றால் பொதுமக்கள் அனைவரும் கூடித் தொழும் வேளையில் மசூதியைச் சுற்றிலும் புதைக்கப்பட்டிருக்கும் வெடிகுண்டுகள் ரிமோட் கண்ட்ரோலில் வெடிக்கப்படும். பொதுமக்கள் சின்னாபின்னமாவார்கள். மசூதி தரைமட்டமாக்கப்படும்' என்ற மிரட்டல் தான் அவர்களைக் கட்டிப் போட்டிருக்கிறது.''

''இஸ்லாத்தின் வளர்ச்சிக்காகத்தானே இத்தனை போராட்டமும். மற்ற கிழங்கள் ஏன் புரிந்து கொள்ள மாட்டேனென்கிறார்கள்...?''

''இந்தியா...தாய்நாடு... என்றெல்லாம் பிதற்றுகிறார்கள். அவர்களைத் திருத்தவே முடியாது. இந்தியா கூடிய சீக்கிரம் நம் நாட்டின் ஆளுகைக்குக் கீழே வரவேண்டும். அதற்கு என்னுடைய முழு ஒத்துழைப்பும் கண்டிப்பாக உண்டு.''

''ஒவ்வொருவருக்கும் இந்த மாதிரி உணர்வு தோன்றினால் அது விரைவில் ஈடேறும். ஆனால் இங்கிருப்பவர்கள்... நான் முதலில் இந்தியன்... அப்புறம்தான் முஸ்லீம்... என்றெல்லாம் முட்டாள்தனமாகப் பிதற்றிக் கொண்டு இருப்பதைத்தான் என்னால் சகித்துக் கொள்ள முடியவில்லை.''

''இந்திய ராணுவத்துக்கெதிராக உங்கள் அடுத்த நடவடிக்கை என்ன ஷஃபீக்?''

ஹாஜி கேட்டதும்-

ஷஃபீக் அஹமத் சொல்ல ஆரம்பித்தார்.



## 27

அந்தச் சிறிய வீடு மயானத்தை ஒட்டினாற்போல இருந்தது. உள்ளிருந்து ஜூலி வெளிப்பட்டாள். மூன்றாம் பிறை புருவங்களுக்குக் கீழே கறுப்புப் பவுர்ணமியாய் விழிகள். ஒரு இந்தி நடிகைக்குரிய எல்லா லட்சணங்களும் அவள் அணிந்திருந்த நீளமான கறுப்பு அங்கிக்குள்

அடங்கியிருந்தன.

வீட்டைப் பூட்டிக் கொண்டபின் பர்தாவால் முகத்துக்குத் திரை போட்டுக் கொண்டாள்.

விடுவிடுவென அருகாமையிலிருந்த மயானத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

அவள் வீட்டைக் கடந்ததுமே - செடி மறைவுகளில் பதுங்கியிருந்த இரண்டு பேர் சட்டென வெளிப்பட்டார்கள். இருவரிடமும் கனமான ஆயுதங்கள் - இடுப்பு பெல்ட் அருகே மறைந்திருந்தன.

இடைவெளி விட்டு ஜரினாவை அவர்கள் பின்தொடரத் துவங்கினார்கள். முட்புதர்களுக்கு நடுவே போன ஒற்றையடி மண் பாதையை சிறிது தூரம் கடந்ததும் - பச்சை நிற பெயிண்ட்டில் குளித்த நுழைவு வளைவு வந்தது.

அந்த வளைவின் நெற்றியில் பிறையும், நட்சத்திரமும் வரையப்பட்டு உருதில் **'கப்ரஸ்தான்'** என்று எழுதியிருந்தது.

அலுமினியம் பெயிண்ட் அடித்த உயரமான க்ரில் கேட்டை லேசாகத் தள்ளினாள். எண்ணெய் வேண்டும் என்று கதறியது கேட்.

ஆங்காங்கே வேப்பமரங்கள் அடர்ந்திருந்தன. அவற்றுக்கிடையே திட்டுத் திட்டாக கல்லறைகள்.

ஜரினா கல்லறைகளுக்கு நடுவே நடந்தாள்.

மரச் சருகுகள் கால்கள் பட்டு 'சர்க் சர்க்' என சப்தம் கிளப்பின.

நடந்து கொண்டே சென்றவள் - காதுகளை உன்னிப்பாக்கிக் கொண்டு சட்டென நின்றாள்.

சர்க்...

சர்க்...

சர்க்...

அவள் நின்ற பின்பும் தொடர்ந்து இரண்டு மூன்று தரம் சருகுகள் மிதிபடும் சப்தம் கேட்டது.

திரும்பினாள் ஜரினா.

''யாரது..?''

மறுபடியும் கேட்டுக்கொண்டே - பார்வையை நாலா திசையிலும் உன்னிப்பாக சுழற்றினாள்.

அந்த தடித்த மரத்துக்கருகே பார்வை போனதும் - மரத்துக்குப் பின்புறம் இருந்து இரண்டு மனித உருவங்களின் நிழல்கள் விழுந்திருப்பதை உணர்ந்



தாள். விடுவிடுவென அந்த மரத்தை நோக்கி வந்து -

''யார்?'' - என்றாள் அதட்டலாக.

அவர்கள் இருவரும் மெதுவாய் வெளிப்பட்டார்கள். கையில் துப்பாக்கிகள் இருந்தன.

''நாங்கள்தான் மேம்ஸாப்.''

அவள் சலிப்பாய் அவர்களைப் பார்த்தாள்.

''நீங்கள் இன்னும் இந்த இடத்தைப் விட்டுப் போகவில்லையா?''

''நாங்கள் போக மாட்டோம் மேம்ஸாப். போகக்கூடாது என்பது எங்களுக்கு இடப்பட்டிருக்கும் உத்தரவு.''

''தயவு செய்து என்னைப் பின்தொடர வேண்டாம். எனக்கு சுதந்திர உணர்வு பறிபோனது போல இருக்கிறது.''

''உங்கள் சுதந்திரத்துக்கு நாங்கள் எந்த வகையிலும் குறுக்கீடு இல்லை மேம்ஸாப். உங்களுடைய பாதுகாப்புக்காகத்தான் நாங்கள் இருக்கிறோம்.''

''எனக்குப் பாதுகாப்பு தேவையில்லை.''

''அப்படிச் சொல்லாதீர்கள். இந்திய ராணுவ ஆட்களால் உங்களுக்கு ஆபத்து நேர வாய்ப்புகள் இருக்கின்றன.''

ஜரீனா அலட்சியமாய்ச் சிரித்தாள்.

''இந்திய நாய்களால் என்னை எதுவும் செய்ய முடியாது. என்னை நானே பாதுகாத்துக் கொள்ளுவேன். எனக்குப் பாதுகாப்புத் தருவதாக எண்ணிக் கொண்டு உங்களுடைய நேரத்தை வீணாக்க வேண்டாம். உங்கள் பொன்னான நேரம் ஒரு இந்திய சிப்பாயை அழிப்பதற்குப் பயன்பட்டால் அது பெருமை தரக்கூடிய விஷயம்.''

''உங்கள் வீரம் எங்களை மகிழ வைத்தது. ஆனால் தலைவரின் கட்டளையை நாங்கள் மீற முடியாது. உங்களுக்குப் பாதுகாப்பு தருவது மட்டுமல்ல... இந்த ரகசியப் பாதையை யாரும் மோப்பம் பிடித்து விடாமல் பார்த்துக் கொள்ளுவதும் எங்களின் கடமைதான்.''

ஜரினா புன்னகைத்தாள்.

''நானே அதிஜாக்கிரதையாகத்தான் ஒவ்வொரு அடியையும் எடுத்து வைக்கிறேன். இல்லையென்றால் நீங்கள் பின்தொடர்ந்ததை நான் கவனித்திருக்க முடியாது. என்னை மீறி யாரும் இந்தப் பாதையை

மோப்பம் பிடிக்க முடியாது.''

''என்ன இருந்தாலும் நீங்கள் பெண். விபரீதமாக எதுவும் நடந்து விட்டால் உங்களால் சமாளிக்க [illegible]யாது..!''

''ரஸியா பேகம் தெரியுமா?'' ஜரினா சிரித்தபடி கேட்டாள்.

''யார் அது?''

''சில நூறு வருஷங்களுக்கு முன்னால் இதே டெல்லியைக் கைப்பற்றி ஆட்சி நடத்திய ஒரு வீரம் நிறைந்த முஸ்லீம் அரசி. துணிச்சலாய்ப் பல போர்க்களம் கண்டவள். அவளுக்கு முன்னால் அத்தனை ஆண்களும் அடங்கிப் போவார்கள். சின்ன வயதிலிருந்தே அந்த ரஸியா பேகத்தை முன்மாதிரியாக வைத்து வளர்ந்தவள் நான். பாகிஸ்தானின் இந்தப் புனிதப் போரில் நானும் ஒரு ரஸியா பேகமாகப் பங்களிக்க வேண்டும் என்று ஆசை!''

''நம் அத்தனை பேரின் ஆசையும் ஈடேறும் நாள் தொலைவில் இல்லை மேம்ஸாப். இந்திய ராணுவத்தின் அஸ்திவாரத்தைப் படிப்படியாக அசைத்து வருகிறோம். முடிவில் இந்திய ராணுவம் சரியப் போகிறது.''

''சந்தோஷம் அளிக்கும் வார்த்தை! எனக்கு நேரமாகிறது. வருகிறேன்.''

''கிளம்புங்கள் மேம்ஸாப்.''

ஜரினா கல்லறைகளுக்கிடையே நடந்து - சிதிலமடைந்த அந்தப் பழமையான கல்லறைக்கருகில் வந்தாள்.

இந்தி எழுத்துக்களும் உருது எழுத்துக்களும் யாரோ ஒருவரின் தோற்றம் - மறைவை மங்கலாய்ப் பறை சாற்றிக் கொண்டிருந்தது. பாசம் பிடித்த கல்லறைத் திட்டின் மேல் ஏராளமாய் சருகுகளும், தூசியும் அப்பிக் கிடந்தன.

சருகுகளை விலக்கினாள் ஜரினா.

ஒரு சாவித் துவாரம்.

கோணல் மாணலாய் நெளிந்த ஓர் இரும்புச் சாவியை அந்த துவாரத்திற்குள் செலுத்தினாள்.

படக்கென்று சப்தம்.

கல்லறை ஒரு கதவு போலத் திறந்தது.

உள்ளே -

இருட்டாய் ஒரு பாதை சென்றது.

## 28

ஜரினா அந்த ரகசிய சுரங்க வழியாக பகுதியின் நிலவறையை அடைந்தாள். அந்த அறையில் பிரவேசித்தாள் - அறைக்குள் ஷஃபீக் அஹமத், நஜாஜி தவிர யூனிபாரம் அணிந்த இரண்டு இந்திய ராணுவத்தினரைப் பார்த்ததும் திடுக்கிட்டுப் போனாள்.

பதட்டத்துடன், ''வாப்பா..!'' என்று முனகி திகைத்து நின்றாள்.

அவளுடைய கலவரத்தைப் புரிந்து கொண்ட நஜாஜி மெலிதாய்ப் புன்னகைத்தார்.

''பயப்படாமல் உள்ளே வா ஜரினா..! இவர்கள் நண்பர்கள்தான்.''

''ராணுவ உடைகளில் இருக்கிறார்களே..?''

''இந்திய ராணுவத்தைச் சேர்ந்தவர்கள்.''

''வாப்பா... நீங்கள் சொல்வது எனக்குப் புரியவில்லை. இந்திய ராணுவத்தைச் சேர்ந்த ஒரு துரும்பைக்கூட நாம் பரமவைரியாகத்தான் கருதுகிறோம். அப்படியிருக்க...''

ஷஃபீக் குறுக்கிட்டான்.

''ஜரினா... உன்னுடைய வாப்பா உன்னை குழப்பிவிட்டார் என்று நினைக்கிறேன். நான் புரியும்படியாகச் சொல்கிறேன். இவர்கள் இந்திய ராணுவத்தின் நம்பிக்கையைப் பெற்றுள்ள நம்முடைய ஆட்கள்! நம்மை உளவு பார்ப்பதற்காக இவர்களிருவரையும் சிறப்பு கமேண்டோக்களாகத் தேர்ந்தெடுத்து இங்கே அனுப்பியிருக்கிறது - இந்திய ராணுவம்.''

''இதென்ன கேலிக் கூத்து?''

''கேலிக்கூத்து அல்ல. நம்முடைய சதுரங்கக் காய்கள் சரியான திசையில் நகர்ந்திருக்கின்றன. எதிரியின் நம்பிக்கையை முழுசாய்ப் பெறுவதென்பது விளையாட்டுக் காரியமல்ல. அதில் இதோ சூர்யப்பிரகாஷும், தயானந்தும் வெற்றி கண்டு இருக்கிறார்கள்.''

ஜரினா அவர்களைப் புன்னகையோடு பார்த்தாள்.

''நான் ஒரு நிமிஷம் அதிர்ந்து போய் விட்டேன்!''

''யார் இந்தப் பெண்?'' தயானந்த் கேட்டான்.

''இவள் ஜரினா. ஹாஜியின் ஒரே மகள். இந்த நிலவறைக்குள் நம் நிழல் ராஜ்ஜியம் நடக்கப் பெரிதும் உறுதுணையாய் இருப்பவள். இங்கே நாம் தங்கியிருப்பது மேலே ஐந்து வேளையும் தொழுகைக்கு வரும் பொதுமக்கள் யாருக்கும் தெரியாது. ஆகவே, மேல் வழியாக நிலவறைக்கு எந்தப் பொருளையும் கொண்டு வருவதென்பது முடியாது. எனவே இங்கே பதுங்கியுள்ள நமக்கு ரகசிய சுரங்க வழியே உணவுப் பொருள்கள் கொண்டு வந்து சேர்ப்பது ஜரினாவின் அன்றாட காரியம்'' ஷெஃபீக் சொல்லச் சொல்லவே-

ஜரினா தான் கொண்டு வந்திருந்த பெரிய கூடையிலிருந்து குடான் டிபன் கேரியர்களை எடுத்து வெளியே வைத்தாள்.

## 29

**செ**ன்ட்ரல் கமேண்ட் ஹெட்குவார்ட்டர்ஸ்.

கண்ட்ரோல் அறையில் லெப்டினண்ட் ராஜப்பா பரபரப்போடு காத்து இருந்தார்.

வயர்லஸ் ரிசீவர் சாதனங்கள் தயார் நிலையில் இருந்தன. ராஜப்பா வாட்சைப் பார்த்தபடியே குறுக்கும் நெடுக்கும் அலைந்தார்.

10.28.

அங்கிருந்த இன்னொரு ராணுவ ஆபீஸரைப் பார்த்துக் கேட்டார்.

''அவர்கள் மசூதிக்குள் நுழைந்திருப்பார்களா?''

''நிச்சயமாக நுழைந்திருப்பார்கள் ஸார். தயானந்த், சூர்யப்பிரகாஷ் இரண்டு பேரின் திறமையிலும் எனக்குக் கொஞ்சங்கூட சந்தேகமில்லை.''

ராஜப்பா நெற்றியை சுருக்கிக் கொண்டு சொன்னார். ''என்னவோ தப்பு நிகழ்ந்து விட்டது போல என்னை உள்ளுணர்வு எச்சரித்துக் கொண்டே இருக்கின்றது.''

''ஏன் ஸார் அப்படிச் சொல்லுகிறீர்கள்..?''

''அவர்கள் மசூதியின் கோபுரத்தை விடிகாலையில் அடைவதாய்த் திட்டம். ஆறு மணிக்கெல்லாம் ஃபர்ஸ்ட் இன்ஃபர்மேஷனை வயர்லெஸ்ஸில்



அனுப்பச் சொல்லி இருக்கிறோம். ஆனால் அவர்களிடமிருந்து எந்தத் தகவலும் இல்லை. அடுத்து ஒன்பது மணிக்குக் தொடர்பு கொள்ளுவார்களென்று எதிர்பார்த்தேன். தொடர்பு கொள்ளவில்லை.''

''வயர்லெஸ்ஸில் பேசுவதற்குரிய சந்தர்ப்பம் அமைந்திருக்காது ஸார். அவர்கள் நுழைந்திருப்பது ஆபத்தான இடம். எதிரிகள் நெற்கும் அருசாதவர்கள். அங்கிருந்து நம்மைத் தொடர்பு கொள்ளுவதென்பது பெரிய காரியம் தான்.''

''அதனால்தான் சற்று அச்சப்படுகிறேன். சூர்யப்பிரகாஷ், தயானந்த் இருவருக்கும் ஆபத்து எதுவும் நேராதிருக்க வேண்டும் என்று கவலைப்படுகிறேன்.''

''ஆபத்து எதுவும் நேராது என்றே நம்புவோம்.''

அந்த ஆபீஸர் சொன்ன விநாடி-

பீப்...

பீப்...

பீப்...

அந்த பிரத்யேக வயர்லஸ் கருவியில் சிவப்பு விளக்கு உயிர் பெற்று - விட்டுவிட்டுக் குரல் எழுந்தது.

ராஜப்பா சாதனத்துக்கு அருகில் சென்று பொத்தான்களை அழுத்தினார்.

சங்கேத எண்கள் பரிமாறப்பட்டன.

மறுமுனையிலிருந்து கரகரத்த குரல்.

''பாரா விங்கைச் சேர்ந்த சிறப்புக் கழுகுகள்.''

''ஹெட் குவார்ட்டர்ஸ்! ஆப்ரேஷன் ப்ரொக்ரெஸ்ஸிங் என்ன?''

''சரியாகவே உள்ளது.''

''ஆர் யு ஸேஃப்?''

''மசூதியின் ஒரு மறைவிடத்தில் பாதுகாப்புடன் பதுங்கி இருக்கிறோம்.''

''அங்கே நிலவரம் என்ன?''

''தீவிரவாதிகள் பதுங்கியிருக்கிறார்கள். ஆனால் அவர்களை மடக்குவது அவ்வளவு சுலபமில்லை.''

''ஏன்?''

''ஏராளமான ஆயுதத் தளவாடங்களோடு இருக்கிறார்கள். மசூதிக்கு எந்த சேதமும் இல்லாமல் தலைவர்களை மடக்குவததென்பது இயலாத

காரியம்.''

''என்ன செய்யலாம்?''

''அவர்கள் சதித்திட்டங்கள் குறித்து தகவல் சேகரித்து அனுப்ப முயல்கிறோம். அவைகளை முறியடிப்பதில் நம்முடைய பாதி வெற்றி அடங்கியுள்ளது.

''அது மட்டுமல்ல. அங்கே உள்ள ஆள்பலம்... ஆயுத பலம் எவ்வளவு... அவர்களின் பாதுகாப்பு அரண் என்ன என்ன... இந்த புள்ளி விவரங்களையெல்லாம் சேகரித்து அனுப்புங்கள். அதை அனுசரித்து அவர்களை மடக்குவதற்கான செயல்திட்டங்களை நாங்கள் தீட்டிக் கொடுக்கிறோம். அவசியம் ஏற்பட்டால் இன்னும் சில கமேண்டோக்களை தயார் செய்து அனுப்புகிறோம்.'' -

''ஊடுருவல் அதிகமானால் மாட்டிக் கொள்ளுகிற வாய்ப்புகள் அதிகமாகும். அதனால் இப்போதைக்கு வேறு கமேண்டோக்களை அனுப்பாதிருப்பதே உசிதம் என்று கருதுகிறோம். நடமாட்டங்கள் கேட்கின்றன. மீண்டும் விரைவில் தொடர்பு கொள்கிறோம். ஜெய்ஹிந்த்.''

வயர்லஸ் சலனங்கள் அணைந்தன.

ராஜப்பா நிம்மதிப் பெருமூச்சு விட்டார்.

''அவர்கள் மகுதிக்குள் ஊடுருவி விட்டார்கள். அந்தத் தீவிரவாதிகளை ஒடுக்குவதில் வெற்றியை நோக்கி முதல் அடி எடுத்து வைத்து விட்டோம்.''

## 30

தயானந்த் வயர்லஸ்ஸில் பேசி முடித்தவுடன் - ஷ°ஃபீக் புன்னகையுடன் பலமாய்க் கைதட்டினார்.

''சந்தேகம் வராத வகையில் அருமையாகப் பேசிவிட்டாய் தயானந்த்.''

''நீங்கள் சொல்லிக் கொடுத்ததை அப்படியே திரும்பச் சொல்லியிருக்கிறேன்... அவ்வளவுதான்.''

சூர்யப்பிரகாஷ், ஷ°ஃபீக் அறைமதை ஏறிட்டான்.

''நாங்கள் மறைவிடத்தில் பதுங்கியிருப்பதாகத் தகவல் தரச் சொன்னீர்கள்... சரி, ஆனால் உங்கள் சதித்திட்டங்கள் பற்றித் தகவல் சேகரித்து அனுப்புவதாகச் சொல்லச் சொன்னீர்களே... ஏன்...?''



''அப்போதுதான் அவர்களுக்கு நம்பிக்கை பலப்படும்.''

''நாளைக்கு வயர்லஸ்ஸில் தொடர்பு கொள்ளும் போது மேற்கொண்டு தகவல்கள் கேட்பார்களே..?''

''அவர்கள் கேட்பார்களோ இல்லையோ... சில தகவல்களை நீங்கள் சொல்லத்தான் போகிறீர்கள்...''

''புரிகிறது... பொய்யான தகவல்கள் அவர்களுக்குச் சொல்ல வேண்டும். அப்படித்தானே..?''

''பொய்யான தகவல்கள் தந்தால்... உங்கள் சாயம் வெளுத்துப் போகும். சுலபத்தில் நம்பிக்கை இழந்து விடுவீர்கள்.''

''அதனால்..?''

''பாதி பொய்யும், பாதி உண்மையும் கலந்த தகவல்களை அவர்களுக்கு நீங்கள் வயர்லஸ் மூலம் அளிக்கப் போகிறீர்கள்.''

''புரியவில்லை.''

''உதாரணத்துக்கு... நாளைக்கு நீங்கள் இந்திய ராணுவத்துக்கு அளிக்கப் போகும் தகவல் இதுதான். **மூர்பிண்டி காடுகளில் சௌத் பெல்ட்டில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் ஆயுதங்கள் பதுக்கி வைத்திருக்கிறார்கள். நாலாம் தேதி இரவு ஏழு மணிக்கு இந்திய தீவிரவாத இயக்கங்களோடு ஆயுத பேரங்களும் நடத்த இருக்கிறார்கள்.''**

''இதில் உண்மை எது... பொய் எது?''

''ஆயுதங்கள் அங்கே பதுக்கப்பட்டிருப்பது உண்மை. ஆனால் பேரம் நடக்க இருப்பதாகச் சொல்லுவது பொய். உங்கள் தகவலைக் கேட்டு ராணுவத்தினர் அந்த ஃபாரஸ்ட் பகுதியைச் சுற்றி வளைப்பார்கள். அவர்களுக்கு ஆயுதங்கள் கிடைக்கும். உங்கள் தகவல் சரிதான் என்பது உறுதியாகும். ஆனால் பேரம் எதுவும் நடக்காது. அங்கே பதுக்கப்பட்டிருக்கும் பழைய ரக ஆயுதங்களோடும் ஏமாற்றத்தோடும் திரும்பிப் போவார்கள்.''

''இதனால் உங்களுக்கென்ன லாபம்?''

''இருக்கிறது. மூர்பிண்டி காடுகளில் தீவிரவாதிகளை இந்திய ராணுவத்தினர் மும்முரமாய்த் தேடிக் கொண்டிருக்கையில் - நாம் டெல்லி நகரத்தின் மையத்தில் அம்பாஸிடர்கள் வசிக்கும் முக்கிய தெருவில் ஒரு பயங்கர சதித்திட்டத்தை நடத்தப்

போகிறோம்."

சூர்யப்பிரகாஷும், தயானந்தும் சட்டென நிமிர்ந்து ஷஃபீக் அஹமதைப் பார்த்தார்கள்.

"என்ன திட்டம்?"

ஷஃபீக் புன்னகைத்தார். சொன்னார்.

"ஒரு பந்து விளையாட்டு!"

## 31

**வ**யர்லஸ் தகவல் வந்ததும் லெப்டினண்ட் ராஜப்பாவைப் பரபரப்பு தொற்றியது. இண்டர்காம் பொத்தானை அழுத்தினார். மறுமுனையில் குரல் வந்ததும் பேச ஆரம்பித்தார். "மூர்பிண்டி ஃபாரஸ்ட் மேப் உடனே எனக்குக் கொடுத்தனுப்ப வேண்டும். ஸ்டுவார்டன் ஆபீஸர் குருவையும் கூட்டி வாருங்கள்."

ரிசீவரைச் சாத்தினார்.

ஐந்தாவது நிமிஷம் - கதவு தட்டப்பட்டு "மே ஐ கமின் ஸார்?" என்று குரல் கேட்டது.

"கமின்."

கதவு திறந்து ஸ்டுவார்டன் ஆபீஸர் குரு இரண்டு துணை அதிகாரிகள் சகிதமாய் பதட்டமாய் உள்ளே வந்தார்.

ஒருவர் ஃப்ளாஷ்லைட்டுக்குக் கீழே இருந்த சுவர் ஆணியில் கேன்வாஸ் மேப்பை மாட்டினார். கேன்வாஸ் - பாய் விரிந்த மாதிரி மடமடவென விரிந்து சுவரோடு சுவராய் அப்பி நின்றது.

வெள்ளைப் பின்புலத்தில் சிலந்திக் கூடு போல பின்னல் பின்னலாய்க் கறுப்பு வரிகள். ஆங்காங்கே பல சங்கேத அடையாளங்கள். கீழ்மூலையில் வரைபடத்தின் விகிதாச்சாரம் குறித்திருந்தது. ராஜப்பா அவர்களிடம் சொன்னார்.

"சூர்யாப்பிரகாஷ், தயானந்திடமிருந்து தகவல் வந்திருக்கிறது."

"என்ன தகவல் ஸார்..?"

"இன்றைக்கு ராத்திரி ஏழு மணிக்கு இந்திய - பாகிஸ்தான் தீவிரவாதிகளுக்கிடையே ஆயுதப் பரிமாறல் நடக்கப் போகிறது."

"இஸிட்? எங்கே?"



"இந்த மூர்பிண்டி வனப்பகுதியில்."

"மிகப் பெரிய ஃபாரஸ்ட் ஆயிற்றே. அந்தக் காட்டை சல்லடை போட்டுத் தேடவே இருக்கிற கால அவகாசம் போதாதே..?"

"ஸௌத் ஜோன் பெல்ட்டில்தான் ஆயுதங்கள் பதுக்கப்பட்டிருப்பதாக இடக் குறிப்பு தந்திருக்கிறார்கள்."

துணை அதிகாரி ஃப்ளாஷ் லைட்டைத் தட்டினார். மெர்க்குரி வெளிச்சத்தில் மேப் பளீரென்று தெரிந்தது.

"ஸௌத் ஜோன் பெல்ட்டைக் குறித்துக் காட்ட முடியுமா?"

சிவப்பு நிற பார்க்கர் பேனா கேன்வாஸின் மேல் ஊர்ந்து ஒரு அமீபா போல வடிவம் பெற்றது.

"பெரிய பரப்புதான். இரண்டு பட்டாலியன்கள் மொத்தமாய் ஊடுருவினால்தான் ஏழு மணிக்குள் மொத்தப் பகுதியையும் நாம் வளைக்க முடியும். மேஜரிடம் இருந்து முறையான அனுமதி இன்னும் சிறிது நேரத்தில் வந்துவிடும். நீங்கள் பட்டாலியன்களை எந்த நிமிடமும் புறப்படத் தயார் நிலையில் வைத்திருங்கள்."

ஸ்டுவார்டன் ஆபீஸர் குரு வேகமாய் எழுந்தார்.

## 32

**சூ**ர்யப்பிரகாஷும், தயானந்தும் குழப்பமான பார்வையில் ஷஃபீக் அஹமதைப் பார்த்தார்கள்.

"பந்து விளையாட்டா..?"

ஷஃபீக் இன்னமும் புன்னகைத்துக் கொண்டிருந்தார்.

"ஆமாம், சற்று ஆபத்தான பந்து விளையாட்டு. அரை சதுர கிலோ மீட்டர் பரப்புக்குள் இருக்கும் அத்தனை ஜனங்களையும் சத்தமில்லாமல் சாகடிக்கக் கூடிய பந்து விளையாட்டு."

"புரியவில்லையே!"

ஷஃபீக் அஹமத் கையைத் தட்டி தட்டி எழுப்ப - கறுப்பு உடை தீவிரவாதி ஒருவன் பவ்யமாய் வந்து நின்றான்.

"அந்த 'டெட்லி பால்' (Deadly Ball) எடுத்து வா."

அவன் தலையசைத்து விட்டு உள்ளே சென்றவன் - ஒரு இரும்புப் பெட்டியுடன் திரும்பி வந்தான்.

கைக்கு அடக்கமான ஒரு சதுர வடிவ சூட்கேஸ் போலிருந்தது அந்தப் பெட்டி. வெளிப்புறங்கள் அடர்த்தியாய்க் கறுப்படித்துப் போயிருந்தன. மெல்ல அதை அவர்கள் முன்னே வைத்தான்.

"திற..."

ஷஃபீக் கட்டளையிட - பெட்டியின் வாயை விடுவித்தான்.

சூர்யப்பிரகாஷ், தயானந்தின் பார்வைகள் அந்தப் பெட்டியின் மேலேயே நிலைத்திருந்தன.

ஷஃபீக் உள்ளிருந்து அதை எடுத்தார்.

கண்ணாடிப் பேப்பர் போன்ற உருண்டை அமைப்புக்குள் அழுத்தமாய் உறங்கிக் கொண்டிருந்தது அந்த டெட்லி பால்.

"இதுதான் நான் சொன்ன பந்து! எம்பனி தெருவில் இந்தப் பந்தை வைத்துத்தான் நாம் ஒரு மரண விளையாட்டு காட்டப் போகிறோம்."

"எப்படி?"

"இது வெடிகுண்டா?" என்றான் சூர்யபிரகாஷ்.

"வெடிகுண்டு இல்லை. பாஸ்பரஸ், குளோரைட் போன்ற ரசாயனப் பொருட்களின் கலவை இந்தப் பந்தினுள் உள்ளது. உருண்டையான - சீலிடப்பட்ட பாலிதீன் உறையினுள் குறிப்பிட்ட அழுத்தத்தில் வைக்கப்பட்டுள்ளது. மிக நவீனமான ரசாயன ஆயுதம்."

"இதைக் கொண்டு எப்படித் தாக்குதல் நடத்தப் போகிறோம்?"

"சுலபம்! தாக்குதல் தொடுக்க வேண்டிய இடத்தில் இந்தப் பந்தை வைக்க வேண்டியது... பாலிதீன் உறையை உடைத்துவிட வேண்டியது."

"என்ன ஆகும்?"

"ரசாயனப் பொருட்களும், காற்றும் வினைபுரியத் தொடங்கும். நாப்தலின் உருண்டை போல இந்தப் பந்து கரைய ஆரம்பிக்கும். சும்மா இல்லை... பாஸ்பரஸ் பெண்டா குளோரைடு என்னும் கொடிய விஷவாயுவாகக் கரைய ஆரம்பிக்கும்."

"புகை வராதா...?"

"அப்படித்தான். கண்ணுக்குத் தெரியாத புகை."

"ஸ்மெல்?"



"வாசனை இல்லை. ஓடர்லெஸ்."

"இந்தப் பந்து முழுவதும் கரைய எத்தனை நேரமாகும்?"

"ஆறு மணி நேரம். பந்து முற்றிலுமாகக் கரைந்து வெறும் பாலிதீன் பைதான் மிச்சமிருக்கும். விஷவாயு அரை சதுர கிலோமீட்டரை எளிதாக வியாபித்து பரவினால் அந்தச் சுற்றளவுக்குள் இருக்கும் அத்தனை பேரும் சத்தமில்லாமல் செத்து விழுவார்கள்."

தயானந்தும், சூர்யப்பிரகாஷும் சிலிர்த்துப் போனவர்களாய் மிரண்ட பார்வையோடு ஷஃபீக்கை பார்த்தார்கள். அவர் தொடர்ந்தார்.

"இதை இன்றிரவு ஏழு மணிக்கு எம்பனி ஸ்ட்ரீட்டில் வைக்கப் போகிறோம்."

"போலீஸ் கண்காணிப்பு அதிகம் இருக்கும் பகுதியாயிற்றே?"

"போலீஸ் கண்ணில் மண்ணைத் தூவி விடலாம். நடுநிசி ஒரு மணிக்கெல்லாம் எம்பனி ஸ்ட்ரீட் காற்று விஷமாக மாறியிருக்கும். வெளிநாட்டுத் தூதுவர்கள் அத்தனை பேரும் தூக்கத்தோடு தூக்கமாய் பலி. உலக நாடுகளின் மத்தியில் இந்தியாவுக்கு இது கௌரவக்கேடான விஷயம். இந்தியாவில் தனிமனிதப் பாதுகாப்பு என்பது கேலிக்குரிய விஷயமாக உலக அளவில் பேசப்படும்!"

ஷஃபீக் அஹமத் பெரிய குரலில் சிரித்தார்.

## 33

மூர்பின்டி ஃபாரஸ்ட்டின் தெற்குப் பகுதியில் குருவின் தலைமையில் பட்டாலியன்கள் ஊடுருவின.

சூரிய வெளிச்சத்தை சென்ஸார் செய்யும் அடர்ந்த மரங்கள். பட்டப்பகலிலேயே வெளிச்சத்தின் சுவடுகள் அற்றுப்போன பிரதேசம்.

அந்த அந்தி நேரத்தில் மசமசப்பான இருட்டுடன் இருந்தது.

நேற்று பெய்த மழையில் வழிகள் சகதியோடு சொதசொதப்பாய் இருந்தன.

ராணுவ வீரர்கள் பூட்ஸ் கால்கள் சேற்றில் புதையப்

புதைய சிரமத்தோடு நகர்ந்தார்கள். ஈரம் படர்ந்த இலைகளையும், கிளைகளையும் விலக்கி விலக்கிப் பாதை கண்டார்கள்.

வாகனம் நுழையக் கூடிய பகுதிகளில் ஜீப்கள் உறுமலோடு முன்னேறின.

குரு ஒரு திறந்த ஜீப்பில் கையில் மேப்புடன் உட்கார்ந்திருந்தார். வயர்லஸ் மூலமாய் தூரத்தில் இருப்பவர்களின் நிலைமைகளை அவ்வப்போது தெரிந்து கொண்டு இன்ஸ்ட்ரக்ஷன்கள் கொடுத்துக் கொண்டிருந்தார்.

சற்றுத் தொலைவில் ஒரு அஸ்பெஸ்டாஸ் கூரை தெரியவே - ஜீப் டிரைவரைப் பார்த்துக் குரலை வெளியிட்டார்.

"டிரைவர், ஜீப்பை வலதுபுறம் திருப்புங்கள்."

"ஆகட்டும் ஸாப்."

ஜீப்பின் மூக்கு வலப்புறம் திரும்பியது. பைலட் வாகனங்களும் குருவின் ஜீப்பை பின் தொடர்ந்தன.

குலுங்கல்களோடு அந்தப் பாதையில் அஞ்சு நிமிஷங்கள் ஜீப் ஊர்ந்தபின்-

அஸ்பெஸ்டாஸ் கொட்டகை பிரம்மாண்டமாய் விரிந்தது.

பெரிய பெரிய சைஸ்களில் மரங்கள் அடுக்கப்பட்டிருந்தன.

"வுட் இண்டஸ்ட்ரி போலிருக்கிறது."

"ஆமாம் ஸாப்."

ஜீப் சத்தங்கள் ஒவ்வொன்றாய் அணைந்தபின் - அங்கே கனத்த நிசப்தம் நிலவியது. கொட்டகையிலிருந்து யாராவது எட்டிப் பார்ப்பார்கள் என்று குரு எதிர்பார்த்தார்.

ஆனால் ஆட்கள் யாருமே அங்கே தென்படவில்லை.

"பெரிய மர ஃபேக்டரி மாதிரி இருக்கிறது- ஆட்கள் ஒருவர்கூட கண்ணில் படவில்லையே...?"

"ஒருவித ஆபத்து உணர்வு தோன்றுகிறது ஸாப். எதிரிகள் யாரேனும் இங்கிருப்பார்கள் என்றால் மறைந்திருந்து தாக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் நிறைய இருக்கின்றன. நாம் உஷாராயிருக்க வேண்டிய தருணம்."

குரு திரும்பி - உடன் வந்த ராணுவ வீரர்களை ஆயுதங்களுடன் தயார் நிலையிலிருக்கக் கட்டளையிட்டவர், பின் சொன்னார்.

"ஸர்ச்."



## 34

டெல்லி அந்த சாயங்காலை ஏழு மணிக்கு பனி வலையால் சில்லென்று போர்த்தப்பட்டுக் கிடந்தது.

கண்ணாடியில் படர்ந்திருந்த பனி ஈரத்தை வைப்பரால் துடைத்து விட்டுக் கொண்டு விர்ரென்று சாலையில் வழுக்கிப் போனது அந்தக் கருநீல வர்ண ப்ரீமியர் கார்.

பின் ஸீட்டுக்குக் கீழே கமுக்கமாய் உட்கார்ந்திருந்தது அந்தக் கருப்புப் பெட்டி.

பின் ஸீட்டின் இரண்டு ஜன்னலோரங்களிலும் வெள்ளை உடுப்புகளோடு இரண்டு இளைஞர்கள் உட்கார்ந்தார்கள்.

யூனிஃபார்ம் அணிந்த டிரைவர் காரின் இயக்கத்தைக் கையாண்டு கொண்டிருந்தார்.

பனி ஈரம் படர்ந்த சாலை காரின் சக்கரங்களுக்குக் கீழே வேகமாய் விழுங்கப்பட - ஓரிரு திருப்பங்களுக்குப் பின்-

வெள்ளைப் பின்னணியில் சிவப்பு எழுத்துக்களை வைத்திருந்த போர்டு கண்ணில் பட்டது - RESTRICTED AREA.

போக்குவரத்து சாலையின் இருபுறங்களிலும் நன்கு உள்வாங்கி - தூரதூரமாக பங்களாக்கள் அமைந்திருந்தன. நவீன மோஸ்தரில் பளீரென்று கட்டிடங்கள்.

டிரைவர் தலைக்கு மேல் இருந்த கண்ணாடியில் பின் ஸீட்டில் இருந்த அவர்களைப் பார்த்துக் கேட்டார்.

"எந்த இடத்துக்குச் செல்ல வேண்டும்?"

"நாம் இப்போது நுழைந்திருப்பது வீதியின் எண் இரண்டு. பதினாலாம் எண் வீதிதான் இந்தப் பிராந்தியத்தின் மையப் பகுதி. அந்த வீதியின் துவக்கத்திற்கு நாம் செல்ல வேண்டும்."

டிரைவர் தலையாட்டி விட்டு சாலையில் கண்களைப் பதித்தார்.

இரண்டாவது வீதியை முழுசாய்க் கடந்து இடதுபுறம் திரும்பியபோது ஒரு செக்போஸ்ட் முளைத்திருந்தது.

காரின் வேகம் தடைப்பட்டு நின்றது.

சாக்கி உடுப்பிலிருந்த செக்யூரிட்டி ஃபோர்ஸ் அதிகாரி ஒருவர் காரை நெருங்கினார்.

ஜன்னலுக்கு குனிந்து -

''எங்கே செல்கிறீர்கள்?'' என்றார்.

''தெரு எண் பதினாலு'' என்றார் டிரைவர்.

''யாரைப் பார்க்க வேண்டும்?''

''மிஸ்டர் மோலி வைட் இத்தாலியத் தூதுவர்.'' பின் சீட்டில் இருந்து பதிலளித்தான் அந்த இளைஞன்.

செக்யூரிட்டி ஆபீசரின் பார்வை சன் கன்ட்ரோல் பிலிமை ஊடுருவிக் கொண்டு பின் சீட் நபர்களைப் பார்க்க முயன்றது. கண்ணாடி இறங்கியது.

''நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?''

''இத்தாலிய உள்துறை அமைச்சரக அலுவலர்கள். ஹோட்டல் ரெஸிடன்சியில் தங்கியிருக்கிறோம்.''

''பாஸ்போர்ட்.... விசா... ப்ளீஸ்...?''

இளைஞன் நிமிர்ந்து பார்த்ததும் - அந்த செக்யூரிட்டி ஆபீஸர் சற்றுத் தணிந்த குரலில், ''தவறாக எடுத்துக் கொள்ள வேண்டாம். இது எங்கள் அத்தியாவசியக் கடமை'' என்றார்.

இளைஞன் தோள்களைக் குலுக்கினான்.

ஓவர் கோட் பாக்கெட்டினின்றும் விடுவித்து அந்தப் பிரதிகளைக் காண்பித்தான்.

''அம்பாஸிடரின் அனுமதிச் சீட்டு ஏதுமிருக்கிறதா?''

''அதிகாரப் பூர்வமான கடிதமே உள்ளது.''

டைப் செய்யப்பட்ட அந்தத் தாளைக் காட்டினான். முத்திரைகள் மேலும், கையெழுத்துக்கள் மேலும் சற்று நேரம் உன்னிப்பான பார்வையைக் கொடுத்துவிட்டு கடிதத்தைத் திருப்பித் தந்தார் செக்யூரிட்டி ஃபோர்ஸ் ஆபீஸர்.

''ஸாரி ஃபார் த டிஸ்டர்பன்ஸ்! நீங்கள் போகலாம்.''

''தாங்க்ஸ்.''

கார் நகர்ந்தது.

கர்ச்சீப்பால் முகத்தை வழித்துக் கொண்டே - கூட இருந்த இளைஞன் படபடத்தான்.

''எனக்கு மனசுக்குள் திக்திக்கென்றிருந்தது. அந்த போலிப் பத்திரங்களை நல்லவேளை அவர்கள் நம்பி விட்டார்கள்.''

''நுணுக்கமாய்த் தயாரிக்கப்பட்டவை. ஷஃபீக் அஹமதின் திட்டங்கள் எப்போதுமே துல்லியமாய்த்



திட்டப்பட்டிருக்கும். எந்த இடத்திலும் ஒரு குண்டூசி அளவுக்கு கூட அதில் ஓட்டையைப் பார்க்க முடியாது.''

கார் வேகம் பிடித்து இரண்டு சாலைகளைக் கடந்தது.

பத்தாவது தெருவைக் கடக்கிறபோது - அந்தக் கறுப்புப் பெட்டியைத் திறந்தான் அவன்.

ஜன்னல் கண்ணாடியை மெதுவாய்க் கீழிறக்கினான்.

பாலிதீன் உறையுடன் பாஸ்பரஸ் பெண்டா க்ளோரைடு உறைந்திருந்த 'டெட்லி பால்' வெளிப்பட்டது.

12-

13-

14ம் தெருவின் துவக்கத்தில் அந்த பேக்லைட் குப்பைத் தொட்டி 'USE ME' என்ற ஆங்கில எழுத்துக்களை உடம்பில் வைத்துத் தெரிந்தது.

கார் அதனோரமாய் வேகம் குறைந்தது.

பாலிதீன் உறை கிழிக்கப்பட்டு - பந்து குப்பைத் தொட்டிக்குள் வீசப்பட்டது.

பத்தே விநாடிகள்.

கார் மீண்டும் வேகம் பிடித்து - அந்த எம்பஸி ஏரியாவின் இன்னொரு வாயிலை நோக்கி சீறியது.

கண்ணுக்குத் தெரியாத -

வாசமில்லாத -

அந்த பாஸ்பரஸ் பெண்டா க்ளோரைடு என்கிற விஷவாயு - பந்தினின்றும் வெளிப்பட்டு, மெல்ல மெல்ல... அந்தப் பிராந்தியத்துக் காற்றைக் கவ்விப் பிடிக்க ஆரம்பித்தது.



## 35

**கா**லை நேரம் ஆரஞ்சு நிறத்தில் விடிந்து கொண்டிருந்தது. சூர்யப்பிரகாசமும், தயானந்தும் ஷஃபீக் அஹமதின் அறைக்குள் நுழைந்தார்கள். அவர் யூனிஃபார்மோடு அந் நேரத்துக்கே அவருடைய ஆசனத்தில் உட்கார்ந்து இருந்தார்.

''குட்மார்னிங்'' ... அவர்கள் சொன்ன

குட்மார்னிங்கை பொருட்படுத்தாமல் இறுகிய முகத்தோடு - அஹமத் கையைக் காட்ட -

அருகிலிருந்த இருக்கையில் நிரம்பினார்கள் இருவரும்.

தயானந்த் சொன்னான். சற்றே தயக்கமான குரல்.

''விடிகாலை வயர்லஸ்ஸில் பேசினோம்.''

''என்ன சொன்னார்கள்? - அஹமத் சுவாரசியம் காட்டாமல் கேட்டார்.

''ஒரு பெரிய தீவிரவாதக் கும்பலைச் சுற்றி வளைக்கிற கனவோடு ரூர்பிண்டி ஃபாரஸ்டைத் தீவிரமாய் சுற்றி வளைத்திருக்கிறார்கள். ஃபாரஸ்டினில் பதுங்கியிருந்த சொற்ப ஆயுதங்களை மட்டும் கைப்பற்றிக் கொண்டு ஏமாற்றத்தோடு திரும்பியுள்ளார்கள்.''

''நாம் நினைத்தது நடந்தது!'' -

''ஆமாம்.''

''அவர்களுக்கு உங்கள் தகவல் மேல் சந்தேகம் எதுவும் தோன்றவில்லையே?''

''இல்லை. எங்கள் தகவல் உரிய சமயத்தில் கிடைத்திருந்தும் கோட்டை விட்டு விட்டோம் என்று வருத்தப்பட்டார்கள்.''

''ஆக, தீவிரவாதிகள் உஷாராகி தப்பி விட்டதாகத்தான் நினைக்கிறார்கள்.''

''ஆமாம்.''

சூர்யப்பிரகாஷ் கேட்டான்.

''நேற்று அதே நேரத்தில் எம்பஸி ஏரியாவில் நடந்த சதித்திட்டம் என்ன ஆயிற்று?''

''அந்த டெட்லிபாலை சக்ஸஸ்ஃபுல்லாக ஒரு எம்பஸி தெருவின் குப்பைத் தொட்டியில் டிஸ்போஸ் செய்தாகிவிட்டது.''

''அப்படியானால் எம்பஸி ஏரியா இந்நேரம் மயானமாக மாறியிருக்கும் இல்லையா?''

''நிச்சயமாக.''

''அநேகமாக இன்றைய காலைத் தினசரிகளின் தலைப்புச் செய்தி அதுவாகத்தான் இருக்கும்.''

''ஒரு சின்னத் திருத்தம். மாலைத் தினசரிகளில்.''

''ஏன்?''

''இரவு ஒரு மணி சுமாருக்கு விஷவாயு தன் மவுனத் தாக்குதலை நிகழ்த்தி இருக்கும். இன்றைய பொழுது விடியும் இந்த நேரத்தில்தான் அங்கே நடந்திருக்கும்



பயங்கரத்தை மற்றவர்களால் உணர்ந்திருக்க முடியும். செய்தி இனிமேல் தான் பரவி விஸ்வரூபம் எடுத்து மாலை தினசரிகளில் வெளியாகும்.''

கதவைத் திறந்து கொண்டு ராஜி உள்ளே வந்தாள். அவர் கையில் காலை செய்தித்தாள் கடக்கட இருந்தது.

பரபரப்போடு கேட்டார்.

''ஷேஃபீக்... நியூஸ் எதையும் காணோமே..?''

ஷேஃபீக் அஹமத் புன்னகைத்தார்.

''அதைப்பற்றித்தான் பேசிக் கொண்டிருந்தோம்.''

''ஆப்ரேஷன் வெற்றிகரமாய் நடந்து விட்டதாய தகவல் வந்ததா?''

''ராத்திரி ஏழு மணிக்கெல்லாம் அவர்கள் ஆவணங்களை காண்பித்துவிட்டு எம்பஸி ஏரியாவுக்குள் நுழைந்து விட்டார்களாம். சரியாய் ஏழரை மணிக்கு பாலிதீன் உறை உடைக்கப்பட்டு டெட்லி பாலை குப்பைத் தொட்டியில் போட்டு விட்டார்களாம். அந்த நிமிஷத்திலிருந்து அது விஷம் கக்க ஆரம்பித்து விட்டது.''

''மறுபடி தகவல் வருமா?''

''ஏழு மணிக்கு நிலைமைகளைத் தெரிவிப்பார்கள்.''

அவர் சொன்ன விநாடி -

''ஸார்... வயர்லஸ்'' என்றான் பக்கத்து அறையிலிருந்து வெளிப்பட்ட ஒருவன்.

அடுத்த நிமிஷம் - ஷேஃபீக் அஹமத் பொத்தான்களும், டயல் இண்டிகேட்டர்களும் நிறைந்த அந்த சாதனத்தின் முன்னால் நின்றார்.

ஃப்ரீக்வன்ஸியை அட்ஜஸ்ட் செய்து கொண்ட பிறகு - தான் பேசுவதை ஷேஃபீக் அஹமத் சங்கேதமாய்த் தெரிவித்தார்.

மறுமுனைக்குரல் சற்று பதட்டமாயிருந்தது.

''ஸார்... என்னவோ தப்பு நடந்திருக்கிறது.''

''என்னாயிற்று?''

''திட்டப்படி எம்பஸி ஏரியா மயானம் ஆகவில்லை. நிலைமை அங்கே மாமூலாய் உள்ளது. எல்லோரும் அங்கே சகஜமாய் நடமாடிக் கொண்டிருக்கிறார்கள்.''

பிறிட்ட கோபத்தில் அஹமத்தின் காது நுனிகள் ரத்தம் பாய்ந்து சிவப்பாகிப் போனது.

## 36

**கோ**பத்தில் ஷஃபீக் உடல் நடுங்கியது. இறுகிய முகத்தோடு இருக்கைக்கு வந்து அமர்ந்தார்.

ஹாஜி அவரைப் பார்த்தார். பார்வையில் கலக்கம்.

''ஏதாவது கெட்ட செய்தியா?''

''ஆமாம்...'' என்று சொல்லிக் கொண்டே ஷஃபீக் அஹமத்தின் பார்வை சூர்யப்பிரகாஷையும், தயானந்தையும் ஊடுருவிச் சென்றது.

அவர்கள் இருவருமே - அமைதியாய் ஷஃபீக் அஹமதின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தனர்,

''என்ன செய்தி?'' ஹாஜி கேட்டார்.

''முதன் முறையாக என்னுடைய ஆப்ரேஷன் ஒன்று தோல்வியைத் தழுவி இருக்கிறது.''

இதைச் சொல்லுகிறபோதே ஷஃபீக் அஹமதின் நெற்றி நரம்புகள் புடைத்தன.

''என்னாயிற்று?''

''எம்பஸி ஏரியாவில் டெட்லிபால் தனது வேலையைக் காட்டவில்லை. காட்டும் முன்னர் அது அங்கிருந்து அகற்றப்பட்டுள்ளது.''

''எப்படி இது நடந்தது? உங்கள் துல்லியமான திட்டங்கள் எதுவுமே இதுவரை பொய்த்ததில்லையே?''

''எஸ்.... அப்படித்தான்... இதுவரை அப்படித்தான்! இத்தனை நாட்களும் எல்லாமே ஒழுங்காக நடந்தன. இன்றைக்குத் தப்பு நடந்திருக்கின்றதென்றால் யாரோ இந்திய ராணுவத்துக்கு உளவு சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள் என்று அர்த்தம்.''

மெல்லிய குரலில் சொன்ன அவருடைய பார்வை சூர்யப்பிரகாஷ், தயானந்த் மேலேயே நிலைத்திருந்தது.

ஹாஜி பதட்டமாய்க் கேட்டார்.

''இத்தனை நாட்களாய் இல்லாமல் புதிதாய் யார் இந்த மாதிரி ஒரு காரியத்தைச் செய்வது?''

தயானந்த் நிமிர்ந்தான். குரலில் சில சதவீதம் கோபம்.

''மிஸ்டர் ஷஃபீக்... நீங்கள் எங்கள் இருவரையும் சந்தேகப்படுகிற மாதிரி தெரிகிறது.''



''உங்களைப் போய் நான் சந்தேகப்படுவேனா? தீவிரவாதப் பணிகளுக்காக நேற்று காஷ்மீரியஎல்லை வழியாகப் பத்துப் பாகிஸ்தானிய வீரர்களை வரவழைத்திருக்கிறோம். நான் அவர்களைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறேன்.''

வியர்த்த முகத்தோடு ஹாஜி சொன்னார்.

''ஆரம்பத்திலேயே இதைக் கண்டுபிடித்துக் களையெடுத்தாக வேண்டும். இல்லாவிட்டால் நாம் மாட்டிக் கொள்ள நேரிடும்.''

''அப்படி ஒரு சந்தர்ப்பத்தை என்றைக்குமே நான் நேரவிட மாட்டேன். அதே மாதிரி அந்த உளவு சொல்கிற ஆசாமியைக் கண்டு பிடித்துத் துண்டு துண்டாகக் குதறிப் போடாமலும் விட மாட்டேன்.''

சூர்யப்பிரகாஷும், தயானந்தும் ஒருவரையொருவர் பரஸ்பரம் பார்த்து எச்சில் விழுங்கிக் கொண்டார்கள்.

''மிஸ்டர் ஷஃபீக்! உங்களுடைய உதடுகள் புன்னகைத்தாலும், உங்கள் பார்வை என்னவோ எங்கள் இருவரையும் சந்தேகத்துடன் ஊடுருவுகிறாற்போலத் தோன்றுகிறது.''

அவர் சிரித்தார்.

''நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்...? தப்பு செய்பவர்கள்தான் பயம் கொள்ள வேண்டும். உங்களை நான் நம்புகிறேன்... நீங்கள் போகலாம்.''

இருவரும் வெளியேறினார்கள்.

அவர்கள் சென்றதுமே - ஹாஜி நிமிர்ந்தார்.

''பாகிஸ்தானிலிருந்து வந்த பத்துப் பேரை சந்தேகிப்பதும் - இந்திய ராணுவத்திலிருந்து நம் பக்கம் வந்த இவர்கள் இருவரை நீங்கள் நம்புவதும் விநோதமாக இருக்கிறதே ஷஃபீக்?''

அவர் புன்னகைத்தார்.

''இல்லை. நான் பாகிஸ்தான் வீரர்களை சந்தேகிக்கவில்லை. அந்த இரண்டு பேர்க்கும் முன்னால் ஒரு பேச்சுக்கு அப்படிச் சொன்னேன். என் உண்மையான மனநிலவரப்படி சூர்யப்பிரகாஷையும், தயானந்தையும் தான் முழுக்க முழுக்க சந்தேகிக்கிறேன். அவர்கள் ரெண்டு பேர் மேலும் ஒரு கண் வைக்கவேண்டும்.''

ஹாஜி தலையாட்டினார். ''நிச்சயமாய்..!''

''அப்புறம்... நீங்கள் அறிமுகப்படுத்தினீர்களே

டேனியல்... அவனை உடனே வரவழைக்க வேண்டும்.'' - அஹமத் சொல்ல,

''இதோ'' ஹாஜி வெளியேறினார்.

## 37

அன்றைக்கு இரவு எட்டு மணிக்கு இண்டர்காம் கிணுகிணுத்தது. ஷேக் அஹமத் கைக்கெட்டும் தூரத்திலிருந்த ரிசீவரை எடுத்துக் காதில் வைத்தார். மறுமுனையில் ஹாஜி பேசினார்.

''நான் ஹாஜி.''

''சொல்லுங்கள்.''

''டேனியல் வந்திருக்கிறான். அவனைக் கூட்டிக் கொண்டு வரலாமா?''

''உடனே.''

அஹமத் இண்டர்காம் ரிசீவரை சாத்திவிட்டு - அறை வாயிலில் துப்பாக்கியுடன் நின்றிருந்த ஒருவரை பஸ்ஸர் மூலம் வரவழைத்தார்.

''வெப்பன் கோடவுனில் இன்றைக்கு சாயந்தரம் நீலநிற பார்சல் ஒன்று வந்து சேர்ந்திருக்கும். அதை இங்கே கொண்டு வா.''

அவன் தலையசைத்துவிட்டு நகர்ந்தான்.

சில நிமிடங்களில் ஹாஜி உள்ளே பிரவேசமானார். அவரைத் தொடர்ந்து டேனியல் வந்தான்.

டேனியல் அசாத்திய கறுப்பு. முகப்பரப்பில் நிறைய ரோமம். ஸ்லீவ்லெஸ் ஜெர்கின் ஜாக்கெட்டுக்கு உள்ளே முரட்டுத்தனமான பச்சை நிற சட்டை தெரிந்தது. மாமிசக் கிடங்கு மாதிரி இருந்தான். சிரித்தபோது வரிசை மாறிய பற்கள். ஹிந்தியில் பேசினான்.

''ஹாஜியிடமிருந்து அவசரமாய் அழைப்பு வந்தது. உடனே கிளம்பி வந்தேன். நீங்கள் பார்க்க விரும்பியதாகச் சொன்னார்.''

''ஆமாம் டேனியல். ஒரு பாக்கெட் ட்ரான்சிஸ்டர் வாங்கினால் கூட ஒழுங்காக வேலை செய்யுமா... காரண்டி இருக்குமா என்று பார்த்து வாங்குவார்கள். உனக்கு நான் லட்சக்கணக்கில் வியாபாரம் கொடுத்து விட்டு - இதையெல்லாம்



பார்க்காமலே விட்டுவிட்டேன்.''

''நீங்கள் சொல்வது புரியவில்லையே...''

''ஹாஜி அறிமுகப்படுத்தினார் என்பதால் வெறும் நம்பிக்கை அடிப்படையில் உன்னிடம் பொருள் வாங்கினேன். ஆனால் அது என் முதல் தோல்விக்கு ஏற்பாடு செய்திருக்கிறது.''

''கொஞ்சம் புரியும்படியாய் சொல்லுங்கள்.''

டேனியல் குழப்பத்தோடு அவரை ஏறிட்டபோது - அந்தத் துப்பாக்கி ஆசாமி நீலநிறப் பார்சலைக் கொண்டு வந்து அவருக்கு முன்னால் வைத்தான்.

''பிரி!'' என்றார் அஹமத்.

கத்தியால் அதன் கயிற்றுப் பிடிமானங்களை வெட்டிப் பார்சலைப் பிரித்தான். அஹமத் அதனுள்ளிருந்த அந்த டெட்லிபாலை வெளியே எடுத்தார்.

''பாலிதீன் உறையைக் கிழித்து விட்டால் விஷவாயுவாகக் கரைந்து போகும் என்றாயே... இதைப் பார்த்தாயா?''

பாலிதீன் உறை உடைக்கப்பட்ட டெட்லிபாலை டேனியல் முன்னே வைத்தார்.

''இது டெல்லி எம்பஸி ஏரியாவில் போட்ட டெட்லிபால். விடிவதற்குள் அத்தனை பேரும் பலியாவார்கள் என்று எதிர்பார்த்தோம். ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை. டெட்லிபால் போட்டது போட்டபடி குப்பைத் தொட்டியில் அப்படியே கிடந்திருக்கிறது. காலையில் ஸ்கேவஞ்ஜர்ஸ் குப்பை லாரியில் வழித்துப் போட்டுக் கொண்டு போய் விட்டார்கள். ட்ரேஸ் அவுட் செய்து இதை இங்கே திரும்பக் கொண்டு வந்திருக்கிறோம்.''

டேனியல் அதிர்ச்சியோடு அந்த டெட்லிபாலைப் பார்த்தான்.

''ஸார். டெட்லிபால் இப்படி டம்மியாகப் போவதற்கு சான்ஸே இல்லை.''

''போயிருக்கிறதே!''

''அதுதான் புரியவில்லை!''

''நல்ல நடிப்பு டேனியல்! உள்ளே பாஸ்பரஸ் பெண்டாக்ளோரைடை வெளிப்படுத்தும் ரசாயனம் அடைக்கப்படவில்லை என்றே நான் நினைக்கிறேன். நாங்கள் ஏமாற்றப்பட்டிருக்கிறோம்.''

டேனியல் பதறினான்.

''இல்லை ஸார். அப்படி மெளனமாயிருந்தால் ஹாஜி கூப்பிட்டனுப்பியதும் உடனே வந்திருப்பேனா?''

''நாங்கள் இன்னும் டெட்லி பாலை உபயோகித்திருக்க மாட்டோம் என்று நினைத்திருப்பாய். நீ வராவிட்டால் என்ன... உன்னுடைய இடத்துக்கே வந்து உன்னை என்னால் தூக்கி வந்திருக்க முடியும்.''

''ஸார்... என்னவோ தப்பு நடந்து விட்டது- இந்த செயல்படாத டெட்லிபாலை என்னிடம் கொடுங்கள். எங்கள் ஆட்களிடம் பேசி மாற்றித் தர ஏற்பாடு செய்கிறேன்.''

''இதை மாற்றித் தருவது சுலபம் டேனியல். ஆனால் எங்கள் ஆப்ரேஷன் ஒவ்வொன்றும் முன் மேல் நடக்கிற மாதிரி காரியம் என்பது உனக்குத் தெரியுமா? எல்லாவற்றையும் கடந்தபின் - இந்த கெமிக்கல் வெப்பன் செயலாற்றாததால் ஆப்ரேஷன் தோல்வியடைந்து போனது என்பது எத்தனை அவமானகரமான விஷயம்?''

''ஸார்... இது செயலாற்றாமல் போனது எனக்கே புதிராக உள்ளது. எப்படி தப்பு நடந்ததென்று புரியவில்லை.''

''இந்த டெட்லி பாலில் தப்பு நடந்திருப்பதை ஒத்துக் கொள்கிறாயா?''

''ஒத்துக் கொள்கிறேன்.''

''ரொம்ப நல்லது. இங்கே தப்பு செய்பவர்களுக்கும், தப்பு நடக்கக் காரணமாயிருப்பவர்களுக்கும் ஒரே தண்டனை தான்.''

டேனியல் திடுக்கிட்டு நிமிர்ந்தான்.

ஷஃபீக் அஹமதின் கையில் துப்பாக்கி ஒன்று அடக்கமாக முளைத்து ஒற்றைக்கண்ணால் அவன் மார்பைப் பார்த்தது.

டேனியல் பதட்டமாய்த் தன்னுடைய துப்பாக்கியை வேகமாய் உருவ - அதற்குள் ஷஃபீக் அஹமத் ட்ரிக்கரை அழுத்தினார். ''ஸாரி... டூ லேட்...''

''விஷ்ஷக்.''

அவன் புறங்கையைத் தோட்டா துளைத்து பிஸ்டல் தெறித்து விழுந்தது. ரத்தம் பீறிட்டது. டேனியல் அலறி கையை உதறிக் கொண்டான்.

அஹமத் சிரித்தார்.

''இங்கே அடங்கிப் போகிறவனுக்குத்தான் வாழ்வு டேனியல்.''



டேனியல் பதட்டத்தோடு ஹாஜியின் காலில் விழுந்தான்.

''ஹாஜி...என்னைக் காப்பாற்றுங்கள். உங்களை நம்பித் தானே இங்கே வந்தேன்...''

ஹாஜி கல் மாதிரி நின்றிருந்தார்.

இரண்டு பேர் டேனியலின் புஜத்தைப் பற்றித் தூக்கி நிறுத்தினார்கள். அஹமது டேனியலின் நெஞ்சுக்கு நேரே துப்பாக்கியைப் பிடித்து மீண்டும் தோட்டாவுக்கு உயிர் கொடுத்தார். தோட்டா சீறியது.

மைய மார்பில் ரத்தப் பொத்தல் விழ - அறுந்த பல்லியின் வால் மாதிரி சில நிமிஷங்களுக்குத் தரையில் துடிதுடித்தவன் மெல்லமாய் சகல இயக்கங்களும் அடங்கிப் போனான். அஹமத் ரிவால்வரால் நெற்றி வியர்வையைத் துடைத்துக் கொண்டார்.

## 38

நள்ளிரவு நேரம் 12.15. ஹாஜியின் முன்னே அந்த வரைபடத்தை விரித்து வைத்தார் அஹமத். ஹாஜி புருவங்களை சுருக்கினார்.

''இது என்னவென்று தெரிகிறதா?''

''டெல்லியின் வரைபடம்.''

''சரிதான்! மார்க்கர் பேனாவால் வட்டமிடப்பட்ட பகுதி என்னவென்று தெரிகிறதா?''

ஹாஜி சில விநாடிகளுக்கு நெற்றிச் சுருக்கங்களோடு அந்த வரைபடத்தைப் பார்த்துவிட்டு உதட்டைப் பிதுக்கினார்.

''தெரியவில்லை''

''ராணுவ அமைச்சகக் கட்டிடம். முக்கியமான பல தஸ்தாவேஜுகள் கம்ப்யூட்டரில் பதிவு செய்யப்பட்டு அந்தக் கட்டிடத்தில்தான் வைக்கப்பட்டுள்ளன. ஏரோநாக் மைக்ரோலைட் ஏர்க்ராஃப்ட்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?''

''இல்லை.''

''குறுகிய தூரத்துக்குள் இருக்கும் இலக்கை சென்று தாக்கக்கூடிய ஆளியங்கி ஏர்க்ராஃப்ட்''

''புரிகிறது. உங்கள் அடுத்த இலக்கு ராணுவ

அமைச்சக கட்டிடம். ராடார்களால் உணரப்படும் முன் தாக்கிவிடக்கூடிய இந்த தானியங்கி மைக்ரோலைட் ஏர்கிராஃப்ட்டை கொண்டு தாக்குதலை நடத்தப் போகிறீர்கள்."

"ஆமாம் ஹாஜி. அந்த ஏரோநாக் வசதிகள் நம்மிடம் உள்ளது. அதை இயக்க கம்ப்யூட்டர் போல போர்டுகள் தேவை. இயங்குதளம் அமைக்க வேண்டும்."

"இதையெல்லாம் அமைக்கக்கூடிய ஆட்களை வரவழைக்க வேண்டாமா?"

"இல்லை. அவசரப்படாமல் நான் சொல்லப் போவதை முழுசாய்க் கேளுங்கள். சூர்யப்பிரகாஷையும், தயானந்தையும் இப்போது இங்கே வரவழைத்து - அவர்களிடம் நாம் இந்தத் திட்டத்தைப் பற்றி விவரிக்கப் போகிறோம். இந்த நாளில் ஆப்ரேஷன் நடத்தப் போவதாக ஒரு தேதியையும் அவர்களிடம் சொல்லுகிறோம்."

"ஆனால் ஆப்ரேஷன் நடத்தப் போவதில்லை?"

"ஆமாம்."

"பிறகு எதற்காக அவர்களிடம் அப்படிச் சொல்ல வேண்டும்?"

"அவர்கள் இரண்டு பேரோ அல்லது இரண்டு பேரில் ஒருத்தரோ நமக்கு நம்பிக்கை துரோகம் செய்கிறார்கள் என்று சந்தேகப்படுகிறேன். இந்த ஏரோநாக் விவகாரத்தைப் பற்றி பேசிவிட்டு அவர்கள் இருவரையும் கண்காணிக்கப் போகிறோம். இதைப் பற்றி ராணுவத்துக்கு யார் உளவு சொல்கிறார்கள் என்று தெரிந்து போய்விடும்."

"நல்ல யோசனைதான்."

ஷெஃபீக் பாதுகாப்பு ஆட்களில் ஒருவனைக் கூப்பிட்டார். அவன் துப்பாக்கியை இடுப்பில் செருகிக் கொண்டு பவ்யமாய் வந்து நின்றான்.

"சூர்யப்பிரகாஷ், தயானந்த... இருவரையும் நான் வரச் சொன்னதாகப் போய்ச் சொல்."

அவன் வெளியேறிச் சென்றான்.

சில நிமிஷங்கள் மவுனத்தில் வழுக்கின.

இண்டர்காம் சப்தமிட்டது.

வீ...

வீ...

வீ...



ஷெஃபீக் அஹமத் இண்டர்காம் ரிசீவரைக் காதுக்குக் கொடுத்து, "ஹலோ" என்றார்.

"......"

"அப்படியா?"

அஹமதின் முகம் மாறிப் போனது.

"........"

"இதோ வருகிறேன்."

ரிசீவரை வேகமாய்ச் சாத்தினார்.

அவருடைய முகம் இருண்டிருந்தது.

ஹாஜி, "என்னாயிற்று?" என்றார் முகத்தில் குழப்பத்தைச் சுமந்து கொண்டு.

"வாருங்கள்."

சொல்லிக் கொண்டே ஷெஃபீக் அஹமத் வேகமாய் அறையை விட்டு வெளியேறினார். ஹாஜி புரியாத முகத்தோடு அவரைப் பின் தொடர்ந்தார்.

நிலவறை வராந்தாக்கள் கடந்தன. பல அறைகளைத் தாண்டிச் சென்றார்கள். ஷெஃபீக் அஹமதின் முகத்தைப் பார்த்து வழியில் எதிர்ப்பட்டவர்கள் கலவரமடைந்தார்கள். வயர்லஸ் அறை வாயிலில் ஷெஃபீக் அஹமத் சொல்லியனுப்பிய பாதுகாப்பு ஆள் பதட்டத்துடன் நின்றிருந்தான். சொன்னான்.

"ஸார், அவர்களுடைய அறையில் போய்ப் பார்த்தேன். இருவரும் அங்கில்லை. பிறகு ஒவ்வொரு இடமாய்த் தேடிக் கொண்டு வந்தேன். இந்த அறையில் இப்படி இந்தக் கோலத்தில்..." அவன் சொல்லச் சொல்ல அஹமத் அறைக்குள் பார்வையைப் போட்டார்.

சூர்யப்பிரகாஷும், தயானந்தும் மல்லாந்து பெருக்கல் குறியாய்த் தரையில் விழுந்து கிடந்தார்கள். இருவரின் நெஞ்சிலும் ரத்தம் உறைந்து கிடந்தது. செத்த விழிகள் சீலிங் திசையை வெறித்தன.

## 39

ஷெஃபீக் அஹமத் அருகில் சென்று குனிந்து பார்த்தார்.

மார்புச் சதையை ரணகளமாகக் குதறிக் கொண்டு தோட்டா உள்ளே ஏறியிருந்தது.

ஹாஜி பதறினார். "ஷெஃபீக்! இங்கே என்ன

நடந்திருக்கிறதென்றே எனக்குப் புரியவில்லை."

"எனக்குப் புரிகிறது."

அமைதியாய்ச் சொன்ன அஹமத - ஆட்களைப் பார்த்துக் குரலை வெளியிட்டார்.

"இவர்கள் இரண்டு பேரையும் துளைத்திருக்கும் தோட்டா என்ன ரகம் என்பது உடனே எனக்குத் தெரிய வேண்டும். பிணங்களை எரித்து விடுங்கள்."

அஹமத் அங்கிருந்து வெளியே வர - ஹாஜி அவரின் பின்னாலேயே வந்தார்.

"ஷஃபீக்! உங்களுக்கு என்ன புரிந்தது?"

"நான் போட்ட சில கணக்குகள் தப்பு என்பது புரிகிறது."

"நீங்கள் தப்புக் கணக்குப் போட்டீர்களா?"

"ஆமாம். டேனியலை சந்தேகித்து நாம் கொன்றது தப்பு."

"ஏன்?"

"அவன் கொடுத்த டெட்லிபாலில் பிழை எதுவும் இருந்திருக்காது என்று இப்போது எனக்குத் தோன்றுகிறது."

"அப்புறம் ஏன் அது செயல்படவில்லை? வெற்றுப் பந்தை ட்ரேஸ் பண்ணிக் கொண்டு வந்திருக்கிறீர்களே...?"

"தவறான தகவல்கள் மூலம் இந்திய ராணுவத்தைக் குழப்புவதற்கு நாம் திட்டமிட்டோம். ஆனால் இந்திய ராணுவம் நம்மைக் குழப்புவதற்கு சில காரியங்கள் செய்திருக்கிறது."

"புரியவில்லை ஷஃபீக். கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்கள்."

"நம்முடைய ஒவ்வொரு நடவடிக்கையையும் சமீப காலமாய் எவனோ இந்திய ராணுவத்துக்கு உளவு சொல்லி வருகிறான். அவன் மூலமாக டெட்லி பால் விஷயம் அவர்களுக்கு முன்னமே தெரிந்திருக்கிறது. குப்பைத் தொட்டியில் போடப்பட்ட பந்திலிருந்து ரசாயனத்தை நீக்கி விட்டு - நம்மைக் குழப்புவதற்காக வெற்றுப் பந்தை அங்கே போட்டிருக்கிறார்கள்."

ஹாஜி திகைத்து நின்றார்.

"அது மட்டுமில்லை. நாம் சூர்யப் பிரகாஷையும், தயானந்த்தையும் தான் சந்தேகித்து வந்தோம். உண்மையில் வேறு எவனோ ஆசாமி ஐந்தாம் படையாக இங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கிறான். அவன் தான் இவர்களிருவரையும் சுட்டுக் கொன்றிருக்க வேண்டும்."



"யார் அவன்?"

"அதைத்தான் நாம் முதலில் கண்டுபிடிக்க வேண்டும். அவனை ஒழித்துக் கட்டிவிட்டுத்தான் அடுத்த ஆப்ரேஷன்!"

## 40

டெல்லி. நஹாதா சாலை. உயரமாய் நின்றிருந்தது அந்தக் கருங்கல் கட்டிடம். அதன் உச்சந்தலையில் நியானைச் சிறைபிடித்த குழாய் பல்பு பிரபல நாளிதழின் பெயராக வளைந்து நெளிந்திருந்தது.

அந்தக் கட்டிடத்தின் போர்டிகோவில் தடதடத்து ஓய்ந்து நின்றது அந்த யமஹா பைக். பைக்கிலிருந்து இறங்கினார்கள் இரண்டு இளைஞர்கள்.

அவர்களின் நடையில் அவசரம் இருந்தது. படிகளை விநாடியில் கடந்து ரிசப்ஷனிஸ்ட்டிடம் பரிச்சயமாய்ப் புன்னகைத்தார்கள்.

"எடிட்டரைப் பார்க்க வேண்டும்."

அவள் நிமிர்ந்தாள்.

"மிக அவசரம்" என்றான் மற்றொருவன்.

"ப்ளீஸ்... உட்காருங்கள்."

"ரொம்ப ரொம்ப அவசரம் மிஸ்! கன்டோன்மென்ட்டிலிருந்து அவரைத் தொடர்பு கொண்டிருக்கலாம். ஆனால் விஷயத்தின் தீவிரம் காரணமாக நேரில் எடிட்டரைப் பார்க்க வேண்டியிருக்கிறது."

அவள் தலையசைத்து விட்டு இண்டர்காமில் பேசினாள். பிறகு இருவரையும் பார்த்துச் சொன்னாள்.

"எடிட்டர் ஈஸ் வெயிட்டிங் ஃபார் யூ."

அவர்கள் பழக்கப்பட்டவர்களாய் இடதுபக்க வராந்தாவினுள் புகுந்து கோடியிலிருந்த அறையை நோக்கி வேகமாய்ப் போனார்கள். அனுமதி கேட்டுக் கொண்டு எடிட்டர் அறைக்குள் நுழைந்தார்கள்.

"குட் ஈவினிங் ஸார்."

"குட் ஈவினிங். நீங்கள் கன்டோன்மென்ட் ரிப்போர்ட்டர்கள்தானே?"

"எஸ் ஸார்."

"என்ன விஷயம்?"

"சென்ட்ரல் கமேண்ட் ஹெட்குவார்ட்டர்ஸுக்குப் போகிற சில வயர்லஸ் தகவல்கள் நம்முடைய வயர்லஸ்ஸில் க்ராஸ் டாக் ஆயிற்று."

"ராணுவக் கேந்திரத்துக்கு வயர்லஸ் தகவல் போவது சகஜம்தான்."

"தகவல் சகஜமானதில்லை ஸார். பழைய டெல்லி மசூதியினடியில் ஒரு பாகிஸ்தான் தீவிரவாதக் கும்பல் மறைந்துள்ளது. மசூதிக்குள் ஊடுருவியுள்ள ராணுவ நபர் யாரோ அங்கிருந்து கொண்டு தீவிரவாதக் கும்பலின் நடவடிக்கைகளைப் பற்றி ராணுவத்துக்குத் தகவல் அளித்தபடி உள்ளார்கள். அவர்கள் பேச்சிலிருந்து நாங்கள் புரிந்து கொண்டது இது."

"மசூதியில் தீவிரவாதிகளா?"

எடிட்டர் திடுக்கிட்டு கண்ணாடியை உயர்த்தினார்.

"எஸ் ஸார்."

"அதுவும் ராணுவத்துக்குத் தெரிந்தே."

"எஸ் ஸார்."

"மசூதியில் தீவிரவாதக் கும்பல் பதுங்கியிருப்பது தெரிந்த பின்னும் ராணுவம் நடவடிக்கை எடுக்காமல் உள்ளது வியப்பாயுள்ளதே...?"

"தலைப்புச் செய்தியில் ஆளுங்கட்சியைக் கேள்வி கேட்கலாம் ஸார்."

"ஆதாரம் வேண்டுமே?"

"வாய்ஸ் ரிக்கார்டர் இணைக்கப்பட்ட வயர்லஸ் ஸார். அந்த க்ராஸ் டாக் பதிவாகியுள்ளது."

எடிட்டரின் முகம் பிரகாசமடைந்தது.

"இதுதான் நாளைக்குத் தலைப்புச் செய்தி."



## 41

நீள்வட்ட மேஜை வைத்திருந்த கான்ஃப்ரன்ஸ் ஹால். ப்ரைம்மினிஸ்டர், ராணுவ மேஜர், ராணுவ அமைச்சர், கர்னல், லெப்டினன்ட் என்று உயர்மட்டக்குழு கூடியிருந்தது.

காலைப் பத்திரிகைகள் மேஜை மேல் இறைந்து தெரிய எல்லோருமே உஷ்ணமான மன நிலையில் இருந்தார்கள்.



பி.எம். வெடித்தார்.

"என்ன ரகசிய ஆப்ரேஷன்? இன்றைக்குப் பத்திரிகைக்காரன் அம்பலப்படுத்தி விட்டான்."

ராணுவ அதிகாரிகள் அவஸ்தையாய் நெற்றியைத் தேய்த்துக் கொண்டார்கள்.

"இரண்டு சிறப்பு கமேண்டோக்களை ஒப்புதல் பெற்று அனுப்பினீர்களே... என்ன ஆயிற்று?"

"அவர்களிருவரும் நம்மிடம் போலித்தனமாய் செயல்பட்டிருக்கிறார்கள். பணத்துக்கு ஆசைப்பட்டு அவர்கள் பக்கம் சேர்ந்து விட்டார்கள். நம்முடைய இன்னொரு உளவாளி மூலமாய் நமக்குக் கிடைத்த தகவல் இது."

"விஷயத்தை ரகசியமாய் வைக்க வேண்டும். இல்லாவிட்டால் மதக்கலவரம் நிகழ ஏதுவாகும் என்று சொன்னீர்கள். இப்போது விஷயம் அச்சடித்து அம்பலமாகி விட்டது. எதிர்க்கட்சிகளின் கூச்சலையும், கேள்வியையும் சமாளிக்க முடியவில்லை. இரண்டு நாட்களாக பாராளுமன்றம் கூடுவதும், பிறகு அமளி ஏற்பட்டுக் கலைவதுமாக உள்ளது."

கர்னல் குறுக்கிட்டுச் சொன்னார்.

"ஸார்... அந்தத் தீவிரவாதிகளை வளைத்துப் பிடிப்பது ஒன்றும் பெரிய காரியமில்லை. ஆனால் அவர்கள் பதுங்கி இருக்கும் இடம்தான் சிக்கல். அவர்கள் மசூதிக்குள் பதுங்கி இருப்பதால் – உள்ளே நுழைந்து தாக்குதல் நடத்த இயலாத நிலையில் நாம் இருக்கிறோம்." கர்னல் சொன்னதும் பிரதமர் கையில் வைத்திருந்த ஃபைலைக் காட்டினார்.

"இந்தியாவின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் முஸ்லீம் சமுதாயத் தலைவர்களிடமிருந்து வந்திருக்கும் கடிதங்களைப் பாருங்கள். புனிதமான மசூதிக்குள் தீவிரவாதிகள் பதுங்கி இருப்பதை அவர்கள் விரும்பவில்லை. மசூதிக்கு சேதம் நேராமல் உடனடியாய்த் தீவிரவாதிகளை வெளியேற்றுங்கள் என்பதுதான் அவர்களின் கோரிக்கை."

"பிரச்சனையே அதுதான். அந்த மசூதியைச் சுற்றிலும் ஆங்காங்கே சக்தி வாய்ந்த வெடிகுண்டுகளைப் பதுக்கி வைத்து இருக்கிறார்கள். ரிமோட்டில் இயக்கக்கூடிய வெடிகுண்டுகள். உள்ளே இருக்கும் ஹாஜிகள் காட்டிக் கொடுக்க

முயன்றாலோ... அல்லது வெளியே இருந்து ஆபத்து முற்றி விட்டாலோ... தீவிரவாதிகள் வெளியே தப்பிச் சென்று ரிமோட் மூலமாக மசூதியைத் தகர்த்து விடுவார்கள். அதனால்தான் ரகசியமாய் செயல்பட்டுக் கொண்டிருந்தோம். முதல்கட்டமாக அவர்களுடைய ஒவ்வொரு சதியையும் முறியடிக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருந்தோம். அதற்குள் இப்படி..."

பிரதமர் இடைமறித்தார்.

"விஷயம் வெட்ட வெளிச்சமாகி விட்டது. எதையாவது செய்துதான் ஆக வேண்டும். என்ன செய்வீர்களோ எனக்குத் தெரியாது. மசூதிக்கு சேதமில்லாமல் அவர்களைப் பிடித்தாக வேண்டும். அது மட்டுமில்லை. எதிர்க்கட்சியினரின் வாயை அடைக்க பகிரங்கமாக ஒரு நடவடிக்கை உடனே தேவை."

சில வினாடிகளுக்கு அங்கே பலமான அமைதி நிலவியது. பிறகு லெப்டினன்ட் ராஜப்பா அந்த யோசனையை வெளியிட்டார்.

"ஒரு காரியம் செய்யலாம் ஸார்."

அனைவருடைய பார்வையும் அவரிடம் திரும்பின.

"என்ன?"

"மசூதியைச் சுற்றிலும் ராணுவப் படைகளைக் கொண்டு போய் நிறுத்தி விடலாம். அதன் மூலம் அந்தத் தீவிரவாதிகளின் வெளியுலகத் தொடர்பைத் துண்டித்து விடலாம். உள்ளே உணவு இருப்பு தீரும் வரை தாக்குப் பிடிப்பார்கள். அதற்கு மேலே சரண் அடைவதைத் தவிர அவர்களுக்கு வேறு வழி இருக்காது."

"முற்றுகையை விலக்கி விடுங்கள். இல்லாவிட்டால் மசூதியை வெடிகுண்டால் தகர்த்து விடுவோம் என்று மிரட்டல் விடுத்தார்களென்றால்?"

"அப்படி ஒரு மிரட்டலுக்காக நாம் பயப்படத் தேவையில்லை. அப்படி அவர்கள் மிரட்டினால் அது வெற்று மிரட்டலாகத்தான் இருக்க முடியும்."

"எப்படி அவ்வளவு உறுதியாய் சொல்கிறீர்கள்?"

"மசூதிக்கு உள்ளே இருந்து கொண்டு வெடிகுண்டுகளை இயக்கினால் பாதிப்பு அவர்களுக்கும்தான். அவர்கள் தப்பிக்கவே விரும்புவார்கள். தங்களைத் தாங்களே அழித்துக்



கொள்ள நிச்சயம் விரும்ப மாட்டார்கள்."

ராஜப்பாவின் கருத்தை மற்றவர்கள் ஆமோதித்துப் பேச -

மசூதியை ராணுவம் பகிரங்கமாக முற்றுகையிட பிரதமர் ஒப்புதல் கையொப்பமிட்டார்.

## 42

**ஹா**ஜி நிலவறையின் இருட்டான படிகளில் வேகமாய்க் கீழிறங்கி ஓடி வந்தார்.

ஷஃபீக் அஹமதின் அறையில் அவசரமாய் நுழைந்தார்.

"ஷஃபீக்... ஷஃபீக்..."

ஷஃபீக் நிமிர்ந்தார். "என்ன இவ்வளவு பதட்டமாக வருகிறீர்கள்... என்ன விஷயம்?"

"ஆபத்து நம்மைச் சூழ்ந்திருக்கிறது."

ஷஃபீக் அஹமத் தன் உதடுகளின் கோடியில் ஒரு அலட்சியப் புன்னகையை சிந்த விட்டார்.

"ஆபத்தா! நமக்கா?"

ஹாஜியின் முகம் பொடிப் பொடியாய் வியர்வைத் துளிகளுடன் தெரிந்தது.

"நிலைமை தெரியாமல் பேசுகிறீர்கள்."

"என்ன நிலைமை?"

"உடனே மேலே வாருங்கள்." ஷஃபீக் எழுந்து அவரோடு நடந்தார்.

வராந்தாவைக் கடந்தார்கள். மங்கலான வெளிச்சத்தில் படிக்கட்டில் உயர்ந்தார்கள்.

ஷஃபீக் அஹமத் பார்வையை சுற்றும் முற்றும் ஓட விட்டபடியே பளிங்குத் தரையில் நடந்தார். ஆங்காங்கே கறுப்பு உடை அணிந்த தீவிரவாதிகள் லேசர் மெஷின் துப்பாக்கிகளோடு தெரிந்தார்கள்.

இரண்டு நிமிஷ நடைக்குப்பின் -

சுழன்று சென்ற உலோகப்படிகள் வழியே மசூதியின் கோபுரத்தை நோக்கிச் சென்றார்கள்.

அங்கே துப்பாக்கி ஏந்திய சில வீரர்கள் லேசர் பார்வைகளோடு நின்று கொண்டிருந்தார்கள்.

ஷஃபீக் அஹமதைப் பார்த்தவுடன் மரியாதை வணக்கம் செய்தார்கள். அவர் ஒரு சின்ன

தலையசைப்பில் அதை வாங்கிக் கொண்டார்.

மசூதியின் உச்சியில் ஒரு பாதுகாப்பான கட்டிட அமைப்புக்குள் சுழலும் வசதியுள்ள டெலஸ்கோப் பொருத்தியிருந்தது.

ஹாஜி, ஷஃபீக் அஹமதை வேகமான நடையில் அங்கே கூட்டிப் போனார்.

''இந்த டெலஸ்கோப்பில் பாருங்கள் ஷஃபீக்! மசூதியின் நாலா பக்கமும் பாருங்கள். இந்திய ராணுவம் நம்மை பகிரங்கமாகச் சூழ்ந்து விட்டது.''

ஷஃபீக் அஹமது டெலஸ்கோப்பில் கண்ணை வைத்தார். தூரத்துக் காட்சிகள் திடுமென்று பக்கத்தில் வந்தன. சீஸா பச்சை ராணுவ உடுப்புகள் வரிசையாய் கனத்த சுவர் மாதிரி சுற்றிலும் முற்றுகை இட்டிருந்தது.

''ஷஃபீக்! நம்மை அவர்கள் சரணடையச் சொல்லுவார்கள் போலிருக்கிறது.''

''நம்மிடம் ஆயுதங்கள் இருக்கின்றன. வெடிபொருட்கள் இருக்கின்றன. தெரியாமல் மோதுகிறார்கள். முட்டாள்கள்'' ஷஃபீக் சிரித்தார்.

''அவர்கள் முற்றுகை இட்டிருக்கும் இடத்திற்கும், மசூதிக்கும் இடையே உள்ள தூரத்தை கவனியுங்கள்... துப்பாக்கி போன்ற ஆயுதங்களோ... அல்லது... கையெறி குண்டுகளோ வைத்துப் போரிட இயலாத தூரம்.''

''சரி! மசூதியைச் சுற்றிலும் நாம் பதுக்கி வைத்திருக்கிறோமே வெடிகுண்டுகள்... அவற்றை வெடிக்கச் செய்தால் முஸ்லீம்கள் போற்றிப் பாதுகாக்கும் இந்தப் பழமையான மசூதி சின்னாபின்னமாகி விடும். அது மட்டுமல்ல - மசூதிக்குள் இருக்கும் மற்ற அப்பாவி ஹாஜிகள் அத்தனை பேரும் உயிரிழக்க வேண்டி வரும். இதை வைத்தே இந்திய ராணுவத்தை மிரட்டி விடலாம்.''

''அவர்களின் கணக்கு வேறு ஷஃபீக்! ஒன்று... மசூதியை வெடிகுண்டுகளால் தகர்த்தால் கூடவே நாமும் சேர்ந்துதான் அழிந்து போவோம். உயிர்மேல் பற்றுள்ள நாம் அப்படி ஒரு தற்கொலைக் காரியத்தில் இறங்க மாட்டோம் என்பது அவர்களின் நம்பிக்கை. இரண்டாவது... அப்பாவி ஹாஜிகளின் உயிரை நாம் பணயமாக வைக்கக் கூடாது என்பதற்காக அவர்கள் நேற்றே ஒரு காரியம் செய்திருக்கிறார்கள்.



பிரார்த்தனைக்காக வந்த பொதுமக்களோடு கலந்து சில ராணுவ ஆபீசர்கள் மசூதிக்குள் பிரவேசித்து ஹாஜிகளிடம் ராணுவம் முற்றுகையிடப் போவதைத் தெரிவித்து அதற்கு முன்னர் அவர்கள் அங்கிருந்து தப்பிச் செல்ல ஒரு திட்டமும் வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். இப்போது மசூதிக்குள் நாம் மட்டும்தான்! தனிமைப்படுத்தப்பட்டு இருக்கிறோம்.''

ஷஃபீக் அஹமத் புன்னகைத்தார்.

''நீங்கள் ஒரு ஹாஜி என்பதும், நான் ஒரு போராளி என்பதும் இந்த இடத்தில் நிரூபணமாகிறது.''

''என்ன சொல்லுகிறீர்கள்?''

''நீங்கள் சொன்ன தகவல்கள் அத்தனையுமே சரிதான் ஹாஜி. ஆனால் மற்ற ஹாஜிகள் அனைவரும் தப்பிச் சென்று விட்டதாகச் சொன்னீர்களே... அது மட்டும் தவறு.''

ஹாஜி சட்டென்று நிமிர்ந்தார்.

''ஷஃபீக்... நீங்கள்... என்ன சொல்கிறீர்கள்?''

''ஆமாம்! ராணுவம் முற்றுகையிடப் போவதும், ஹாஜிகள் தப்பிச் செல்ல இருந்ததும் முன்னமே எனக்கு தகவல் வந்து விட்டது. ஹாஜிகள் தப்பிச் செல்லும் திட்டத்தை நான் முறியடித்து விட்டேன். அந்த ஹாஜிகள் மட்டுமல்ல - பொதுமக்கள் போல உள்ளே நுழைந்த முக்கியமான அந்த ராணுவ ஆபீஸர்களும் கீழே நிலவறையில் சிறை வைக்கப்பட்டு இருக்கிறார்கள்.''

''ஷஃபீக்?''

''ஆமாம் ஹாஜி! இதெல்லாம் நேற்று நள்ளிரவில் உங்களுக்குத் தெரியாமலேயே நடந்த களேபரங்கள். காலையில் ராணுவம் சூழ்ந்திருப்பதைப் பார்த்து திடுக்கிட்டுப் போய் காவல் ஆட்களிடம் அரசல் புரசலாக விசாரித்துக் கொண்டு என்னிடம் ஓடி வந்திருக்கிறீர்கள்! அப்படித்தானே?''

''ஆ... ஆமாம்! அப்படியானால் மற்ற ஹாஜிக்களும், ராணுவ ஆபீசர்களும் பணயக் கைதிகளாக நிலவறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்களா?''

''ஆமாம்.''

''இப்போதுதான் எனக்கு நிம்மதி மூச்சு வருகிறது.''

''என்னைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு பயப்படவே பயப்படாதீர்கள்.''

ஹாஜியின் தோளைத் தட்டிக் கொடுத்தார் ஷஃபீக் அஹமத்.

## 43

இந்திய ராணுவ கூடாரம் பரபரப்பைத் தத்து எடுத்திருந்தது. லெப்டினண்ட் ராஜப்பாவின் முகத்தில் கவலை மெலிதான முலாம் அடித்து இருந்தது.

உதவியாளர்களிடம் சொன்னார்.

''எதிரிகள் நாம் எதிர்பார்த்ததைவிட வலுவானவர்களாக இருக்கிறார்கள்.''

''நமக்கு இப்படி ஒரு நிலைமை ஏற்படும் என்று நான் கொஞ்சமும் நினைக்கவில்லை ஸார். பொதுமக்கள் போர்வையில் தொழுகை நேரத்தில் உள்ளே போன நாலு பேருமே திறமையான ஆபீஸர்கள். ஹாஜிக்களை வெளியே கொண்டு வந்து விடுவார்கள். அடுத்த கட்டமாக நாம் மிரட்டுகிற விதத்தில் தீவிரவாதிகள் சரணடைந்து விடுவார்கள் என்று தான் நான் நினைத்திருந்தேன்.''

''எதிரிகளை அண்டர் எஸ்டிமேட் செய்தது மாபெரும் தவறு.''

''நமது அடுத்த நடவடிக்கை என்ன?''

''முற்றுகையின் இறுக்கத்தை ஒரு போதும் தளர்த்துவதில்லை, வயர்லஸ்ஸில் அவர்களைத் தொடர்பு கொள்ள முயற்சிகள் நடைபெறுகின்றன. எதையும் விட்டுத் தராமல் அவர்களோடு பேசிப் பார்ப்பது... குறைந்தபட்சம் அவர்களை மசூதியை விட்டு வெளியேற்றுவதிலாவது நாம் வெற்றி பெற்றாக வேண்டும். மசூதிக்குள் இருக்கிறவரை அதிரடியாய்த் தாக்கி அவர்களைப் பிடிப்பதென்பது நடக்காத காரியம்.''

அதே விநாடி -

கூடாரத்தின் வாயிலில் நிழலாடியது.

ஒரு யூனிபாரம் விறைப்பாய் ராணுவ சல்யூட் தந்து - பின் தளர்ந்தது.

''என்ன?'' என்றார் ராஜப்பா.

''வயர்லஸ்ஸில் அவர்களுடைய ஃப்ரீக்வன்சி கிடைத்திருக்கிறது ஸார். யாரோ ஷஃபீக் அஹமத் என்ற ஆசாமி பேசுகிறான்.''



பரபரத்த ராஜப்பா - சற்று தள்ளி வயர்லஸ் கருவிகள் அமைக்கப்பட்ட கூடாரத்துக்கு விரைந்தார். அவர் உள்ளே நுழைந்ததும் - மற்றவர்கள் ஒதுங்கி நின்றார்கள்.

ராஜப்பா பொத்தான்களைப் படபடவென்று தட்டி குரலை வெளியிட்டார்.

''ஹலோ... நான்தான் ஆப்ரேஷன் இன்சார்ஜ் ராஜப்பா பேசுகிறேன்.''

''பேசுங்கள் லெப்டினண்ட் ராஜப்பா... பேசுங்கள்...''

கொஞ்சமும் பதட்டமோ, பயமோ இல்லாத தொனியில் ஷஃபீக் அஹமதின் குரல் ஒலித்தது. ராஜப்பா குரலை உயர்த்திக் கொண்டார்.

''இப்போது நீங்கள் எல்லோரும் மசூதிக்குள் அகப்பட்டிருக்கிறீர்கள். உள்ளே இருந்து ஒரு துரும்புகூட வெளியே வர முடியாது. அதே போல் எங்கள் அனுமதி இல்லாமல் வெளியே இருந்து யாரும் உள்ளே போக முடியாது.''

ஷஃபீக் அஹமத் சிரித்தார்.

''உங்கள் முற்றுகையால் என்ன பிரயோஜனம்? நாங்கள் சரணடைந்து விடுவோம் என்று எதிர்பார்க்கிறீர்களா?''

''நிச்சயமாய்.''

''பகல் கனவு மிஸ்டர் லெப்டினண்ட்! உங்களை நான் எச்சரிக்கிறேன். நாங்கள் சில கோரிக்கைகளை உங்கள்முன் வைக்கப் போகிறோம். அவை நிறைவேறும் வரை... எங்களிடம் பிடிபட்டிருக்கும் ராணுவ ஆபீஸர்கள் மற்றும் ஹாஜிகளை ஒரு நாளைக்கு ஒருவராகப் பலியிட்டு உங்கள் முன்னால் தூக்கி எறியப் போகிறோம். இன்றைக்குத் துவக்க விழா... செய்தி அடுத்த சில விநாடிகளில் கிடைக்கும்.''

சொல்லிவிட்டு ஷஃபீக் அஹமத் வயர்லஸ்ஸை அணைத்தார்.

ராஜப்பா கவலையாக - தன் கன்னத்தைத் தேய்த்த விநாடி - செக்யூரிட்டி விங்கிலிருந்து ஒரு ஆபீஸர் ஓடி வந்து உள்ளே நுழைந்தார்.

''ஸார்... மசூதிக்குள் சிக்கிக் கொண்ட வார்டன் ஆபீஸர்களில் ஒருவர் கோரமாய்ச் சுட்டுக் கொல்லப்பட்டு இருக்கிறார்.''

ராஜப்பா அவசரமாய் வெளியே வந்தார். ராணுவ முற்றுகைக்கு நூறு மீட்டர் முன்னே - ரத்தமாய்த் தரையில் விழுந்து கிடந்தார் அந்த ராணுவ ஆபீஸர்.

"தீவிரவாதிகள் இவர் உடலை எறிந்து விட்டு போனார்கள்" ஒரு அதிகாரி சொல்ல - ராஜப்பா படபடத்தார். "அவர்களைப் பிடிக்க முயலவில்லையா?"

"வேகமாய் ஒரு ஜீப்பில் வந்தார்கள். உடலைத் தள்ளி விட்டார்கள். வந்த வேகத்திலேயே போய் விட்டார்கள். சுட முயன்றோம். ஆனால் தப்பி விட்டார்கள்."

## 44

ஷஃபீக் அஹமத் உற்சாகமாய்ச் சிரித்து ஹாஜியின் தோளில் தட்டிக் கொடுத்தார்.

"பயப்படாமல் இருங்கள் ஹாஜி."

ஹாஜியின் கண்களில் கலவரம் முற்றிப் போயிருந்தது. பயந்த குரலில் பேசினார்.

"எப்படி இருக்க முடியும்? மசூதியைச் சுற்றி வளைத்துக் கொண்டு ராணுவத்தினர் இருக்கும் போது - இங்கே பயமில்லாமல் எப்படி இருக்க முடியும்?"

"என்ன பயம்?"

"வரப் போவதை நினைத்துப் பாருங்கள். ஒரு வாரம்... இரண்டு வாரம்... அதிகபட்சம் மூன்று வாரங்களுக்கு நம்மால் இதே நிலைமையைத் தாக்குப் பிடிக்க முடியும். அதற்கு மேலே என்ன செய்வது? அவர்களுக்கு அப்படியல்ல. இன்னும் ஒரு வருஷத்துக்குக்கூட முற்றுகையை அப்படியே நிறுத்தி வைக்க வாய்ப்பும் வசதியும் உள்ளது."

"தயவு செய்து... இந்த ஷஃபீக் அஹமதைக் குறைத்து மதிப்பிட வேண்டாம், ஹாஜி! நீங்கள் சொன்னீர்களே... ஒரு வாரம்... பத்து நாள்... அல்லது மூன்று வாரம் என்று... அதுவரை நாம் அவர்களுக்கு சமமான பலசாலிகள்தான், உங்கள் கருத்துப்படி அதற்கப்புறம்தான் நாம் பலவீனமடையத் துவங்குவோம். நான் என்ன சொல்கிறேன் என்றால்... நாம் அவர்களுக்குச் சமமான பலசாலியாய்



இருக்கிறபோதே இங்கிருந்து தப்பிச் சென்று விடலாம் என்கிறேன்."

ஹாஜி திமிர்ந்தார்.

"அவர்கள் முற்றுகை இட்டிருக்கும் போது... கூண்டோடு நாம் தப்ப முடியுமா?"

"முடியும்."

"எப்படி?"

"கொஞ்சம் நாம் மூர்க்கத்தனம் காண்பிக்க வேண்டும்."

"புரியவில்லையே ஷஃபீக்!"

"இன்றைக்கு ஒரு ராணுவ ஆபீஸரை சுட்டுக் கொன்றோமே... அதே போல் நாளைக்கு ஒரு ஹாஜியை சுட்டு வீசப் போகிறோம். அப்புறம் வேடிக்கை பாருங்கள். நாடு முழுவதும் ராணுவத்துக்கு எதிராக கொந்தளிப்பு நடக்கும். அதற்கப்புறம் நம்முடைய கோரிக்கை எதுவானாலும் இந்திய ராணுவம் சாவி கொடுத்த பொம்மை மாதிரி கேட்கும்."

"என்ன கோரிக்கை வைக்கப் போகிறீர்கள்?"

"சின்னக் கோரிக்கைதான்."

"அதுதான் என்ன?"

"கராச்சி வரை நாம் அத்தனை பேரும் தப்பிச் செல்ல ஒரு விமானம் வேண்டும். எந்தவிதமான இடைஞ்சலும் இல்லாமல் அவர்கள் நம்மை வழியனுப்ப வேண்டும்."

ஹாஜியின் முகம் மலர்ந்தது.

## 45

மேஜரும், கர்னலும் முற்றுகை அணிவகுப்பை முழுதாய் ஒரு சுற்று சுற்றிவிட்டு லெப்டினன்ட் ராஜப்பாவை ஏறிட்டார்கள்.

"எல்லாமே சரிதான்! ஆனால்... ஹாஜிகளை மசூதிக்குள்ளிருந்து வெளியேற்றத் தவறியதுதான் இப்போது பிரச்சனைக்குரிய விஷயம்."

"மசூதிக்குள் அவர்கள் வேரூன்றி இருக்கிறார்கள் ஸார். நடக்கும் ஒவ்வொரு சின்னக் குளறுபடியும் ஷஃபீக் அஹமதுக்கு உடனே தெரிந்து விடுகிறது. வெளியாட்கள் ஊடுருவி காரியம் சாதிப்பது கஷ்டமான காரியம்."

''மருதியைப் பாதுகாக்கக் கோரி நாடு முழுவதிலிருந்தும் முஸ்லீம் அமைப்புகள் அறிக்கை விடுத்துள்ளன. இது கத்தி மேல் நடக்கிற காரியம். மருதியையும், ஹாஜிகளையும் எந்த சேதமும் இல்லாமல் காப்பாற்ற வேண்டிய கடமை நமக்கு உள்ளது.''

''தனி விமானம் கேட்டு கோரிக்கை விடுத்துள்ளார்கள். இன்றிரவு பத்து மணிக்குள் பதில் சொல்லவில்லையென்றால் நாளைக்குக் காலையில் ஒரு ஹாஜி பிணமாகக் கிடப்பார் என்று மிரட்டியிருக்கிறார்கள்.''

''அவர்கள் கோரிக்கைக்கு அடிபணிய வேண்டியதுதான்.''

''ஸார்?''

''ஆமாம். இப்போது எல்லாவற்றையும்விட அதி முக்கியம் அவர்களை மருதிக்குள்ளிருந்து வெளியேற்றுவதுதான். மருதிக்குள் அவர்கள் இருக்கிறவரை நம் கைகள் கட்டப்பட்ட நிலைதான்.''

''அதற்காக... அவர்களுக்கு அடிபணிவதா?''

''இது அடிபணிதல் இல்லை. தந்திரம். தீவிரவாதிகளை புனிதமான மருதியை விட்டு வெளிக் கொணர்வதுதான் நமது நோக்கம். இப்போது அவர்களாகவே முன்வந்துள்ளார்கள்.''

''அப்படியானால்... அவர்கள் கேட்ட விமானம் தர வேண்டுமா?''

''ஆமாம்! ''

''பணயக் கைதிகளை முன்னிறுத்தி அவர்கள் தப்பிச் சென்று விடுவார்கள். அந்தக் கொடூரமான தீவிரவாதிகளை அவ்வளவு சுலபத்தில் நாம் தப்ப விடக்கூடாது. ஒரு ரெஜிமெண்டில் இரண்டாயிரம் வீரர்களை அநியாயமாய் விஷம் வைத்துக் கொலை செய்தவர்கள். அதற்கு மேலும் பல கொடூரச் செயல்களை நாம் முறியடித்திருக்கிறோம்.''

''தப்ப விட்டால்தானே!''

''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?''

''விமானத்தைக் கொடுக்கிற மாதிரி கொடுத்து - அவர்களை முதலில் மருதியிலிருந்து வெளியேற்ற வேண்டும். அவர்கள் வெளியே வந்ததுமே நாம் நம்முடைய வேலையைக் காட்ட வேண்டும்.''



''எப்படி ஸார்?''

''முதலில் அவர்கள் கோரிக்கைக்கு உடன்படுவதாகச் சொல்லி ஹாஜிகளின் உயிரைக் காப்பாற்றுங்கள். மற்ற விபரங்களைப் பிறகு சொல்லுகிறேன்.''

## 46

ஷஃபீக் அஹமத் வயர்லெஸ் ரிஸீவரை வைத்து விட்டு - ஹாஜியைக் கட்டிப் பிடித்து தன் சந்தோஷத்தை வெளியிட்டார்.

''அவர்கள் நம் கோரிக்கைக்கு அடிபணிந்து விட்டார்கள்.''

''அப்படியா?''

''ஆமாம். நாளைக்கு காலையில பத்து மணிக்கு விமானம் மருதிக்கு எதிர்ப்புறமுள்ள மைதானத்தில கொண்டு வந்து நிறுத்தப்படும். அந்த விமானம் மூலம் நாம் கராச்சி தப்பிச் செல்லப் போகிறோம்.''

''அப்படியானால் நீங்கள் வந்த காரியம் முடியவில்லையே?''

''ஒரு ஆப்ரேஷன் தவிர மற்றதெல்லாம் சரிவர நடைபெறவில்லை. அதுதான் வருத்தம். ஆனால் அந்த வருத்தத்தை மறக்கடிக்கிற மாதிரி ஒரு காரியத்தைப் பண்ணி விட்டுத்தான் நான் இங்கிருந்து தப்பிச் செல்வேன்.''

''என்ன காரியம்?''

''ஆப்ரேஷன் ஏரோ நாக்! ஐநூறுக்கும் மேற்பட்ட இந்தியாவின் அதிமுக்கிய தலைகள் அதில் உருளப் போகின்றன. இந்த ஷஃபீக் அஹமதை இந்தியா அவ்வளவு சுலபத்தில் மறக்காது.''

''நீங்கள் இங்கே இருந்து கொண்டு எப்படி அந்த ஆப்ரேஷனை நடத்தப் போகிறீர்கள்...?''

ஷஃபீக் அஹமத் சிரித்தார்.

''ஆப்ரேஷனுக்கான ஏற்பாடுகள் ஏற்கனவே நடந்து கொண்டுதானிருக்கின்றன ஹாஜி...''

''எங்கே... எங்கே...?''

''சேது தூர்க் மலை உச்சியில்...''

''அங்கே யார் அந்த ஏற்பாடுகளைச் செய்கிறார்கள்?''

''சரியான நபரிடம் நான் அந்தக் காரியத்தை

ஒப்படைத்து இருக்கிறேன். யாருடைய சந்தேகத்துக்கும் இலக்காகாமல் அங்கே சத்தமில்லாமல் ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன."

"யாரிடம் வேலையை ஒப்படைத்திருக்கிறீர்கள்?"

"கல்யாண்!"

ஹாஜி ஆச்சரியமாய் ஷஃபீக் அஹமதைப் பார்த்தார்.

"பாருக் நிவாஸ் ஹோட்டல் மேனேஜர் கல்யாணிடமா?"

"ஆமாம்."

"அதென்ன ஆபரேஷன் ஏரோ நாக்?"

ஹாஜியின் கேள்விக்குப் பதிலேதும் சொல்லாமல் குரூரமாய் புன்னகைத்தார் ஷஃபீக் அஹமத்.

## 47

சேது-துர்க் மலையின் ஆறாயிரம் அடி உயரத்தில் சின்ன சமவெளி தெரிந்தது. அடர்த்தியான மேக்னோலியா மரங்கள் சுற்றிலும் அரண் மாதிரி வளர்ந்து அந்தச் சமவெளியை வெளிப் பார்வைக்கு மறைத்திருந்தது.

சமவெளியின் மையத்தில் ஒரு தற்காலிக அஸ்பெஸ்டாஸ் கட்டிடம். கறுப்பு உடை காவலாட்களின் நடமாட்டம் சொற்பமாய் அங்கே தெரிந்தது. சன்னமான உறுமலுடன் ஒரு ஜீப் அந்த அஸ்பெஸ்டாஸ் கட்டிடத்தை நெருங்கி தன் இயக்கங்களை அறுத்துக் கொண்டது.

உள்ளிருந்து கல்யாண் இறங்கினான். கூலிங்கிளாசை விலக்கி சர்ட் பாக்கெட்டில் சொருகிக் கொண்டு - அஸ்பெஸ்டாஸ் கொட்டகையை நோக்கி நடந்தான்.

வாயில் காவலர்கள் பவ்யமாய் வழி விட்டார்கள்.

உள்ளே நுழைய-

பரபரப்பான இயக்கங்கள் தெரிந்தன.

தலைகளில் வழுக்கை விழுந்த, கண்களில் கனமான கண்ணாடிகளை மாட்டியிருந்த - என்ஜினியர்கள் தீவிரமாய் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். உயரமான கம்ப்யூட்டர் பேனல்



போர்டுகள் அமைக்கப்பட்டு - அதன் திரைகளிலும், முட்கள் நகரும் டயல்களிலும் ஏதோ தீவிரம் தெரிந்தது.

கல்யாண் நெருங்கிக் கேட்டான். "ப்ராகரெஸ் எந்த அளவில் உள்ளது?"

"கிட்டத்தட்ட முடியும் தறுவாயில்."

"மைக்ரோலைட் ஏர்க்ராஃப்ட் தளம் அமைப்பதில் என்னவோ பிரச்சினை என்று சொன்னார்கள்."

"தளம் அமைக்கப்பட்ட கோணத்தில் சில டிகிரி பிசகு இருந்ததை கம்ப்யூட்டர் கணக்கீடுகள் உறுதி செய்தன."

"கோணம் சரி செய்யப்பட்டதா?"

"சரி செய்தாகி விட்டது."

கல்யாண் நிமிர்ந்து பார்த்தான்.

அஸ்பெஸ்டாஸ் கொட்டகையின் மேல் கூரை ஒரு இடத்தில் திறந்திருக்க - அங்கே ஒரு பலமான மேடை அமைக்கப்பட்டிருந்தது. ஓட்டப் பந்தய வீரனைப் போல எந்த நிமிஷமும் கிளம்பத் துடிக்கிற மாதிரி - நின்றிருந்தது அந்த தானியங்கி மைக்ரோ ஏர்க்ராஃப்ட்.

கல்யாண் இரும்புப் படிகளில் சரசரவென்று மேலே ஏறினான். நீல உடை அணிந்த ஃப்ளைட் என்ஜினியர்கள் சிலர் கையில் கருவிகளோடு அந்தக் குட்டி அலுமினியப் பறவையைத் தட்டிக் கொண்டு இருந்தார்கள்.

அதன் மூக்கருகே - ஏர்க்ராஃப்ட் வெளியேற செவ்வக வடிவத் திறப்பு இருந்தது. அந்தத் திறப்புக்கு வெளியே- கீழே...ஏ...ஏ...வெகு கீழே... டெல்லி நகரம் புள்ளி புள்ளியான கட்டிடங்களோடு மவுனமாய் இயங்கிக் கொண்டிருந்தது.

"இலக்கு தவறாதே?"

"இந்த டெலஸ்கோப்பில் பாருங்கள். இலக்கு தெரியும்."

கல்யாண் டெலஸ்கோப்பில் கண்ணை வைத்தான். மர இடைவெளிகளுக்கு நடுவே...

அந்த மாளிகை தெரிந்தது.

ராஷ்டிரபதி பவன்.

கல்யாணின் மனசுக்குள் அந்த குரூர எண்ணம் ஓடியது.

'பதினேழாம் தேதி இதை இயக்கப் போகிறோம்.

ஜனாதிபதியோடு சேர்ந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரும் பலியாகப் போகிறார்கள். பதினேழாம் தேதி இரவு ஏழு மணிக்கு ஜனாதிபதி - பாராளுமன்ற உறுப்பினர்களுக்குத் தேநீர் விருந்து கொடுக்கிறார். அதே நாள்... இதே நேரத்தில்தான் இந்த ஏரோ நாக் விமானம் பாயப்போகிறது. இந்தியாவின் அஸ்திவாரமே ஆட்டம் காணப் போகிறது.'

குரூர வெறியோடு அந்த ஏர்க்ராஃப்டின் உலோக உடம்பைத் தடவிக் கொடுத்தான் கல்யாண்.

## 48

அந்தச் சிறிய பயணிகள் விமானம் பெரிய இரைச்சலோடு மைதானத்தில் தரையிறங்கி - வேகம் குறைப்பதற்காக நாலைந்து முறை மைதானத்தை வட்டமடித்து விட்டு ஓய்ந்தது.

லெப்டினன்ட் ராஜப்பா உயரதிகாரிகளோடு அந்த விமானத்தை நோக்கி நடந்தார்.

விமானத்தின் வயிறு பிளந்து படிக்கட்டாகக் கீழே தரையைத் தொட்டு நின்றது.

அந்தப் படிகளில் ஏறினார்கள்.

உள்ளே மூன்று வரிசை வகுத்து - எழுபத்தி இரண்டு இருக்கைகள் காலியாய்த் தெரிந்தன.

காக்பிட்டிலிருந்து பைலட்டும், துணை பைலட்டும் வெளியே வந்தார்கள். இருவருமே விமானப்படை அதிகாரிகள்.

ஓர் அதிகாரி ராஜப்பாவிடம் கேட்டார்.

''விமானத்தை அவர்களே கையாண்டு கொள்வார்களா?''

''ஆமாம். எரிபொருள் நிரப்பப்பட்ட விமானம் வேண்டும். விமானத்திலோ, விமானத்திற்கு அருகிலோ ஒரு ஈ காக்கை கூட இருக்கக்கூடாது. இதுதான் அவர்கள் கோரிக்கை.''

''ஆட்களை நாம் மறைவாய் நிறுத்த முடியாதா?''

''அவர்கள் கையில் ரிமோட் கண்ட்ரோல் உள்ளது.



ரிமோட்டை அழுத்தினால் மருதி தூள் தூளாகப் போய்விடும். மருதிக்குள் சிறை வைக்கப்பட்டிருக்கும் தறாஜிகளும் அநியாயமாய்ப் பலியாக நேரும்.''

''எப்படித்தான் அவர்களைப் பிடிப்பது?''

''விட்டுப்பிடிக்க வேண்டும்.''

''அவர்கள் விட்டால் நேராகக் கராச்சிக்குப் பறந்து விடுவார்களே... பாகிஸ்தானுக்குத் தப்பிச் சென்று விட்டால் நாம் எதுவுமே செய்ய இயலாமல் போய்விடும்.''

''அவ்வளவு தூரம் நாம் விடப்போவதில்லை.''

''என்ன செய்யப் போகிறோம்?''

''ஏற்கனவே பாதி காரியம் செய்தாகி விட்டது.''

''புரியவில்லையே?''

''காக்பிட்டில் கண்ட்ரோல் பேனல் அருகே - விமானக் கட்டுமானத்தில் ஒரு சின்ன மாறுதல் செய்யப்பட்டுள்ளது.''

''மாறுதல்?''

''இரண்டு பேர் பதுங்கிக் கொள்ளத் தோதாக ஒரு மறைவிடம் கண்ட்ரோல் பேனல் அருகில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.''

''இவ்வளவு நேரம் நாங்கள் விமானத்தை காக்பிட்டிலிருந்து இயக்கி வந்தோம். அதை நாங்கள் கவனிக்கவேயில்லையே...'' ஒரு பைலட் ஆச்சர்யப்பட்டார்.

''கவனித்திருக்க முடியாது. சட்டென்று வித்தியாசம் தெரியாத வகையில் மறைவிடம் அமைக்கப்பட்டுள்ளது. மறைவிடம் மட்டுமல்ல. அதனுள் பயிற்சி பெற்ற இரண்டு ஏர்ஃபோர்ஸ் கமேண்டோக்கள் மறைந்துள்ளார்கள்.''

''விமானம், ரிமோட் செயல்படாத தொலைவுக்கு சென்றதும் - அந்தக் கமேண்டோக்கள் மறைவிடத்திலிருந்து வெளியே வருவார்கள். காக்பிட்டில் உள்ள விமானிகளைத் தாக்கி விமானத்தை தங்கள் கட்டுப்பாட்டிற்கு கொண்டு வருவார்கள். அப்புறம் விமானம் கராச்சி செல்லாது. நேராக புதுடெல்லி விமான நிலையம்தான்.''

''திட்டம் கனகச்சிதம்.''

## 49

ஷஃபீக் அஹமத் வயர்லஸ்ஸில் பேசி முடித்து விட்டு ஹாஜியிடம் நிமிர்ந்தார்.

''நாம் தப்பிச் செல்ல விமானம் வந்தாகிவிட்டது!''

''அதில் சூழ்ச்சி எதுவும் இருக்காதே...?''

''இருக்காது. அப்படி ஏதாவது இருந்தாலும் - அதில் நிச்சயமாய் நாம் மாட்டிக் கொள்ளப் போவதில்லை, அது அவர்களுக்குத்தான் போதாத காலமாய் இருக்கும். தெரியாத் தனமாக சூழ்ச்சி செய்திருந்தார்களென்றால் அதற்காக ஷஃபீக் கொடுக்கும் தண்டனையை மோசமாக அனுபவித்து விடுவார்கள்.''

ஹாஜி பின் தொடர, ஷஃபீக் அஹமத் கோபுர உச்சிக்கு சுழல்படிகள் வழியே போனார். டெலஸ்கோப்பில் கண்ணை வைத்துப் பார்த்தார்.

துடைத்து வைத்தது போல மைதானம் தெரிந்தது. மைதானத்தின் மையத்தில் அநாதையாய் அந்தச் சிறிய விமானம் வெயில் பளபளப்போடு நின்றிருந்தது.

விமானத்தை விட்டு வெகுதூரத்தில் ராணுவப் படைகளின் அணிவகுப்பு நின்றிருந்தது. ஷஃபீக் அஹமத் புன்னகைத்தார்.

''டெலஸ்கோப்பில் பாருங்கள் ஹாஜி! விமானம் ஒற்றையாய் மனித வாசனையே இல்லாமல் இருக்கிறது.''

ஹாஜி டெலஸ்கோப்பினுள் கண்களைப் பதித்துவிட்டு - தலையை அசைத்தார்.

''ஆமாம்!''

''நம்மிடம் அவர்களுக்கு நிச்சயமாய் பயம் இருக்கும்! சரியாய் பதினோரு மணிக்கு டேக் ஆஃப்.''

''மற்ற ஹாஜிகள்..?''

''அவர்கள் மசூதிக்குள்ளேயே சிறையில் இருக்கட்டும். அவர்கள்தான் நம் துருப்புச் சீட்டு. நாம் பத்திரமாய் டேக் ஆஃப் ஆகும் வரை அவர்கள் இந்த மசூதி நிலவறைச் சிறைக்குள் இருந்துதான் ஆக வேண்டும்.''

ஷஃபீக் அஹமத் கீழே வந்தார்.



தன் ஆட்களை அழைத்து உத்தரவு பிறப்பித்தார். அவருடைய உத்தரவுகளின்படி முக்கிய தஸ்தாவேஜுகள் சேகரித்துக் கொள்ளப்பட்டன. தடயங்கள் கவனமாய் அழிக்கப்பட்டன. சிறையில் அடைக்கப்பட்டு பரிதாப முகங்களோடு இருந்த மற்ற ஹாஜிகளைப் பார்த்துச் சொன்னார் ஷஃபீக் அஹமத்.

''உங்கள் வாழ்க்கையும், சாவும் என் கையில் இல்லை. இந்திய ராணுவத்தின் கையில் இருக்கிறது. ஆமாம், இந்திய ராணுவம் எங்களுக்காக விமானம் ஏற்பாடு செய்துள்ளது. நாங்கள் அதில் பத்திரமாய் ஊர் போய்ச் சேர்ந்தால் நீங்களும் பத்திரமாய் உயிர் பிழைப்பீர்கள். எங்களுக்கு ஏதாவது ஆபத்து என்பது தெரிந்தால் மறு விநாடியே நான் இதோ இந்த ரிமோட் கண்ட்ரோலை அழுத்தி விடுவேன் - அப்புறம் இந்த மசூதியோடு சிதைய வேண்டியதுதான்.''

ஹாஜிகளில் ஒருவர் ஷஃபீக் அஹமதைப் பார்த்து உமிழ்ந்தார்.

''த்தூ! நீயெல்லாம் ஒரு முஸல்மானா? புனிதமான நம் மதத்துக்கே களங்கம் கற்பிக்க வந்த சாத்தான்!''

''ஆமாம். இந்தியாவுக்கு நான் ஒரு சாத்தானாகவே காட்சி அளிக்க விரும்புகிறேன்! உங்கள் நல்ல வாக்குக்கு என் மனமார்ந்த நன்றி!''

கிண்டல் ததும்பும் தொனியில் சொல்லிவிட்டு அந்த இடத்தை விட்டு அகன்றார் ஷஃபீக் அஹமத்.

பாதுகாவலர்கள் முன்னும் பின்னும் செல்ல, மசூதியை விட்டு வெளியே வந்தார்கள். அவர்கள், சுற்றிலும், ஜாக்கிரதை பார்வை பார்த்து விட்டு - தொலைவில் நின்றிருந்த விமானத்தை நோக்கிப் போனார்கள்.

இந்திய இராணுவத்தினர் வெகு தொலைவில் அசையாமல் சிலை போல் நின்று இருந்தார்கள்.

விமானத்தை நெருங்கியதும் படிகள் அருகே நின்றார்கள். ஷஃபீக் அஹமத் பாதுகாவலர்களைப் பார்த்துக் கண்ணடிக்க, அவர்கள் மெஷின் கன்னைத் தயார் நிலையில் பிடித்துக் கொண்டு - தீவிரமாய் நாலாபுறமும் சுழன்றபடியே விமானத்திற்குள் நுழைந்தார்கள்.

உள்ளே எந்தவிதமான அதிரடித் தாக்குதலுக்கும் சாத்தியமில்லை என்பதை உறுதிப்படுத்தி கொண்டு - ஷஃபீக் அஹமதைப் பார்த்து தலையசைத்தார்கள்.

"உள்ளே வரலாம்."

ஷஃபீக் அஹமத் விமானத்தின் படிகளில் ஏறினார். வெறிச்சென்ற இருக்கைகளை ஒருதரம் எறிட்டார். பின்பு -

காக்பிட்டுக்குள் நுழைந்தார் . விமான பைலட் சொன்னார்.

"முதலில் எரிபொருள் அளவைத் தெரிந்து கொள்ள வேண்டும் ஸார்!"

"பாருங்கள்."

மீட்டரை ஆன் செய்தார்கள்.

ஃப்யூல் லெவல் ஃபுல் என்று காட்டியது முள்.

"நஸீர், டிடெக்டர் கொண்டு வந்தாயா?"

"கொண்டு வந்திருக்கிறேன்."

"ஏதாவது வெடிகுண்டு அபாயங்கள் பொருத்தப்பட்டுள்ளதா என்று சோதித்துப் பார்த்துவிடு."

"ஆகட்டும் சார்."

டிடெக்டரைக் கையில் பிடித்துக் கொண்டு அவன் விமானத்தை ஒரு முறை சுற்றி வந்தான். சொன்னான்.

"எதுவும் தப்பாக இல்லை ஸார்."

"ஜானியைக் கூட்டி வா..." என்றார் ஷஃபீக் அஹமத்.

"ஜானி எதற்கு?" என்றார் ஹாஜி.

"நான் பல சமயம் மனிதர்களை மட்டுமல்ல; அவர்கள் கண்டுபிடிக்கும் கருவிகளைக்கூட நம்ப மாட்டேன். ஜானி வெடிகுண்டுகளை டிடெக்ட் பண்ணுவதில் எக்ஸ்பர்ட்."

சில நிமிஷங்களில் 'ஜானி' என்கிற அந்த மையிருட்டு நிற டாபர்மேன் கம்பீரத்தோடு விமானப் படிக்கட்டில் தாவி வந்தது.

"ஜானி... கம் திஸ் சைட்..."

ட்ரெயினரின் அதட்டலுக்கு விசுவாசத்துடன் கட்டுப்பட்டு விமானத்துக்குள் நுழைந்தது.

மோப்பம் பிடித்தபடி விமானத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் ஓடிய ஜானி காக்பிட்டுக்குள் நுழைந்த சில விநாடிகளிலேயே - அந்த பேனல் போர்டுக்குக் கீழே பார்த்து இடை விடாமல் குரைக்க ஆரம்பித்தது.

ஷஃபீக் அஹமத் சட்டென்று முகம் இறுகிப்போய் பாதுகாவலர்களுக்கு சைகை செய்தார்.

அவர்கள் ஜாக்கிரதையுடன் அந்தப் பகுதியை



ஆராய்ந்தார்கள்.

"தடுப்பை உடைத்துப் பாருங்கள்..." என்று கட்டளையிட்டார் ஷஃபீக் அஹமத்.

தடுப்பு உடைக்கப்பட - இயந்திரத் துப்பாக்கிகளோடு உள்ளிருந்த இரண்டு கமேண்டோக்கள் வேகமாய் வெளிப்பட்டார்கள்.

ஷஃபீக் அஹமதின் முகம் சிவந்து போனது.

"ஷட் த பாஸ்டர்ஸ்!" ஆத்திரத்துடன் கத்தி பூட்ஸ் காலால் தரையை உதைத்தார்.

பாதுகாவலர்கள் அதிவேகமாய்ச் செயல்பட்டு தங்கள் கையிலிருந்த ஏ.கே. 47 களை இயக்கினார்கள்.

அந்த எஃபோர்ஸ் கமேண்டோக்கள் கண்ணிமைக்கும் நேரத்துக்குள் சரமாரியாகத் துப்பாக்கிக் குண்டுகள் வாங்கி - ரத்தம் தெறிக்க காக்பிட் தரையில் விழுந்தார்கள். ஸ்லோ மோஷனில் துடித்தார்கள்.

அடுத்த சில விநாடிகளுக்குள் துடிப்பு அடங்கிப் போனார்கள்.

"எல்லோரும் மகுதிக்குத் திரும்புங்கள்... இந்திய நாய்கள் ஏமாற்றி விட்டார்கள்."

ஆத்திரக் குரலில் பலமாய்க் கத்தினார் ஷஃபீக் அஹமத்




சேது தூர்க் மலைப்பகுதி. கல்யாண் கம்ப்யூட்டர் பேனல் அருகே வந்தான். 'பீப் பீப்' என்ற எலக்ட்ரானிக் ஓசைகளும், மைக்ரோ இயக்கங்களும் மெலிதாய்க் கேட்டன. என்ஜினியரைக் கேட்டான்.

"எல்லாம் தயார்தானா?"

"ஆயத்தமாக உள்ளன ஸார்."

என்ஜினியர் ஸ்விட்சுகளைத் தட்டிக் காண்பித்தான்.

சிவப்பு முட்கள் 'நார்மல்' 'நார்மல்' என்று சங்கேதத்தில் காட்டி நின்றன. கல்யாண் வாட்சைப் பார்த்துக் கொண்டே ஏரோநாக் ஏர்க்ராஃப்ட் நிறுத்தப்பட்டிருந்த மேல் பீடத்துக்கு ஏறினான்.

அங்கிருந்த என்ஜினியர்கள் புன்னகைத்து வழி

விட்டார்கள்.

கல்யாண் டெலஸ்கோப் வழியே வெளியே பார்த்தான். சூழ்ந்திருந்த மரங்கள் எல்லாம் வெட்டிச் சாய்க்கப்பட்டிருந்தன. நகரம் பளிரென்று தெரிந்தது. அந்தி வானம் இளஞ்சிவப்பில் இருந்து கறுப்புக்கு மாறி லேசாய் இருட்டிக் கொண்டிருந்தது.

"எல்லாம் சரியாக உள்ளதா?"

"துல்லியம் ஸார். நீங்கள் தலையசைத்தால் போதும். அடுத்த விநாடி இந்த ஆட்டோ ஏர்க்ராஃப்ட் வெடிபொருட்களை கர்ப்பம் தாங்கிக் கொண்டு ராஷ்டிரபதிபவனை நோக்கிச் சீறும். சில விநாடிகள்தான். ஜனங்கள் இதை ஒரு சின்ன தீபாவளி பாணம் போல வானத்தில் பார்ப்பார்கள். அப்புறம் ராஷ்டிரபதி பவன் பற்றியெரியும் பவனாக மாறிவிடும். எல்லாமே நிமிஷங்களில் சாம்பல்."

கல்யாண் வாட்சைப் பார்த்தான்.

முட்கள் 6.35 - ல் தத்திக் கொண்டிருந்தன.

"ஏழு மணிக்குத்தான் ஜனாதிபதி அளிக்கும் தேநீர் விருந்து ஆரம்பம். எல்லாப் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒவ்வொருவராய் வந்து சேர எப்படியும் ஏழரை ஆகிவிடும். நாம் இந்த சிவப்புப் பொத்தானை அழுத்த வேண்டிய நேரம்... சரியாய் ஏழு முப்பது...!"

## 51

ஷஃபீக் அஹமத் மருதிக்குள் திரும்பியதுமே ஆவேசத்தோடு குறுக்கும் நெடுக்கும் நடந்தார்.

ஒரு பெரிய ஆபத்திலிருந்து தப்பித்த உணர்வோடு ஹாஜி இருக்கையில் சாய்ந்து நெஞ்சைத் தடவிக் கொண்டார்.

"வெறும் டிடெக்டர் கருவியை நம்பியிருந்தால் நாம் ஏமாந்திருப்போம். க்ராஸ்செக் போல ஜானியையும் நீங்கள் பயன்படுத்தியது நல்லதாய்ப் போயிற்று. ஜானி மோப்பம் பிடித்திருக்கா விட்டால்... நம்முடைய நிலைமை... யோசித்துப் பாருங்கள் ஷஃபீக்."

ஷஃபீக் அஹமத் கர்ஜித்தார்.



"ஆமாம். நீங்கள் சந்தேகப்பட்டது சரியாகப் போய்விட்டது. அந்த இந்திய நாய்கள் நம்மையே பதம் பார்க்க நினைக்கிறார்கள். இந்த ஷஃபீக் அஹமத் யாரென்பதை அவர்கள் புரிந்து கொண்டே ஆகவேண்டும்."

"என்ன செய்யப் போகிறீர்கள்...?"

"அந்தக் கதவைக் கொஞ்சம் சாத்துங்கள்..."

ஹாஜி இருக்கையை விட்டு எழுந்தார். கதவைச் சாத்தித் தாளிட்டு விட்டுத் திரும்பினார்.

"எதற்காகக் கதவைச் சாத்தச் சொல்கிறீர்கள்...?"

"பேச வேண்டும்."

"என்ன?"

"கூண்டோடு தப்பிக்கலாம் என்று திட்டம் இட்டிருந்தேன். ஆனால் இந்திய ராணுவம் காலை வாரிவிட்டது. இனிமேல் அந்தத் திட்டத்தை நம்பிப் பயனில்லை..."

"அதனால்?"

"அதனால்... ஒரு புதிய திட்டம் என் மனதில் உதித்து இருக்கிறது. ஆனால் இந்தத் திட்டத்தில் கூண்டோடு தப்பிக்க நினைத்தால் நாம் மாட்டிக் கொள்ளும் வாய்ப்புகள் அதிகம். அதனால் நாமிருவர் மட்டும் தப்பிச் செல்லப் போகிறோம்."

"எப்படி?"

"சுரங்க வழியைப் பயன்படுத்தி கல்லறை மயானம் வழியாக நாம் வெளியேறப் போகிறோம்."

"நாமிருவர் மட்டுமா?"

"ஆமாம்..."

"இது துரோகமில்லையா?"

"இல்லை. அவர்களெல்லாருமே தற்கொலைப் படையினர். உயிரைத் துச்சமாக மதித்துத்தான் இந்தப் பணியில் சேர்ந்தவர்கள். இவர்களைப் போல ஆயிரம் போராளிகள் கிடைப்பார்கள். ஆனால் ஷஃபீக் அஹமதைப் போல ஒரு மாஸ்டர் ப்ரெயின் அவ்வளவு சுலபத்தில் சாகக்கூடாது. இந்தப் போராட்ட வாழ்க்கையில் எனக்கு இன்னும் எத்தனையோ பணிகள் பாக்கி இருக்கின்றன."

"என்னை ஏன் சேர்த்துக் கொண்டீர்கள்...?"

"உங்களை விட்டுவிட்டு நான் மட்டும் தப்பிச் சென்றால் அதுதான் துரோகம். இந்த ஷஃபீக் அஹமத் அதை என்றுமே செய்ய மாட்டேன். நாம் உடனே

சுரங்கப் பாதை வழியே கல்லறை மயானத்தை அடைகிறோம். அங்கிருந்து வெளியேறுகிறபோது நான் பழி வாங்கப் போகிறேன்."

"எப்படி?"

"கல்லறை மயானத்தில் வெளியேறியதுமே - ரிமோட் மூலமாய் மருந்தியைத் தரைமட்டமாக்கப் போகிறேன். அதே விநாடி கல்யாண் ராஷ்ட்ரபதி பவனையும் ஏரோ நாச் ஆபரேஷன் மூலமாய்த் தகர்த்து விடுவான். ஆகவே, நான் சும்மா போகவில்லை. போகும்போது இந்தியாவுக்கு ஒரு மாபெரும் நாசம் விளைவித்து விட்டே போவேன். அதுவே எனக்கு மிகப்பெரிய வெற்றி."

ஒரு அடிபட்ட பாம்பின் சீற்றத்துடன் இரைந்தார் ஷஃபீக் அஹமத்.

## 52

**ரா**ஷ்ட்ரபதி பவன்.

நேரம் ஏழைக் கடந்து இருக்க - தேசியக் கொடியை பாணட்டில் பறக்க விட்ட அரசாங்கக் கார்கள் சர் சர்ரென வரிசையாய் நுழைந்து போர்டிகோவில் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொத்துக் கொத்தாய் உதிர்த்துவிட ஆரம்பித்தன.

குர்தா - பைஜாமாவிலும், குல்லாவிலும் பொதிந்த அரசியல் ஆட்கள் உள்ளூர் பாஷையில் - பிடிக்காத ஆட்களை சுவாரஸ்யமாய்த் திட்டி சந்தோஷித்தபடியே - தேநீர் விருந்து நடக்க இருந்த ஹாலுக்குள் பிரவேசித்துக் கொண்டிருந்தார்கள்.

நேரம் ஏழுமணியை நெருங்கினபோது - கணிசமாய்க் கும்பல் நிறைந்திருந்தது.

ஜனாதிபதி செயற்கைப் பற்களால் புன்னகைத்து மைக்கைப் பிடித்தார்.

"பாராளுமன்றப் பிரமுகர்களே..! உங்கள் அத்தனை பேரையும் இங்கே ஒரு சேரச் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி கொள்ளுகிறேன். என்னுடைய பதவிக்காலம் இன்னும் ஒரு மாதத்தில் முடியப் போகிறது. இத்தனை நாளும் எனக்கு நீங்கள் நல்கிய சிறப்பான ஒத்துழைப்பைக் கவுரவிக்கும் வகையில் இந்தத் தேநீர் விருந்தை உங்களுக்கு அளிப்பதில்



பெரிதும் உவகை கொள்கிறேன்..."

முதல் கோப்பையை எடுத்து பிரதமரின் கையில் தந்தார் ஜனாதிபதி. எல்லோரும் கைகளைத் தட்டினார்கள்.

அங்கே -

உற்சாகம் துல்லியமாய்ப் பரவியிருந்தது.

நேரம் 7.05.

## 53

**ஹா**ஜி டார்ச் லைட்டைப் பிடித்திருக்க - ஷஃபீக் அஹமத் ஒரு கையில் துப்பாக்கியையும், இன்னொரு கையில் ரிமோட்டையும் தாங்கிக் கொண்டு - அந்த சுரங்கப் பாதை வழியே நடந்தார்கள்.

தூசி படர்ந்த படிக்கட்டுகள்.

நூலாம்படைகளை விலக்கிக் கொண்டே மெல்லிய வெளிச்சத்தில் நடந்தார்கள்.

சில நிமிஷ நிசப்தமான நடையின் முடிவில் ஒரு குறுகிய படிக்கட்டு வரிசை மேலேறிச் சென்றது.

மெல்ல அதில் உயர்ந்த ஹாஜி - நீளமான இரும்புச் சாவியைப் போட்டு - ஒரு கனமான பூட்டைத் திறந்தார்.

கல்லறைக் கதவு மேலேறியது. வியர்த்த முகங்களோடு - ஹாஜியும், ஷஃபீக் அஹமதும் மேலே வந்தார்கள்.

மரங்கள் இருட்டில் ஆடிக் கொண்டிருந்தன. காய்ந்த சருகுகள் காற்றில் பறப்பது தூரத்து சோகை பல்பின் மெலிதான வெளிச்சத்தில் தெரிந்தது.

கல்லறைக் கதவை மூடினார் ஷஃபீக் அஹமத்.

ஷஃபீக் அஹமதின் சிவந்த கண்கள் உள்ளங்கையில் உட்கார்ந்திருந்த ரிமோட் கண்ட்ரோலைப் பார்த்து மேலும் சிவந்தன. வலது ஆட்காட்டி விரல் ரிமோட்டின் விசைப் பொத்தானை நோக்கி நீண்டது.

"அழிவை ஆரம்பிக்கலாமா... ஹாஜி...?"

"ம்... ஆரம்பியுங்கள் ... பார்த்து ஆனந்திக்கலாம்."

ஷஃபீக் அஹமது பட்டன் மேல் கைவைத்த - அந்தக் கடைசி விநாடியில் - ஒரு கை சட்டென்று

நீண்டு ரிமோட்டைத் தட்டி விட்டது. அதிர்ந்தார்கள். திரும்பிப் பார்த்து திடுக்கிட்டார்கள்.

''ஜரீனா...?'' பதறினார் ஹாஜி. ''நீ எங்கே இங்கே வந்தாய்..?''

அவர் கேட்கிறபோதே -

பளீர் பளீரென்று நாலா பக்கமும் ஃப்ளாஷ் விளக்குகள் உதயமாயின. கோபத்தோடும் பதட்டத்தோடும் சுற்றிலும் பார்த்தார்கள் ஷஃபீக் அஹமதும், ஹாஜியும்.

இந்திய ராணுவ வீரர்கள் நீட்டிய துப்பாக்கிகளோடு நின்றிருந்தார்கள்.

கீழே விழுந்து கிடந்த ரிமோட்டை லெப்டினன்ட் ராஜப்பா சர்வ ஜாக்கிரதையாய்ப் பொறுக்கிக் கொண்டிருந்தார்.



## 54

மணிக்கட்டை உயர்த்தி - வாட்சைப் பார்த்தான் கல்யாண்.

7.14...

7.16...

7.18...

7.20...

என்ஜினியர்களைப் பார்த்துப் புன்னகைத்தான்.

''இன்னும் பத்தே நிமிஷங்கள் பொறுங்கள்.''

நிமிஷங்கள் மெல்ல... மெல்லக் கரையத் துவங்கின. ஏரோநாக் சீற விசுவாசமாய் காத்துக் கொண்டிருந்தது.



## 55

ஒரு மிலிட்டரி கூடாரத்தில் பலத்த பாதுகாப்போடு கை விலங்குகளால் பிணைத்து சிறைப்படுத்தப் பட்டார் ஷஃபீக் அஹமத்.

ஹாஜி, '' ஜரீனா.. நீயே எங்களுக்குத் துரோகம் செய்து விட்டாயே...'' என்று புலம்பிக் கொண்டிருந்தார். கண்களில் கோபம் தத்தளித்தது.

ஜரீனா அவரை நேர்ப் பார்வையில் பார்த்துச்



சொன்னாள்.

''நாம் புனிதமாய் வழிபடும் மசூதியையே வெடிகுண்டுகளால் தகர்க்கத் துணிந்த ஷஃபீக் அஹமதைப் போன்ற ஆசாமிகளுக்கு உண்மையான முஸ்லிம்கள் யாரும் துணை போக மாட்டார்கள். வாப்பா... மசூதிக்குக் கீழே பதுங்கிக் கொண்டு தீவிரவாதம் செய்யும் இவர்களை ஆரம்பத்திலிருந்தே எனக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. நீங்கள் நண்பன் என்று சொல்லிக் கொண்டு இவனுக்கு முழு ஆதரவு அளித்து வந்தபோது நான் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தவித்தேன். ஷஃபீக் அஹமதின் மேலிருந்த வெறுப்பை வெளிக்காட்டினால் அந்த நிமிஷமே என்னைத் தீர்த்துக் கட்டக்கூடத் தயங்காத கயவன் இவன் என்பது எனக்குத் தெரியும். ஆகவே, ஒவ்வொரு முறையும், உணவு கொண்டு வரும்போது - இந்தியாவைத் திட்டுகிற மாதிரிப் பேசி அவர்களுக்கு சந்தேகம் வராமல் பார்த்துக் கொள்வேன். அங்கே நீங்கள் தீட்டுகிற சதித்திட்டங்களெல்லாம் எனக்கு நன்றாகத் தெரிந்தாலும் அதை எப்படி வெளியே சொல்வதென்று புரியாமல் நான் தவித்துக் கொண்டு இருந்தேன்.

''இந்திய ராணுவத்தின் சிறப்பு கமாண்டோக்கள் மசூதிக்குள் ஊடுருவப் போவதை அறிந்தபோது சந்தோஷமடைந்தேன். அவர்கள் மூலமாக இவர்களின் கொடூர சதிகளைப் பற்றி ராணுவத்துக்குத் தகவல் தரலாம் என்று எண்ணினேன். ஆனால் சூர்யப்பிரகாஷும், தயானந்தும் இவர்களுடைய கைப்பாவைகள் என்று அறிந்ததும் மனம் உடைந்து போனேன். இதற்கிடையே வயர்லெஸ்ஸை தனியே இயக்கிப் பேச - நான் கற்றுக் கொண்டுவிட்டேன்.

''டெட்லி பால்' திட்டம் உட்பட எல்லாவற்றையும் இந்திய ராணுவத்துக்கு உளவு சொல்லி வந்தேன். இதைக் கண்டுபிடித்த சூர்யபிரகாஷையும், தயானந்தையும் சுட்டு வீழ்த்திவிட்டு ஓடிவிட்டேன். நான் ஹாஜியின் மகள் என்பதால் யாரும் என்னை சந்தேகப்படவில்லை. நான் ஒரு முறை உளவு சொன்னபோது பேச்சு க்ராஸ்டாக் ஆனதும், பத்திரிகைகள் பிரசுரித்ததும் இங்கே முற்றுகை நடந்ததும் உங்களுக்குத் தெரிந்த விஷயம்தான்''

ஜீனா பேச்சை நிறுத்த லெப்டினென்ட் ராஜப்பா புன்னகையுடன் தொடர்ந்தார்.

"ஜீனா அதிகம் படிக்காதவள் என்றாலும் அவளின் தேசபற்று திகைக்க வைக்கிறது. மதப்பிரச்சினையை வளர்த்து அதில் குளிர் காய நினைத்த தீவிரவாதிகளின் கூடவே இருந்தாலும் - கொஞ்சமும் மூளை சலவையாகி விடாமல் தேசத்தைக் காக்கத் துணிந்த அவளுடைய வீரம் மெய்சிலிர்க்க வைக்கிறது. இந்தப் பெரிய சதி முறியடிப்பில் இவளின் பங்கு பெரிது."

"ஸார்... மணி ஏழரை" என்றாள் ஜீனா.

ராஜப்பா பரபரப்புடன் வயர்லஸ்ஸுக்கு ஓடினார்.

## 56

கல்யாணின் மணிக்கட்டு வாட்சில் முட்கள் ஏழரையைக் காண்பித்து நின்றன.

"ம்...!" என்றான் கல்யாண், கட்டை விரலை வளைத்தான்.

என்ஜினியர்களில் ஒருவன் ஏர் க்ராஃப்ட் கண்ட்ரோல் பேனலை நெருங்கினார்.

அந்த சிவப்பு நிற பொத்தான் இண்டிகேட்டரை ஆட்காட்டி விரல் அழுத்தியது.

ராக்கெட்டுகளை சுமந்த ஏரோ நாக் மைக்ரோ ஏர் க்ராஃப்ட் பெரிய இரைச்சலோடு காற்றைக் கிழித்தபடி புறப்பட்டது.

## 57

லெப்டினென்ட் ராஜப்பா வயர்லஸ்ஸில் பேசிக் கொண்டிருந்தார் உற்சாகமாய்.

"அப்படியா...?"

"........"

"வெரிகுட்...."

"........"

"வெல்டன்."

"என்னாயிற்று?"

ஜீனா ஆர்வமாய்க் கேட்டாள்.

"ராஷ்ட்ரபதி பவனுக்கு வந்த ஆபத்து ஒரு வழியாய் முறியடிக்கப்பட்டது."



முகம் கறுத்துப் போய் நின்றிருந்த ஷஃபீக் அஹமதைப் பார்த்துப் புன்னகைத்தார் ராஜப்பா.

"நீங்கள் ராஷ்டிரபதி பவனுக்குக் குறி வைத்து ஒரு மிசைல் அனுப்பப்போவது ஜீனா மூலமாய்த் தெரிந்தது. ஆனால் எங்கிருந்து இலக்கைத் தாக்கப் போகிறீர்கள் என்பது தெரியவில்லை. அதனால் ராஷ்டிரபதி பவனுக்கு பத்து கிலோ மீட்டர் சுற்றளவுக்கு முன்னால் இருந்தே ராடார் பாதுகாப்பைப் பலப்படுத்தினோம். ஆன்ட்டி மிசைல் ஏர் க்ராஃப்ட்களை ஏர்ஃபோர்ஸ் தயார் நிலையில் வைத்திருந்தது. ஏழரை மணிக்கு எந்தத் திக்கில் இருந்து ராஷ்டிரபதி பவனுக்கு ஆபத்து வந்தாலும் அதைப் பாதியிலேயே தகர்த்து எறியத் தயாராயிருந்தது ஏர்ஃபோர்ஸ்! அதே மாதிரி, வந்த ஆபத்தை ஒரு பொட்டல் வெளிக்குத் திருப்பிவிட்டும் ஆயிற்று"

சொல்லி முடித்த ராஜப்பாவின் முகத்தில் - ஒரு மசூதியைக் காப்பாற்றி விட்ட மகிழ்ச்சியும் பெருமிதமும் - ஒரு 70 எம்.எம். புன்னகையாய் மலர்ந்தது.

**பின் குறிப்பு:** மசூதிக்குள்ளிருந்த மற்ற தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டதும் அப்பாவி ஹாஜிக்களும், சிறைப்பட்ட ராணுவ ஆபீசர்களும் விடுவிக்கப்பட்டு, மசூதி மீட்கப்பட்டதும் - சேது தூர்க் மலைப்பகுதியில் வைத்து கல்யாணும், மற்ற ஆட்களும் கைது செய்யப்பட்டதும் - மறுநாளின் பத்திரிகைகளில் முதல் பக்க செய்திகள்.

* * *

ஜீயே பப்ளிகேஷனுக்காக ஜீயே பப்ளிகேஷனில்
அச்சிட்டு (பிரஸ்) வெளியிடுபவர் மற்றும் உரிமையாளர்
ஜி. அசோகன். முகவரி: 332, திருவல்லிக்கேணி
நெடுஞ்சாலை, சென்னை - 5.
தொலைபேசி: 28544294
ஆசிரியர்: ஜி. அசோகன்.